பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | சித்திரை 30 ஞாயிற்றுக்கிழமை 13.05.2018 | கதிர் 188

## நீர்வேலி வாள்வெட்டு: மேலும் இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 13

நீர்வேலியில் கோவிலில் வைத்து இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் மேலும் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாவற்குழியைச் சேர்ந்த இரு

பக்கம் 18 »

# காணாமற்போனோர் செயலகம் வெறும் கண் துடைப்பு நாடகம்

## மன்னார் சென்ற விசாரணைக் குழுவுக்கு முகத்தில் அடித்தாற்போல மக்கள் பதில்





மன்னார், மே 13

**"காணாமற்போனோர் தொடர்ப்பில் ஆராய்வதற்காக எத்தனை குழுக்கள் நியமிக்கப்பட்டாலும் - எத்தனை அலுவலகங்கள் திறக்கப்பட்டாலும் - அவை மூலம் எமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை அறவே இல்லை.இது வெறும் கண் துடைப்பு நாடகம் மட்டுமே."**

பக்கம் 18 »

## வடமாகாண சபை தேர்தல் நவம்பரில்

கொழும்பு, மே 13

வடக்கு, கிழக்கு உட்பட 6 மாகாண சபைகளுக்கு எதிர்வரும் நவம்பரில் தேர்தலை நவம்பரில் நடத்த அரசு தீர்மானித்துள்ளதாக உயர்மட்டத் தகவல் தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கான வேட்புமனுக் கோரல் எதிர்வரும் செப்ரெம்பரில் அறிவிக்

பக்கம் 18 »

## பொருள்கள் விலை உயர்வு மக்களுக்குப் பெருஞ்சுமை



### மஹிந்த சாடல்

கொழும்பு, மே 13

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரித்ததன் மூலம் மக்களின் வாழ்க்கைச் சுமை மேலும்

பக்கம் 18 »

## ஒஸ்மானியாக் கல்லூரி அருகே ஹோட்டல் அமைக்க எதிர்ப்பு

### உடன் தலையிட்டுப் பணிகளை நிறுத்தியது யாழ். மாநகர சபை



யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அண்மையாக ஹலீமா வீதியில் சகல அனுமதிகளும் பெறப்பட்டுக் கட்டடம் அமைக்கும்

பக்கம் 18 »

## உறவுகளின் துயரங்களை நேரில் உணர்ந்துள்ளோம்

### சாலிய பீரிஸ் தெரிவிப்பு



மன்னார், மே 13

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்தித்து அவர்களின் துயரங்களை நாம் நேரில் உணர்ந்து கொண்டோம். இது எமக்கு

பக்கம் 18 »

## ராணுவத்தில் தமிழர் இணைவது துரோகம்

### கூறுகிறார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், மே 13

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னர் சிங்களப் படைகளுக்குத் துணைப் படைகளாகத் தமிழ் இளைஞர், யுவதிகள் இணைந்து கொள்வது தமிழ் இனத்துக்கும் அதற்காக மரணித்தவர்க

பக்கம் 18 »

## முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் நேற்றுச் செம்மணியில் ஆரம்பம்




யாழ்ப்பாணம், மே 13

தமிழினப் படுகொலையான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதல் நாள் நினைவேந்தல் செம்மணிப் படுகொலைப் புதைகுழிக்கு அருகே நேற்றுக் காலை கடைப்பிடிக்கப்பட்டது.

மே12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை தமிழினப் படுகொலை வாரம் கடைப்பிடிக்கப்ப

பக்கம் 18 »

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இழுபறி நிலை இன்னும் நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை வடக்கு மாகாண சபை தலைமையேற்று நடத்துவதா அல்லது யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடத்துவதா என்பது தொடர்பில் இழுபறிநிலை நீடிக்கின்றது.

நேற்று மாலை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரனுக்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் போது இது குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

சந்திப்பு தொடர்பில் முதலமைச்சர் ஊடகங்க

பக்கம் 18 »

அல்ல!

தமிழ் சினிமாவில் ஒரு 'கொமடி' நம் மத்தியில் சிலாகித்துப் பேசப்படுவதுண்டு. வடிவேல் சம்பந்தப்பட்ட நகைச்சுவை அது.

*"வரும்... ஆனால் வராது!"* என்ற பகிடி தான் அது.

'தொட்டால் பூ மலரும்' என்ற சினிமா படத்தில் வரும் காட்சி.

பக்கம் 03 »

# அவன்ட் கார்ட் தலைவரிடம் கையூட்டு பெற்றனராம் 30 பொலிஸ் அதிகாரிகள்

கொழும்பு, மே 13

அவன்ட் கார்ட் பாதுகாப்புச் சேவை நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதியிடம் 300இற்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகள் பணம் பெற்று வந்துள்ளனர் என்பது விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

முன்னைய ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதி, தம்மிடம் பணம் பெற்ற 300 இற்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகளின் பட்டியலை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கியுள்ளார்.

இதில், குற்றப் புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர்.

நிசங்க சேனாதிபதியிடம் பணம் பெற்ற பொலிஸ் அதிகாரிகள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவர்களிடம் வாக்குமூலங்கள் பெறும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# பெண் பணியாளர்களுக்கு 84 நாள் பிரசவ விடுமுறை

பெண் பணியாளர்களுக்கான பிரசவ விடுமுறையை 84 நாள்களுக்கு நீடிப்பதற்கான இரண்டு திருத்தச் சட்டப் பிரேரணைகளை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

தற்போதுள்ள சட்டங்களின் படி, பெண்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்காக, 42 நாள்கள் விடுமுறையை மாத்திரம் பெற்றுக் கொள்ள முடியும்.

முதல் இரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம், 84 நாள்கள் பிரசவ விடுமுறையைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, இரண்டு திருத்தச் சட்டப் பிரேரணைகளின் படி, உயிருடன் உள்ள ஒவ்வொரு குழந்தைக்குமாக, 84 நாள்களைப் பிரசவ விடுமுறையாக, எடுத்துக் கொள்ளலாம்.



இந்த 12 வார விடுமுறையில், இரண்டு வாரங்கள் பிரசவத்துக்கு முன்னரே எடுத்துக் கொள்ளலாம். பிரவசத்துக்கு முந்திய இரண்டு வாரங்களும் அவர் பணியாற்றியிருந்தால், பிரசவத்துக்குப் பிந்திய 10 வாரங்களுக்கு பின்னர் அந்த விடுமுறையை எடுத்துக் கொள்ளலாம்.

பிரசவத்தின் பின்னர் குழந்தை உயிருடன் இல்லாத சந்தர்ப்பத்தில், 42 நாள்கள் விடுமுறையை எடுத்துக் கொள்ளலாம்.

இந்த பிரசவ விடுமுறை ஊதியத்துடன் வழங்கப்படும். விடுமுறை நாள்கள் மற்றும் ஏனைய ஆண்டு விடுமுறைகளுக்கு மேலதிகமாக இது வழங்கப்படும். (ஐ)



# மிருசுவில் படுகொலை நினைவேந்தல் நேற்று

யாழ்ப்பாணம், மே 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதலாம் நாள் நிகழ்வின் இரண்டாவது சுடரேற்றும் நிகழ்வு தென்மராட்சி மிருசுவில் புனித நிக்கலஸ் தேவாலயத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

மிருசுவில் கிராமத்தில் 2000ஆம் ஆண்டு டிசெம்பர் 20ஆம் திகதி இராணுவத்தினரால் குழந்தைகள் உட்பட 8 பேர் படுகொலை செய்யப்பட்டு மலசல கூடக் குழிக்குள் போடப்பட்டிருந்தனர்.

கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்ந்து நேற்று நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில், வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவர் க.வாமதேவன், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# பண கடத்தல் முறியடிப்பு; இரண்டு பேர் கைதாகினர்

இலங்கையில் இருந்து சிங்கப்பூருக்குச் சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நாயணயத்தாள்களைக் கொண்டு செல்ல முற்பட்ட இருவரைக் கட்டுநாயக்க சுங்கப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொழும்புப் பகுதியைச் சேர்ந்த 55 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரும் 30 வயதுடைய பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் 72,000 அமெரிக்க டொலர்களைத் தமது பயணப் பொதியில் மறைத்து வைத்துக் கொண்டு செல்ல முற்பட்டுள்ளனர். இதன் இலங்கைப் பெறுமதி சுமார் ஒரு கோடி 11 இலட்சம் ரூபா எனச் சுங்கத் திணைக்கள ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயவர்தன குறிப்பிட்டார்.

சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைக் கட்டுநாயக்க பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# வன்னேரிக்குளம் நெல் காய்தளம் அமைக்க மீண்டும் முட்டுக்கட்டை

## அரசியல் தலையீடே காரணம் என்கின்றார் விவசாய அமைச்சர்

முல்லைத்தீவு, மே 13

வன்னேரிக்குளம் பிரதேசத்துக்கான நெல் காய்தளம் அமைக்கும் பணி மீண்டும் தடைப்பட்டுள்ளது. இம்முறை அது அரசியல் தலையீடு காரணமாகவே தடைப்பட்டுள்ளது என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன் தெரிவித்தார்.

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்துக்கு வடக்கு மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் நெல் காய்தளம் அமைப்பதற்கு 2017 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டது. அப்போது தளம் அமைப்பதற்கான பொருத்தமான நிலம் இன்மையால் அந்த நிதி திரும்பிச் சென்றது.

இதனைத் தொடர்ந்து நெல் காய்தளம் அமைப்பதற்குக் குஞ்சுக்குளம் கமக்கார அமைப்பு கோரிக்கை விடுத்து கமக்கார அமைப்பின் தலைவர் தனது சொந்தக் காணியின் ஒரு பரப்பை உரிய முறைப்படி பொதுத் தேவைக்கு வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் மீண்டும் இந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டு அந்தக் காணியில் நெல் காய்தளம் அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கல், மணல் இறக்கப்பட்டு அத்திபாரமும் வெட்டப்பட்டது.



இந்நிலையில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலையீடு காரணமாகவும், அவர் விவசாயத் திணைக்கள அதிகாரிகளைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமையாலும் நெல் காய்தளம் அமைக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

நெல் காய்தளம் அமைக்கும் பணி இரண்டாவது தடவையாக உரிய முறைப்படி மேற்கொள்ளப்பட்டது. இருந்தும் காணியை இதற்காக வழங்கிய நபர் தனக்கெதிரான அரசியல் தரப்பைச் சார்ந்தவர் என்ற காரணத்தால் மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலையிட்டுப் பணிகளுக்கு இடையூறு விளைவித்தமையால் இரண்டாவது தடவையாகவும் வன்னேரிக்குளத்துக்கான நெல் காய்தளம் அமைக்கும் பணி தடைப்பட்டுள்ளது.-என்றார்.

இது தொடர்பில் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு வினவியபோது அவர்களும் அமைச்சரின் கருத்தை உறுதிப்படுத்தியதோடு, அந்தத் தளத்தைத் தற்போது பூநகரி அல்லது புளியம்பொக்கனைப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன எனவும் கூறினர். (ஐ-70)

# தெல்லிப்பளை பொதுநூலகம் இரவு 8 மணி வரை திறப்பு

யாழ்ப்பாணம், மே 13

மாணவர்களினதும் பொதுமக்களினதும் நலன் கருதித் தெல்லிப்பளை பொது நூலகம் இரவு எட்டு மணி வரை திறக்கப்படுவதாக வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வாசகர்கள் நன்மை கருதி மேலதிக கொடுப்பனவுகள் எதுவுமின்றித் தெல்லிப்பளை நூலகத்தில் கடமையாற்றும் நூலகர் இரவு எட்டு மணி வரை கடமையாற்றுவதாகவும், இவரது சேவையை மக்கள் மனம் திறந்து பாராட்டுவதாகவும் சுகிர்தன் மேலும் கூறினார். (ஐ)

# ஊடகவியலாளர் கைதாகிப் பிணை

ஊடகவியல்ாளர் உபாலி தென்னக்கோன் கடத்தல் வழக்கின் சந்தேகநபரின் ஒளிப்படத்தைப் பிரசுரித்தமை தொடர்பாக, திவயின சிங்கள நாளிதழின் ஊடகவியலாளர் சமன் கமகே கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ரிவிர இதழின் ஆசிரியர் உபாலி தென்னக்கோன் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்திய ஒளிப்படம் திவயின மற்றும் இணையத்தளங்களில் வெளியானமை குறித்து விசாரிக்கக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு, கம்பஹா நீதிமன்ற நீதிவானாக இருந்த கவீந்திர நாணயக்கார உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து, 2016 செப்ரெம்பர் 09 ஆம் திகதி திவயின ஊடகவியலாளர் சமன் கமகே விசாரணைக்கு முன்னிலையாகியிருந்தார். அதற்குப் பின்னர் அவர் விசாரணைகளுக்கு முன்னிலையாகவில்லை.

சமன் கமகே விசாரணைக்கு முன்னிலையாகாத நிலையில் அதுபற்றி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கு நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியிருந்தனர். இதையடுத்து, கடந்த வியாழன் இரவு அவரைக் கைது செய்த குற்றப் புலனாய்வுப்பிரிவினர், நேற்று முன்தினம் கம்பஹா நீதிமன்றத்தில் நிறுத்தினர்.

அவரைப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், ஜூன் 29ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவிட்டார். (ஐ)

# அரியவகை வலம்புரிச் சங்குடன் வவுனியாவில் இருவர் சிக்கினர்!

வவுனியா, மே 13

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் வைத்து அரியவகை வலம்புரிச் சங்குடன் இரு இளைஞர்களை வவுனியாப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுமார் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் பெறுமதியான இந்த வலம்புரிச் சங்கைக் கிளிநொச்சியில் இருந்து தம்புள்ளைக்கு விற்பனைக்காகக் கார் ஒன்றில் கொண்டு சென்றபோதே மன்னார் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த 21,24 வயதுகளை உடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் காரும் கைப்பற்றப்பட்டுள்ளது.



இது தொடர்பான விசாரணைகளை வவுனியா மது ஒழிப்பு மற்றும் போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ-100)

காலைக்கதிர்



# உயிராபத்தை ஏற்படுத்தும் வெடிபொருள்களை அகற்றுக!

## முகமாலை மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 13

மக்கள் மீள்குடியேறிய பிரதேசங்களை அண்மித்து உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் காணப்படுகின்ற வெடிபொருள்களை அகற்றுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி, முகமாலைப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாது வெடிபொருள்கள் அகற்றுவதில் சவால் நிறைந்த பகுதியாக காணப்படும் முகமாலைப் பகுதியில் வெடிபொருள்கள் அகற்றப்படாமையினால் 300 இற்கும் மேற்பட்ட 'குடும்பங்கள் இதுவரை மீள்குடியேற்றப்படாமல் கடந்த 19 வருடங்களிற்கு மேலாக வாடகை வீடுகளிலும் பிற மாவட்டங்களிலும் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற பகுதிகளில் வெடிபொருள்களை அகற்றி தம்மை விரைவாகக் குடியேற்றுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கையினை அவர்கள் முன்வைத்திருந்தனர்.

யுத்தத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்களும் பரஸ்பரம் தொடர்ந்து சண்டையிட்ட பகுதியாகவும் அதிகளவு ஆபத்தான வெடிபொருள்களைப் புதைத்த ஓர் பகுதியாகவும் இது காணப்படுவதனால் இந்தப் பகுதிகளில் வெடிபொருள்களை அகற்றுவதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதாக இப்பகுதிகளில் வெடிபொருள் அகற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மேற்குப்புறமான முகமாலை இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த தாங்களை மீள்குடியேற்றுமாறு இந்தப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதாவது, கடந்த2000ஆம் ஆண்டு இந்தப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த தாங்கள், கடந்த 19 வருடங்களாகச் சொந்த ஊரில் வாழமுடியாது அகதிகளாக அலைகின்றனர் எனவும் இந்தப்பகுதிகளில் காணப்படுகின்ற வெடிபொருள்களை அகற்றி விரைவாக தம்மை மீள்குடியேற்றுமாறு பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## இரத்தினம் நினைவு தினம்

மக்கள் தொண்டன் பொ.செல்வரத்தினம் (இரத்தினம்) அவர்களின் 18ஆவது ஆண்டுநினைவு தினமும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல் கலைமதி சனசமூக நிலையத் தலைவர் தோழர் சபா. தவராசா (குமார்) தலைமையில் நடைபெறும்.

புதிய ஜனநாயக மார்க்ஸிஸ லெனிஸக் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் நினைவுரையும், மட்டக்களப்பு தேசியக் கல்வியியல் கல்லூரி பீடாதிபதி தோழர் சிவ.இராசேந்திரன் சிறப்புரையும் ஆற்றுவர்.

ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் தோழர் மு.இராசநாயகம், தொழிலதிபத் ஐ.மகேந்திரன், புத்தூர் சோமஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை உப அதிபர் வ.சந்திரகுமார், வலி கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் தோழர் செல்வம் கதிர்காமநாதன், கலைமதி கல்விக் கழகச் செயலாளர் ச.சயந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

# வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு

கிளிநொச்சி, மே 13

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேசத்தில் குடும்பங்களுக்கான வறட்சிக்கான உலர் உணவு மற்றும் குடிதண்ணீர் விநியோகங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் வறட்சி நிலைமைகள் தொடர்பில் கருத்துத்தெரிவிக்கும் போதே கரைச்சிப்பிரதேச செயலர் இவ்வாறு கூறினார்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட 1088 குடும்பங்களுக்கு வறட்சிக்கான உலர் உணவுகளும், 278 குடும்பங்களுக்கு குடிதண்ணீரும் வழங்கப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்தார்.

அதன்பிரகாரம், அக்கராயன் குளம் பிரதேசத்தில் - 465 குடும்பங்களுக்கும், பொன்னகர் பகுதியில் 142 - குடும்பங்களுக்கும், பாரதிபுரம் பகுதியில் - 130 குடும்பங்களுக்கும், மலையாளபுரம் பகுதியில் - 45 குடும்பங்களுக்கும், விவேகானந்தநகர் பகுதியில் - 10 குடும்பங்களுக்கும், கிருஷ்ணபுரம் பகுதியில் - 234 குடும்பங்களுக்கும், உதயநகர் கிழக்குப்பகுதியில் - 05 குடும்பங்களுக்கும், அம்பாள்நகர் பகுதியில் - 220 குடும்பங்களுக்கும், கணேசபுரம் பகுதியில் - 27 குடும்பங்களுக்கும் உலருணவு, குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# கார் - மோ. சைக்கிள் விபத்தில் சாவகச்சேரியில் இருவர் காயம்



யாழ்ப்பாணம், மே 13

சாவகச்சேரிப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் காரும் மோதியதில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்தவர்களான சந்திரகுமார் கஜீபன் (வயது-23), கிருஷ்ணகுமார்.நிருஜன் (வயது-15) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ)

# விளாத்திக்குளத்தை புனரமைக்க கோரிக்கை

முல்லைத்தீவு, மே 13



முல்லைத்தீவு துணுக்காய் அனிஞ்சியன்குளம் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்ற விளாத்திக்குளத்தைப் புனரமைத்து அதன் கீழ் உள்ள விவசாய நிலங்களைப் பகிர்ந்தளிக்குமாறு இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள அனிஞ்சியன்குளம் பகுதியில் 850 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றபோதும் கூடுதலான குடும்பங்கள் அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு வாழ்ந்து வரும் மக்கள் தமக்கான பயிர்ச்செய்கை காணிகளைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு கோரி வருகின்றனர்.

அதாவது, அனிஞ்சியன்குளத்திற்கு மேலாக உள்ள கைவிடப்பட்டு சேதமடைந்து காணப்படுகின்ற விளாத்திக்குளத்தைப் புனரமைத்து அதன் கீழ் காணப்படுகின்ற வயல் காணிகளை வன இலாகாவிடம் இருந்து விடுவித்துத் தமக்குப் பகிர்ந்தளிக்குமாறு கோரியுள்ளனர்.

இந்தக் கோரிக்கை கடந்த மாதம் துணுக்காய் பிரதேசத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் முன்வைக்கப்பட்டதுடன், இந்த மக்களுடனான கலந்துரையாடல் ஒன்றும் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரயில் கட்டணங்களும் உயரும்

ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகப் போக்குவரத்து அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி ரயில் கட்டணங்கள் எதிர்வரும் மாதங்களில் 15 வீதத்தினால் அதிகரிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் விலை அதிகரிப்பை தொடர்ந்து பஸ் கட்டணங்கள் அடுத்த வாரத்தில் அதிகரிக் கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*"முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விவகாரத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கும், 'வடக்கு மாகாண சபைக்கும் இடையில் நீடிக்கும் இழுபறிக்கு முடிவு வருமா, வராதா?"* - என்று புலம் பெயர் தேசத்திலிருந்து ஓர் அன்பர் நேற்றிரவு எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்துக் கேட்டார்.

நான் அவருக்கு, அந்தப் படத்தில் வடிவேலுக்கு என்னத்தே கன்னையா பதில் கூறியபடி *'வரும்... ஆனா வராது...!'* என்று தான் பதில் கூறவேண்டியிருந்தது.

இந்தச் சர்ச்சைக்கு நேற்று மாலை கூட்டப்பட்ட கூட்டத்தில் தீர்வு காணப்படும் என்றார்கள்.

கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றும் மாகாண சபை நிர்வாகிகள் கலந்து கொண்டனர். யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்.

நீண்டநேர வாதப் பிரதிவாதத்துக்குப் பின்னர் கூட்டம் நடைபெற்று முடிந்ததும், கூட்டத் தீர்மானம் குறித்து எதுவுமே ஊடகங்களுக்குத் தெரிவிக்காமல் புறப்பட்டுவிட்டார் முதல்வர் விக்னேஸ்வரன்.

இவ்விடயத்தில் தான் சொல்லுகின்ற ஒரு சொல்லை வைத்துக் கொண்டு ஊடகங்கள் வேறு விதமாகத் திரித்துச் செய்தி வெளியிடுகின்றன என்ற ஆதங்கம் ஏற்கனவே அவருக்கு உண்டு. அதனால்தான் என்னவோ நேற்றுக் கூட்டம் முடிந்ததும் அது குறித்து ஊடகங்களுக்கு எதுவும் கூறாமல் - வழமைக்கு மாறாக - 'விசுக்' என்று புறப்பட்டுப் போய் விட்டார் முதல்வர்.

வெளியில் வந்த மாணவர்கள் தரப்பில் சிலர், தாங்கள் கோரிக்கைக்கு முதல்வர் இணங்கி விட்டுக்கொடுத்து விட்டார் என்ற சாயலில் 'கயிறு' விட்டனர்.

ஆனால், கூட்டத்தில் பங்குபற்றிய மாகாண சபை வட்டாரங்களோ அப்படி ஒன்றுக்கும் முதல்வர் விட்டுக்கொடுக்கவில்லை, தனது ஆரம்ப நிலைப்பாட்டில் அவர் உறுதியாக இருந்தார் என்று அடித்துக் கூறுகின்றன.

இந்த நிலையில் இந்தப் பிணக்குக்கு தீர்வு வந்துவிட்டதா? தீர்வு வருமா? - என்று என்னிடம் கேட்டால் நான் என்ன பதில் சொல்ல முடியும்? - என்னத்தே கன்னையா பாணியில் *'வரும்... ஆனா வராது...!'* என்று பதில் சொல்வதை விட...?

- மின்னல் -

# தென்னை மரங்களை தறிக்கக் கட்டுப்பாடு

கொழும்பு, மே 13

மரங்கள் தறிப்பு கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் தென்னை மரங்களும் கொண்டுவரப்படவுள்ளன. அதன்மூலம் தென்னை மரங்களைத் தறிப்பதாயின் அனுமதி பெறப்படவேண்டும் என்ற கட்டுப்பாடு நடைமுறைக்கு வரவுள்ளது.

தென்னை மரங்களைத் தறிப்பதற்குக் கட்டுப்பாடு விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மரங்கள் தறிக்கும் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் தென்னை மரத்தையும் உள்ளடக்க அமைச்சரவை அனுமதி பெறப்படவுள்ளது. அதன் பின்னர் தென்னை மரங்களைத் தறிக்க கட்டுப்பாடு கொண்டுவரப்படும்.

தற்போது பலா, ஈரப் பலா, கித்துள் உள்ளிட்ட மரங்கள் மரங்கள் தறிக்கும் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தறிப்பதற்கு அமைச்சிடம் அனுமதி பெறப்படவேண்டும் என்று பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயலாளர் ஜே.ஏ.ரஞ்சித் தெரிவித்தார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பொதுவேட்பாளர் சாத்தியமா?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றை ஒன்றிணைத்து மீண்டும் ஒரு பொதுவேட்பாளரைக் களமிறக்குவது தொடர்பான முயற்சியில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையிலான குழு ஒன்று ஈடுபட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இன்றைய நிலையில் இது அசாத்தியமான எத்தனம் என்று கூறப்பட்டாலும், இலங்கை அரசியலில் எதுவும், எச்சமயத்திலும் நேரலாம் என்பதுதான் – நடக்க முடியாதவை எல்லாம் நடக்கலாம் என்பதுதான் – நமது நாட்டின் பட்டறிவாக இருந்து வந்திருக்கின்றது.

ஏன், கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான சமயத்தில் கூட, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவை, அக் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளரான அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் பிரதான எதிர்க் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி உட்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து கூட்டாகக் களமிறக்கும் என்பது கூட நமக்கு நம்ப முடியாத விடயமாகத்தான் இருந்தது. ஆனால் எல்லாம் திடுதிப்பென – அதிசயம் போல – நடந்தேறின. சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளரைத் தோற்கடித்து அக்கட்சியின் அதிருப்தி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்று ஜனாதிபதியாக, அதை வைத்துக் கொண்டே கட்சியின் தலைமைப் பதவியையும், ஜனாதிபதி சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பிடுங்கிக் கொள்ளவில்லையா?

இப்போதும் கூட பொதுவேட்பாளர் என்ற முயற்சியை ஆரம்பித்திருக்கும் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூட சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்கு 'ஆயா ராம், காயா ராம்' மாதிரி மாறி மாறிப் புகுந்தவர்தான். இப்போதுதான் மீண்டும் முழு அளவில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இணைந்திருக்கின்றார். தமது இரு கட்சித் தொடர்புகள், நிலைப்பாடுகளை வைத்துக்கொண்டு இந்த முயற்சியை அவர் ஆரம்பித்திருக்கின்றார் போலும்.

பிரதான இரு தேசியக் கட்சிகளான ஐ.தே.கவையும், சுதந்திரக் கட்சியையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜனப் பெரமுனவும், அதனையும் சேர்த்து உள்ளடக்கிய கூட்டு எதிரணியும் தென்னிலங்கை அரசியல் வேகமாகப் பலம் பெற்று வரும் நிலையில் –

அந்த ஆபத்தின் பாதிப்பை இரு கட்சியினருக்கும் எச்சரிக்கையாகச் சுட்டிக்காட்டி, அதனடிப்படையில் பொதுவேட்பாளர் ஒருவரை ஒன்றிணைத்துக் களமிறக்குவது அவசியம் என்ற பாணியில் தான் தமது காய்களை அமைச்சர் ராஜித சேனாரத்ன குழு நகர்த்த வேண்டியிருக்கும்.

கடந்த பொதுத் தேர்தலில் 96 எம்.பிக்களைப் பெற்ற சுதந்திரக் கட்சி, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இன்று வெறும் 26 பேர் அணியாகச் சுருங்கிவிட்டது. சு.க. தரப்பில் எம்.பியானோரில் அரைவாசிக்கும் அதிகமானோர் மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட்டு எதிரணியில். எஞ்சியோரில் 16 பேர் தமது கட்சியினருடன் அரசுத் தரப்பில் அமராமல் எதிர்க்கட்சி வரிசையில். இந்தப் பின்புலத்தில் சுதந்திரக் கட்சியின் நிலைமையோ உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கட்டத்தில் போதாக்குறைக்கு நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஆக 14 வீத வாக்குகளையே அதனால் திரட்ட முடிந்தது.

இந்தச் சூழலில் அக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவே அடுத்த தேர்தலில் கட்சி வேட்பாளராகக் களமிறங்குவார் என அக்கட்சி கூறி வருகின்றது.

ஆனால், மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தனது கூட்டமைப்புக் கட்சிகளுடன் சேர்ந்து தான் அமைத்திருக்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளராகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் களமிறக்குவதில் உறுதியாகவுள்ளது. அதற்கான முஸ்தீபு நடவடிக்கைகளையும் அது ஆரம்பித்து விட்டது.

ஏற்கனவே 2010 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2015 ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றில் பொது வேட்பாளர் என அப்போதைய ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும், பின்னர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடம் விட்டுக் கொடுத்த ஐக்கிய தேசியக் கட்சி, மூன்றாவது தடவையும் அந்த இடத்தைப் பிறிதொரு கட்சிக்கு விட்டுக்கொடுக்கும் என்பது அசாத்தியமே.

அதுவும், கடந்த 24 வருடங்களாகச் சுதந்திரக் கட்சி ஜனாதிபதிகளின் ஆட்சியே தொடரும் சூழலில், அடுத்த ஆண்டு இறுதிக்குப் பின்னரும் – அதுவும் கால் நூற்றாண்டு கழிந்த பின்பும் – தனது கட்சிக்கு அப்பதவி கிட்டாமல் இருக்க அது இணக்கமாட்டாது என்பது திண்ணம்.

இன்றைய நிலையில், ஐ.தே.க. தரப்பை பொதுவேட்பாளராக ஏற்கும் முடிவைத் தவிர்ந்த வேறு எந்த மாற்று ஏற்பாட்டுக்கும் ஐ.தே.கவினர் இணங்கவேமாட்டார்கள் என்பதுதான் பொது அரசியல் கணிப்பீடு. அப்படி ஐ.தே.க. பிரமுகரை இம்முறை பொது வேட்பாளராக ஏற்பதற்கு சு.க. தரப்பு இணங்குமா என்பதும் பெரும் சந்தேகம்தான்.

# அரசியல் நோக்கங்களை அடைவதற்கு இராணுவத்தைப் பயன்படுத்தாதீர்கள்!

கொழும்பு,மே13

நோக்கங்களை அடைவதற்கு இராணுவத்தினரைப் பயன்படுத்தக்கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் தெரிவித்துள்ளார்.

வயம்பரண அபிமன் இராணுவ நினைவுத் தூபியை நேற்று முன்தினம் பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்குத் தேசத்தின் கௌரவத்தை வழங்கி, அவர்களுக்கான சிறப்புரிமைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமேயன்றி, ஒருபோதும் அவர்களைக் குறைத்து மதிப்பிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்காது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.



இப்படிக் கூறுகின்றார் ஜனாதிபதி

இராணுவத்தினர் தொடர்பாக அரசின் மீது சுமத்தப்படும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் நிராகரிக்கின்றார் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் திட்டமிட்ட வகையில் அரசை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வகையில் முன்வைக்கப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

தற்போதைய அரசு சர்வதேச உதவியுடன் இராணுவத்தினரின் கீர்த்தியைப் பாதுகாப்பதற்கு அதிக அளவில் நடவடிக்கை எடுத்திருப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அன்று அரசியல் மேடைகளில் தெரிவிக்கப்பட்ட மின்சாரக் கதிரைகளையும் எமது பாதுகாப்புப் படையினருக்கு எதிராக விசாரணைகளை மேற் கொள்வதற்கு வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டு வரு[illegible]தையும் நிறுத்தியது, தற்போதைய அரசு என்பதை மறந்துவிடக்கூடாது என்றும் கூறினார்.

இராணுவத்தில் இருந்த சிலர் வேறு சில சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காகக் கைது செய்யப்பட்ட போதும், அது இராணுவத்தினருக்கு எதிரான செயற்பாடல்ல என்றும், நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் போராடிய எந்தவொரு இராணுவத்தினருக்கும் எந்த வொரு பாதிப்பும் ஏற்பட இடமளிக்கவில்லை என்றும், அவர்களுக்கு வழங்கக்கூடிய உயரிய கௌரவத்தை வழங்குவதற்கு தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது என்றும் ஜனாதிபதி கூறினார்.

(ஐ)

# வடக்குக் கல்வி அமைச்சர் அதிகாரத் துஸ்பிரயோகம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 13

வடமாகாண கல்வியமைச்சர் தொடர்ச்சியாக அதிகாரத் துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம்சாட்டி இலங்கை ஆசிரியர் சங்கம் வடமாகாண முதலமைச்சர், ஆளுநர் ஆகியோருக்கு முறைப்பாட்டுக் கடிதங்கள் அனுப்பியுள்ளது. இது தொடர்பான ஊடக அறிக்கை ஒன்றையும் அது வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் 7 வருடங்கள் பணியாற்றியோருக்கான உள்ளக இடமாற்றத்தின்போது கொக்குவில் இந்துக் கல்லூரியில் 7 வருடத்தைப் பூர்த்தி செய்திருந்த ஆசிரியர் ஒருவருக்கு இடமாற் றச் சபையால் வேறு பாடசா லைக்கு இடமாற்றம் வழங்கப் பட்டது. ஆனால் அங்கு கடமையாற்றி சில மாதங்களுக்குள் வடக்கு மாகாணக் கல்வியமைச்சரின் முறையற்ற தலையீட்டால் முன்னைய கல்வியமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் அந்த ஆசிரியருக்கு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கே மீண்டும் இடமாற்றச் சபை எதுவுமின்றி இடமாற்றம் வழங்கப் பட்டது. ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக 7 வருடங்கள் பணியாற்றி இடமாற்றம் வழங்கப் பட்ட ஒருவரை குறுகிய காலத்துக்குள் மீண்டும் அதே பாடசாலைக்கு இடமாற்றச் சபையின் தீர்மானத்தை மீறிச் செய்யப்பட்ட இடமாற்றம் முறைகேடானது என முன்னைய வடமாகாணக் கல்விச் செயலாளர் இ.இரவீந்திரனுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டிய தற்கிணங்க அவரால் இந்த இடமாற்றம் நிறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் வடக்கு மாகாணக் கல்வியமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் அனந்தராஜின் கையொப்பத்துடன் கூடிய- யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்துடன் அந்த ஆசிரியை தற்போது கொக்குவில் இந்துக் கல்லூரியில் மீண்டும் கடமையைப் பொறுப் பேற்றுள்ளார். வடக்கு மாகாணக் கல்வியமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ஒரு திணைக்களத் தலைவர் அல்லர். அவர் அமைச்சரின் தனிப்பட்ட உத்தியோகத்தராவார். அவரது கடிதத்துடன் இடமாற்றம் வழங்கப்பட்டமை மிகப்பெரிய அதிகார துஸ்பிரயோகமாகும். இத்தகைய செயற்பாடு மிக மோசமானதாகும். அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்துடன் அந்தப் பாடசாலையில் கடமையைப் பொறுப்பேற்க அனுமதித்தமை கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபரின் முறைகேடான செயற்பாடாகும். வடக்கு மாகாணக் கல்வியமைச்சரின் நெருங்கிய உறவுக்காரரான அந்தப் பாடசாலை அதிபரும் வடமாகாணக் கல்வியமைச்சர் கந்தையா சர்வேஸ்வரனும் அந்த ஆசிரியைக்குச் சார்பாக மிகப் பெரும் முறைகேட்டைப் புரிந்துள்ளனர். இவ்வாறான நிர்வாக முறைகேடுகள் வடமாகாணக் கல்விப்புலத்தில் தோன்றியிருப்பது மிக ஆபத்தான செயற்பாடாகும். இவ்விடயம் தொடர்பாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக உடனடிக் கவனம் செலுத்தி உரிய விசாரணை மேற்கொண்டு முறைகேட்டைத் தடுக்குமாறு அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் தற்போதைய வட மாகாணக் கல்வி அமைச்சரும், அதிகாரிகளும் தொடர்ச்சியாகப் பல முறைகேடுகளை வட மாகாணத்தில் செய்து வருகின்றார்கள்.

இம்முறைகேடுகளுக்கு எதிராகச் செயற்பட்டு வடமாகாணத்தின் கல்வியைப் பாதுகாக்க அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணையவேண்டும் – என்றுள்ளது.

(ஐ)

# பளையில் காற்றாலை மின் உற்பத்தி கிடைக்கும் வருமானம் எமக்கில்லை

## பச்சிலைப்பள்ளித் தவிசாளர் விசனம்

கிளிநொச்சி, மே 13

பளைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜுலி பவர், வீற்றா பவர் போன்ற காற்றாலை மின் உற்பத்தி நிறுவனங்கள் வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சுக்கு வருடாந்தம் இரண்டு கோடி ரூபாவை நன்கொடையாக வழங்கி வருகின்றன எனவும், ஆனால் எமது பிரதேசத்துக்கு இதன் மூலம் எதுவித பயனும் கிடைப்பதில்லை எனவும் பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் பச்சிலைப் பள்ளிப் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தார். பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு பல உட்கட்டுமானங்கள் சிதைவடைந்து காணப்படுகின்றது எனவும், இந்த நிறுவனங்களால் கிடைக்கப்பெறும் நன்கொடையைக் குறைந்தது ஐந்து வருடங்கள் முழுமையாகப் பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபைக்கு விடுவித்துத் தரும் பட்சத்தில் பிரதேசத்தின் தேவைகளை இயன்ற வரை பூர்த்தி செய்யலாம் எனவும் அவர் கோரினார். இது தொடர்பாக முதலமைச்சரிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகவும் தவிசாளர் குறிப்பிட்டார்.

### நாளை

14.05.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம் : அசுவினி பி.ப.12.02 வரை
திதி : சதுர்த்தசி மு.இ.07.31 வரை
சுபநேரம் : 11.53 – 01.23 வரை
ராகுகாலம் : 07.23 – 8.53 வரை

# நல்லாட்சியின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்



## வியாழேந்திரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மே 13

நல்லாட்சி அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் அனைத்து ஆதரவுகளையும் நாங்கள் வாபஸ் பெறவேண்டிய நிலையேற்படும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட வவுணதீவு காயான்மடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டரங்கு திறப்பு விழாவில் நேற்று முன் தினம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்றபோது முன்வைத்த வாக்குறுதிகளை நடைமுறைப் படுத்த வேண்டும். அவர் அதனை நிறைவேற்றாவிட்டால் அரசுக்கு வழங்கும் அனைத்து ஆதரவுகளையும் நாங்கள் வாபஸ் பெறவேண்டிய நிலையேற்படும்.

ஜனாதிபதி ஆட்சிக்கு வரும்போது சிறுபான்மையின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகவும் ஜனாதிபதி முறையினை ஒழிப்பதாகவும் கூறி, சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்றார். அதனை அவர் இந்த வருடத்துக்குள்ளேயே நடைமுறைப்படுத்த வேண்டும்.

இலங்கை அரசு எங்களுக்குச் சரியான தீர்வைத் தராது ஏமாற்றியுள்ளது என்ற செய்தியைச் சர்வதேசத்துக்குக் கூற வேண்டிய நிலையும் ஏற்படும். இதில் சர்வதேசம் மிகவும் கவனமாக இருக்கின்றது.

நாங்கள் இந்த விடயத்தில் ஏதாவது முரண்பட்டால், அரசு எங்கள் மீது பழிபோடக்கூடிய சூழ்நிலையும் இருக்கின்றது. எனவே இந்த ஆண்டுக்குள் தீர்வினை வழங்காவிட்டால் சர்வதேசம் ஊடாகச் சரியான அழுத்தத்தினைக் கொண்டு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

எந்தளவுக்குத் தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயத்தில் வேகமாகப் பயணிக்கின்றோமோ, அதேயளவுக்கு இங்குள்ள முஸ்லிம் மக்களுக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் மிகவும் கவனமாகச் செயற்பட்டு வருகின்றோம்.–என்றார். (ஜ)



# இறங்குதுறையில் கடற்படை அன்புபுரம் மீனவர்கள் சிரமம்

கிளிநொச்சி, மே 13

கிளிநொச்சி – முழங்காவில், அன்புபுரம், இறங்குதுறையில் கடற்படையினர் நிலைகொண்டிருப்பதால், இப்பகுதிக் கடற்றொழிலாளர்கள் கடற்படைக் காவலரண் ஊடாகவே கடலுக்குச் செல்ல வேண்டியுள்ளது என விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கிராமத்தில் எழுபதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடற்றொழிலையே நம்பியுள்ள நிலையில் இறங்குதுறை இன்மையால் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன.

இந்தக் குடும்பங்கள் கடற்றொழில் செய்வதற்கு இறங்குதுறை முக்கியமானதாகும். ஆனால் கடற்படையினர் இந்த இறங்குதுறையில் நிலைகொண்டிருப்பதால் தொழிலுக்குச் செல்லும்போது நீண்ட தூரம் சென்று கடலில் இறங்க வேண்டியுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இந்த இறங்குதுறையைத் தாம் பயன்படுத்தி வந்ததாகவும், தற்போதுஅங்கு நிலை கொண்டுள்ள கடற்படையினரை வேறிடத்துக்கு இடம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அதிகாரிகள், அரசியல்வாதிகள் எனப் பலருக்கும் பல ஆண்டுகளாகக் கடிதங்கள் மூலம் அறிவித்தும் பயன் கிடைக்கவில்லை எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (ஜ)

# மின்தடை

யாழ்ப்பாணம், மே 11

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை–

யாழ் பிரதேசத்தில் – நாகர் கோவிலிலும் –

வவுனியா பிரதேசத்தில் – குடாகச்சகொடிய, மகாமயிலங்குளம், துட்டுவாகை, குடாகச்ச கொடியகல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் – மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# லஞ்சம் பெற்ற அதிகாரிக்கு 14 வருட சிறைத் தண்டனை

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில், மதிப்பீட்டு அதிகாரியாகக் கடமையாற்றிய நபரொருவருக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான், சம்பத் விஜேரத்ன 14 வருடச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

அத்துடன், 9,000 ரூபா அபராதம் செலுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்த நபரொருவரிடம், அந்த வழக்கிலிருந்து அவரை விடுப்பதற்காகக் கடிதம் ஒன்றைத் தாம் தருவதாகக் கூறி 15,000 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றிருந்தார் என இவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இறைவரித் திணைக்களத்தில், மதிப்பீட்டு அதிகாரியாகக் கடமையாற்றிய ஜனக்க பண்டார தஸநாயக்கவுக்கே இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ஜ)



# 7.5 மில்லியன் அமெரிக்க டொலரில் 13 கிளி. பாடசாலைகள் அபிவிருத்தி

## கொய்கா நிறுவனம் நிதியுதவி

கொழும்பு, மே 13

தென்கொரியாவின் கொய்கா நிறுவனம் அபிவிருத்திச் செயல்திட்டத்தின் மூலம் 7.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை கல்வி அமைச்சுக்கு நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிதியானது முழுமையாகக் கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலை அபிவிருத்திக்கு மாத்திரமே பயன்படுத்த முடியும் எனக் கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

கிளிநொச்சிமாவட்டத்தின்பாடசாலைகளையும் அதன் வளங்களையும் அபிவிருத்திசெய்வதுதொடர்பானகலந்துரையாடல் கல்வி அமைச்சில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன்ச நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் எஸ்.சிறிதரன், கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவு பணிப்பாளர் சு.முரளிதரன்ச உட்பட தென்கொரிய நாட்டின் கொய்க நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாகத் தொடர்ந்து கருத்து தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன்–

இந்தநிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 13 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதன்படி பளை, கண்டாவளை, கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கிளிநொச்சி இந்து ஆரம்பப் பாடசாலை, பிரமந்தனாறு மகாவித்தியாலயம், இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளும் மாதிரிப் பாடசாலைகளாகவும்–

சென்.தெரேசா பெண்கள் கல்லூரி, கனகாம்பிகைக் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, சிவபாதகலையகம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இராமநாதபுரம் (கிழக்கு) அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பளை இந்து ஆரம்பப் பாடசாலை, சோரன்பற்று இலங்கை கிறிஸ்தவ தமிழ்க் கலவன் பாடசாலை, முட்கொம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கரியாலை நாகபடுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இரணைதீவு றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை ஆகிய ஒன்பது பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்த அபிவிருத்தியில் பாடசாலைக் கட்டடங்கள், விசேட தேவை உடையோருக்கான வகுப்பு உபகரணங்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான வெளிநாட்டு உள்நாட்டுப் பயிற்சிகள்சமாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல், கணனி தொழில்நுட்பம் ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இந்த திட்டத்துக்குக் கல்வி இயல் அளவை மேம்படுத்தும் செயற்றிட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் மிக விரைவில் கைச் சாத்திடப்படும்.–என்றார்.



# பாடசாலை மாணவர் 30 பேருக்கு சைக்கிள்கள் வழங்கினார் ரவிகரன்

முல்லைத்தீவு, மே 13

பாடசாலை மாணவர்களின் இடைவிலகலை நீக்கும் நோக்கோடு தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'சாதிக்கும் சந்ததி' செயற்றிட்டத்தின் 22ஆம் கட்டத்தின் இரண்டாம் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தொலைதூரத்தில் இருந்து பாடசாலைக்கு நடந்து வரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரனின் 2018ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நான்கு இலட்சத்து ஐம்தாயிரம் ரூபா இதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான வைத்திலிங்கம் கெங்காதரன், சின்னராசா லோகேசுவரன் மற்றும் சிலாவத்தை கல்வி நிலைய நிருவாகி பார்த்தீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ)

# உடலில் அம்புகளுடன் சுற்றித் திரிந்த மான்கள்



அமெரிக்காவின், ஓரிகன் மாகாண காவல் துறை சமூக வலைதள பக்கமான பேஸ்புக்கில் ஒரு பதிவை வெளியிட்டிருந்தது. அதில், உடலில் பாய்ந்த அம்புடன் மான்கள் சுற்றித் திரிவது போன்ற படங்களுடன், இந்தக் காரியத்தைச் செய்தவரைக் கண்டுபிடிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தது.

அவர்கள் வெளியிட்டிருந்த பதிவில் இருந்தவை வருமாறு:-

'கடந்த வாரம் ஓரிகனின் மீன் மற்றும் வனத் துறைப் பாதுகாப்பு அமைப்புக்கு ஒரு தகவல் கிடைத்தது. அது, தென் மேற்கு ஓரிகனில் உள்ள ஷாடி கோவ் என்ற பகுதியில் சில மான்கள் தங்களின் உடலில் அம்புகளுடன் சுற் றித்திரிவதாகச் சொல்லப்பட்டது. உடனே அந்த அமைப் பைச் சேர்ந்த சில அதிகாரிகள் ஷாடி கோவ் பகுதிக்குச் சென்று மான்களைக் கண்டுபிடித்து அம்புகளை அகற்றத் தீர் மானித்துச் சென்றனர்.

நீண்டநேரமாகத் தேடியும் அப்பகுதியில் ஒரு மான்கூட கிடைக்கவில்லை. இறுதியில் ஓர் அதிகாரியின் கண்ணில் மான் தென்பட்டது. அது அவர்கள் தேடிச் சென்ற மான்தான். அதன் அருகிலேயே உடனடியாக இன்னொரு மானும் தென்பட்டது. உடலில் அம்புகள் பாய்ந்தி ருந்தாலும், அந்த இரண்டு மான்களும் உண் ணுவதற்கும் நடப்பதற்கும் எந்தச் சிரமமுமின்றி இருந்தன.

அந்த அம்புகள் மான்களின் உயிருக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. பிறகு, அதிகாரிகள் அம்பை அகற்றினர். மான்கள் மீது அம்பு எய்தவர்களைக் கண்டு பிடிக்க உதவினால் அவர்களுக்கு 2,600 டொலர் சன்மானம் வழங்கப்படும் என ஓரிகன் வேட்டையாடும் அமைப்பு அறிவித்திருந்தது' என அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டிருந் தது.

# ஒருநாளில் 80 தடவை கைபேசியின் பாவனை



## குழந்தைகளுக்கு பெரும் பாதிப்பு

ஸ்மார்ட்போனுக்கு அடிமை யாகுதல் என்பது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வரு கிறது. அமெரிக்காவில் சராசரி யாக ஒரு நாளைக்கு 5 மணி நேரம் ஸ்மார்ட்போனில் செலவி டுகிறார்கள். ஒரு நாளைக்கு 80 தடவை போனை எடுத்துப் பார்க்கிறார்கள். இந்தப் பழக்கம் நம் மூளையைப் பாதிப்பதாகச் சொல்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அதிலும் குழந்தைகள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர் என எச்சரிக்கிறார்கள். இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபடு வதற்காக ஜோ ஹோலியரும் காய் டாங்கும் சேர்ந்து 'லைட் போன் 2' என்ற போனை உரு வாக்கியிருக்கிறார்கள். இந்த போனில் பேசலாம், குறுஞ்செய்தி அனுப்பலாம், அலாரம் வைத்துக் கொள்ளலாம். இவற்றைத் தவிர வேறு எந்த வசதியும் இதில் கிடையாது. இந்த போனைப் பயன்படுத்துபவர்களுக்கு நேரம் மிச்சமா கிறது, மூளை பாதிப்பு தவிர்க்கப்படுகிறது. ஆரம்ப கால போனின் வசதியுடன் ஸ்மார்ட் போனைப்போல் எடை குறை வாக இருக்கும் இந்த போனின் விலை சுமார் 26 ஆயிரம் இந்திய ரூபாய்!

ஸ்மார்ட்போனைவிட விலை அதிகமாக இருந்தால் யார் வாங் குவார்கள்?

# கண்களை உருட்டி மிரட்டும் ரக்கூன்கள்



ரக்கூன்கள் என்பவை பாண்டா கரடிகளுக்கு நெருங்கிய இன மாகும். இவை வடஅமெரிக்காவில் காணப்படுகின்றன. அண்மைக்கால மாக அமெரிக்காவின் ஓஹையோ மாநிலத்தின் யங்ஸ்டவுன் பகுதியில் ரக்கூன்களின் தொல்லை அதி கரித்து வருகின்றன.

பொதுவாக ரக்கூன்கள் இரவு நேரத்தில் தான் உணவு தேடி வெளியே வரும். மனி தர்களைக் கண்டால் ஒதுங்கிவிடும். இப்படிப் பட்ட ரக்கூன்கள், சமீப நாள்களில் பகலில் மனிதர் வசிப்பிடங்களைத் தேடி வருகின்றன. இரண்டு கால் களால் நிமிர்ந்து நிற்கின்றன. கண் களை உருட்டி மிரட்டுகின்றன. பற்க ளைக் காட்டிப் பயமுறுத்துகின்றன.

ரக்கூன்களின் விநோதமான நடவடிக் கைகளுக்குக் காரணம், அவை நோயால் பாதிக்கப்பட்டு, மன அழுத்தத்தில் இருக்கலாம். வைரஸ் பாதிப்பு என்றால் அவை ஒரு ரக்கூனிலிருந்து இன்னொரு ரக்கூனுக்குப் பரவி விடும்.

இப்படி இருக்கும்போது அவை புறச் சூழலை மறந்து, மோசமாக நடந்துகொள் கின்றன. தடுப்பூசி போடாவிட்டால் வீட்டு நாய்களுக்குக் கூட இந்தப் பிரச்சினை ஏற்படலாம் என்கிறார்கள் விலங்குகள் ஆராய்ச் சியாளர்கள்.



# வீதியில் வழிந்து ஓடிய 'சொக்லேட்' ஆறு!

போலந்து நாட்டில் சாக்லேட் நிரப்பிய டேங்கர் லாரி கவிழ்ந்த விபத்தில், 12 தொன் சொக்லேட் பாகு சாலையில் கொட்டியது.

க்ராபோஸிவோ (Graboszewo) என்ற நகரில், சுமார் 12 தொன் சொக்லேட் பாகு நிரப்பிய டேங்கர் லொறி ஒன்று இனிப்பு நிரப்புவதற்காகத் தொழிற் சாலையை நோக்கிச் சென்று கொண்டி ருந்தபோது, கட்டுப்பாட்டை இழந்தது அது கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. வண்டியின் ஓட்டுநருக்குப் பயங்கர காயம் ஏற்பட்டது. இதில், லொறியில் அடைக்கப் பட்டிருந்த மொத்த சொக்லேட் பாகும் கீழே கொட்டி வீணானது. நெடுஞ்சாலை முழுவதும் சொக்லேட் ஆறு ஓடியது.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த காவல் துறையினர், லொறியின் ஓட்டுநரை மீட்டு, சிகிச்சைக்காக மருத் துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

இந்த விபத்தினால் அப்பகுதியில் நீண்ட நேரம் போக்குவரத்து பாதிக் கப்பட்டது. டேங்கர் லொறி சாலையின் நடுவே கவிழ்ந்ததால், இரு புறமும் போக் குவரத்து நிறுத்தப்பட்டது. சாலையில் கொட்டியிருந்த சொக்லேட் பாகுகளை அகற்றிய பிறகு போக்குவரத்து சீரானது.

சொக்லேட் உற்பத்தி அதிகம் இல்லாத நாடு, போலந்து. அப்படியிருக்க, 12 தொன் சொக்லேட் பாகு வீணானது, அந்நாட்டு சொக்லேட் பிரியர்களை மிக வும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.



# 'பர்கர் பிரியர்'

## 46 ஆண்டுகளில் இதுவரை 30,000

அமெரிக்காவைச் சேர்ந்த டொனால்ட் கோர்ஸ்கி என்பவர், இதுவரை 30,000 பர்கர் சாப்பிட்டு சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர், டொனால்ட் கோர்ஸ்கி. இவர், சிறைக் காவலராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். இவர், 28,788 பிக் மேக் எனப்படும் பர்கர் சாப்பிட்டதற்காக, 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தி ருந்தார். இரண்டு நாள்களுக்கு முன், 30,000 பர்கர் என்ற எண்ணிக்கையை எட்டியுள்ளார். இதுகுறித்து அவர், 'ஒரு நாளைக்கு இரண்டு தடவை என 46 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக பர்கர்



சாப்பிட்டு வருகிறேன். பர்கரை மிகவும் விரும்புகிறேன்.

அதில் இருக்கும் சாஸ் எனக்கு மிகவும் பிடித்துள்ளது. நான், 86 கிலோ எடையில்தான் இருக்கிறேன். குதிரையைப் போல ஆரோக்கிய மாக உள்ளேன். இதனால், எனக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை' என்று தெரிவித்தார்.

கடந்த 46 ஆண்டுகளில், எட்டு நாள்கள் மட்டுமே பர்கர் சாப்பிடாமல் இருந்தேன் என அவர் கூறியுள் ளார். 1972 ஆம் ஆண்டி லிருந்து அவர், பர்கர் வாங்கியதற்கான ரசீது களைப் பத்திரப்படுத்திவைத்துள் ளாராம்.

# தாய்மை என்பது ஓர் உன்னதமான உணர்வு!

உலக அளவில் தாய்மையை போற்றும் வகையில் கொண்டாடப்படும் அன்னையர் தினம் (Mother's Day) ஏனைய சர்வதேச தினங்களைப் போல ஒரு குறித்த நாளில் கொண்டாடப்படுவதில்லை.

பொதுவாக மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறன்று உலகில் அநேக நாடுகள் கொண்டாடினாலும்கூட, வேறும் சில நாடுகள் அதற்கு முன்போ அல்லது பின்போ கொண்டாடுகின்றன. 'தாயிற் சிறந்த கோவிலுமில்லை..... என்ற வரிகள் தாய்மையின் புனிதத்துவம், தாய்மையின் பெருமை, தாய்மையின் தியாகம் போன்றவற்றை எடுத்துக்கூறத்தக்க வரிகளாகும். இந்த உலகில் தாய்க்கு ஈடாக ஒப்பிட எதுவுமே இல்லை.

ஒரு பெண்ணானவள் மகளாக, சகோதரியாக, தாயாக, தாரமாக, தோழியாக வீட்டிலுள்ளோரைப் பக்குவப்படுத்தும் பாட்டியாக, அனுபவங்களின் அரவணைப்பில் வழி நடத்திச்செல்லும் ஆசானாக இப்படி தன் வாழ்நாளில் எத்தனையோ பாத்திரங்களில் வலம் வந்தாலும் 'அன்னை' என்ற பாத்திரம்தான் மிக உன்னதமான இடத்தை வகிக்கிறது.

தாய்மை என்பது ஓர் உன்னதமான உணர்வு. அத்தகைய தாயைப் போற்றவே மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறு அன்னையர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. அன்னையர் தினம் Mother's Day உலகெங்கும் கொண்டாடக் காரணமாக இருந்த பின்னணி பற்றி நாம் ஒரு சிறிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

அன்னையர்களுக்கு மரியாதை செலுத்தும் சம்பிரதாயம் புராதன காலத்திலே தொடங்கி விட்டதாக வரலாற்று சான்றுகள் பகிருகின்றன. பண்டைய கால மனிதர்களால் அன்னையர் புராணங்கள் கதையாக வழங்கப்பட்டு வந்தன. இதில் முக்கியமாக பெண் – கடவுளான சைபீல் என்ற கடவுள் வணங்கப்பட்டாள். இந்தப் பெண் தெய்வமே எல்லாக் கடவுளுக்கும், முழு முதல் தாய்க் கடவுளாக அம் மக்களால் வணங்கப்பட்டுள்ளது.

வருடத்துக்கு ஒரு முறை இந்த முழு முதல் தாய்க் கடவுளுக்கு பிரிஜியா மக்களால் விழா எடுக்கப்பட்டு வந்தது. இந்த விழாவே அன்னையர்களை மரியாதை செய்யும் முதல்விழா கொண்டாட்டமாகக் கருதப்படுகிறது. வசந்த காலத்தின் துவக்கத்தை கிரேக்கர்கள் பல வகைகளில் கொண்டாடினர். அதில் தாய் தெய்வத்தை வணங்குவதும் ஒன்றாகும். கிரேக்கர்கள் தெய்வமாக வழிபட்டு வந்த க்ரோனஸின் மனைவி ரேஹாவைத்தான் அவர்கள் தாய் தெய்வமாக வழிபட்டனர்.

மத்திய காலத்தில் தனது தாயை ஒரு குறிப்பிட்ட தினத்தில் அன்பளிப்புகள் வழங்கி கௌரவித்ததாகவும் சில ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறான நிலையில் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நவீன காலத்தில் உலகளாவியரீதியில் அன்னையர் தினம் கொண்டாடுவதற்கான சந்தர்ப்பம் உருவான வரலாற்றின் பின்னணி பின்வருமாறு அமைந்திருந்தது. ஜார்விஸ் என்ற பெண் சமூக சேவகி அமெரிக்காவின் மேற்கு வேர்ஜினியா மாநிலத்தில் கிராப்டன் (Grafton) என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் யுத்த களத்தில் அமெரிக்க வீரர்கள் பலியாயினர். அவர்களின் குடும்பங்களும் சிதைந்து சீர்குலைந்து நாலாபக்கமும் சிதறிப்போயின.

பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரவும், அவர்களின் நல்வாழ்க்கைக்கும், சமாதானத்திற்கும் தன் இறுதி மூச்சுவரை அயராது பாடுபட்டு சமூக சேவகியாகவே வாழ்ந்து 1904இல் Jarvis மறைந்தார். இவரின் மகள் அனா ஜார்விஸ் Anna Jarvis முதன்முதலாக தனது அன்னையின் நினைவாக உள்ளூரில் உள்ள மெத்தடிஸ்ட் சர்ச்சில் 1908ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை சிறப்பு வழிபாடு ஒன்றை நடத்தினார்.

தனது அன்னையைப் பாராட்டி சீராட்டி அன்னையர் தினம் கொண்டாடிய முதல் பெண் என்ற பெருமையையும் இவர் பெறுகிறார். சமூக நலனில் அக்கறை கொண்ட ஜார்விஸ் ஏதாவது ஒரு நாளையாவது எல்லோரும் தங்களது தாயை அவர் உயிரோடு இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அவளது தியாகத்தையும் தங்களுக்கு அவள் செய்த ஈடு இணையற்ற பணியையும் நினைத்து அவளை கௌரவிக்க வேண்டும் என்று விரும்பினார்.

இதைத் தொடர்ந்து அனா ஜார்விஸ் Anna Jarvis 1913ஆம் ஆண்டில் தன் பணி நிமித்தம் பென்சில்வேனியா மாநிலத்தில் பிலடெல்பியாவில் குடியேறினார். தாயார் விட்டுச்சென்ற சமூக சேவையை மகள் ஜார்விஸ் தன் தனிப் பெரும் கடமையாகக் கருதித் தொடர்ந்தார். கஷ்டப்படுகிற, வாழ்க்கையில் இன்னலும், சோதனைகளும் ஒருசேரத் தாக்கி மனம் வெந்து, நொந்து சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களுக்கான அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டார்.

தன் தாயாரின் நினைவாகவும், தத்தம் வீடுகளில் அவரவர் அன்னையர்களும் கௌரவிக்கப்பட வேண்டும். எல்லோர் இல்லங்களிலும் அன்றைய தினம் மகிழ்ச்சி ததும்ப வேண்டும் என்று எண்ணினார். தம் எண்ணத்தை பென்சில்வேனியா மாநில அரசுக்குத் தெரிவித்தார். அரசும் அவர் கருத்தை ஏற்று 1913ஆம் ஆண்டு முதல் அன்னையர் தினம் என அங்கீகரித்து அறிவித்தது. மாநில அரசு அங்கீகரித்தாலும் அனா ஜார்விஸ் திருப்தி அடையவில்லை.

ஆயிரக்கணக்கில் அரசியல் வாதிகளுக்கும், தன்னார்வ அமைப்புகளுக்கும், வர்த்தக அமைப்புகளுக்கும் கடிதங்கள் எழுதி அமெரிக்கா முழுவதும் அன்னையர் தினம் கொண்டாடவும் அந்நாளை அரசின் விடுமுறை நாளாகவும் அங்கீகரித்து அறிவிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதிக்கும் இதே வேண்டுகோளை விடுத்தார். இவரின் வேண்டுகோளையும், நியாயத்தன்மையையும் ஏற்றுக்கொண்ட அமெரிக்கா ஜனாதிபதி வுட்ரோ வில்சன் 1914ஆம் ஆண்டு, வருடம் தோறும் மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமையை அதிகாரபூர்வமாக அன்னையர் தினமாகவும், அன்று விடுமுறை தினமாகவும் இருக்கும் அறிவிப்பை வெளியிட்டார்.

இவ்வறிவிப்பை அமெரிக்க காங்கிரஸும் ஏற்றுக்கொண்டது. பின்பு கனடா அரசாங்கமும் ஏற்று அங்கீகரித்து அறிவித்தது. அதுமட்டுமல்ல 46 நாடுகள் இதே நாளில் அன்னையர் தினம் என அறிவித்து நடைமுறைப்படுத்தியது. தனது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டதையிட்டு ஜார்விஸ் அளவற்ற மகிழ்ச்சியடைந்தாலும் முழுமனநிறைவடையவில்லை. 46 நாடுகளில் மட்டுமல்ல உலகமெங்கும் அன்னையர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் தொடர்ந்தும் ஈடுபட்டார். உலகம் முழுக்க அன்னையர் தினம் அனுசரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் அன்னையைப் போற்றுகிற, வாழ்த்துகிற, மகிழ்விக்கின்ற நாளாக அன்றைய தினம் மலர்ந்து மணம் பரப்ப வேண்டும் என்பதுதான் என் ஆசை என்று தனது 84ஆவது வயதில் தனியார் மருத்துவமனையில் இறப்பதற்கு முன் தன்னைச் சந்தித்த நிருபர்களிடம் வெளிப்படுத்தினார்.


அவருடைய ஆசை இன்று அநேகமாக பூர்த்தியாகிவிட்டது என்றே சொல்லலாம். இன்று நாம் கொண்டாடும் அன்னையர் தினம் அன்னைகளுக்கெல்லாம் அன்னையாகத் திகழ்ந்த அனா ஜார்விஸ் என்பவரின் முயற்சியினாலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதேநேரம், அனா ஜார்விஸ் திருமணமானவரோ பிள்ளைகளைப் பெற்றெடுத்தவரோ அல்லர்.

அன்னைகளுக்காக அரும்பாடுபட்டவர் என்பதே உண்மை. அன்னையர் தினத்தில் எமது அன்னையை மட்டுமல்ல அன்னையர்களின் நாம் மதித்து மகிழ்விக்க வேண்டும். அவர்களுக்காகப் பிரார்த்தனைகளைப் புரிய வேண்டும். மானசீகமான எமது அன்பை வழங்க வேண்டும். அன்னையை மதிப்பது ஒரு நாளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதன்று.

ஆனாலும், அன்னையர் தினம் என்று குறிக்கப்பட்ட தினத்தில் விசேட மதிப்பும், மகிழ்விப்பும் அன்னைக்கு வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தற்போது அன்னையர் தினம் என்பது ஒரு வியாபார தினம்போல் மாறிவிட்டது கவலைக்குரியதே. அன்னையர் தினம் வருவதற்கு முன்பு அல்லது அன்னையர்களை கௌரவிக்கவும், மகிழ்விக்கவும் பல நூற்றுக்கணக்கான வியாபாரப் பொருள்கள் சந்தைப்படுத்தப்பட்டு அவற்றை விற்பனை செய்வதிலேயே முழு அளவில் கரிசனை காட்டுவதை அவதானிக்க முடிகின்றது. இவ்விடத்தில் இத்தினத்தை வியாபாரப் பொருளாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.


எதையும் வியாபாரமாக்கி பணம் பண்ணும் அமைப்பு அன்னையர் தினம் அன்று அன்னையின் படம் ஒன்றைப் பொறித்து கொடியொன்றை விற்று பணம் சம்பாதிக்க எத்தனித்தது. இதனை அறிந்த அனா ஜார்விஸ் பொங்கெழுந்தார். 1923ஆம் ஆண்டு இத்தகைய கொடி விற்பனையை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்தார். என்னுடைய நோக்கம் அன்னையர் தினம் சென்டிமெண்ட் நாளாக இருக்க வேண்டுமேயல்லாமல் பணம் திரட்டும் நாளாக இருக்கக் கூடாது. இத்தகைய வசூலுக்குத் தடைவிதிக்கவேண்டும் என்று வாதிட்டார். ஈற்றில் வெற்றி பெற்றார். எனவே, அன்னையர் தினம் என்பதை உள்ளார்த்தமாக உணர்வுபூர்வமாக கடைபிடிக்க வேண்டும் என்பதை அனா ஜார்விஸ் எதிர்பார்த்தாரேயன்றி அது ஆடம்பரமாகவும், பணத்தை மையப்படுத்தியதாகவும் இருக்க வேண்டும் என அவர் எதிர்பார்க்கவில்லை என்பதை இந்த வழக்கு எடுத்துக் காட்டுகின்றது.

எனவே, அன்னையர் தினம் என்பது ஓர் உயரிய தினம். அன்னையரை மகிழ்விக்க எமது சக்திக்கேற்றாற்போல் எதைச் செய்ய முடியுமோ அதை செய்வோம். ஏனெனில், அன்னையின் பெருமானத்தை நாம் வழங்கும் அன்பினாலன்றி பணத்தினால் தீர்மானிக்க முடியாது. அன்னையர் தினம் என்பது உண்மையான அன்பிற்காகவும் தனது அன்னைக்கு நன்றி கூறும் விதத்திலும் இருக்க வேண்டும் என்று நினைத்துப் போராடிய அனா ஜார்விஸின் உண்மையான நோக்கத்தை நாம் புரிந்து இத்தினத்தை கொண்டாடுவோம். ★



அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
நேரில் நின்று பேசும் தெய்வம்
பெற்ற தாயன்றி வேறொன்று ஏது
அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே...

## அன்னையரை போற்றிடுவோம்



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

13.05.2018 – 19.05.2018

2018 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 30 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை திரியோதசித்திதி இரவு 9.46 மணி வரை பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம். ரேவதி. பகல் 1.31 மணி வரை. பின்னர் அசுவினி. அமிர்தயோகம் பகல் 1.31 மணி வரை பின்னர் அசுபயோகம்.

ராகுகாலம் - மாலை 4.48 மணி முதல் 6.22 மணி வரை

சுபநேரம் - காலை 8.53 மணி முதல் 10.22 மணி வரை இன்று

திவசம் செய்ய வேண்டிய திதி- சித்திரை மாத தேய்பிறை திரியோதசி.

பிறந்த நட்சத்திர வழிபாடு- ரேவதி.

சந்திராஷ்டம நாள் - மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

## மேஷம்:

அலைச்சல் மிகுந்த வாரம். தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். பணம் பற்றாக்குறையாக இருப்பதால் கடன் வாங்க அலைவார்கள். படித்து முடித்த மாணவர்கள் தங்கள் திறமைக்கேற்ற வேலை தேடித் திரிவார்கள். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புக்களைத் தேடித் திரிவார்கள். மாணவர்கள் சிலர் தம் பகுதி நேர வகுப்புக்களுக்காக தகுந்த ஆசிரியரைத் தேடி அலைவார்கள். பெற்றோர் சிலர் தம் மணமாகாத பிள்ளைகளுக்காக தகுந்த வரன் தேடி திருமண சேவைகளின் உதவியை நாடுவார்கள்.

## ரிஷபம்:

உயர்வான வாரம். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். ஆலய தரிசனம் கண்டு வர குடும்பத்துடன் பயணம் மேற்கொள்வார்கள். அரசு மூலம் நன்மைகளை எதிர்பார்க்கலாம். சகோதர வழியில் திருப்தி தரக்கூடிய ஒத்துழைப்புக் கிடைத்து வரும். நண்பர்கள், உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரம் நல்ல முன்னேற்றம் அடையும். மாணவர்கள் கல்வியில் மேன்மையடைவார்கள். உத்தியோகத்தர்கள் அலுவலகம் தொடர்பான விடயங்களில் திருப்தியைக் காண்பார்கள்.

## மிதுனம்:

மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். உடல் நிலையில் ரோகங்கள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும். குடும்பத்தில் சுமாரான அமைதி காணப்படும். தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைப்பது அரிது. உத்தியோகத்தர்களுக்கு அதிக வேலைச் சுமையுடன், பொறுப்புக்களும் அதிகரிக்கும். வீண் அலைச்சல்களும் உண்டாகும். தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

## கடகம்:

உயர்வான வாரம். பொருளாதாரம் முன்னேற்றம் அடையும். உத்தியோகத்தில் இவர்கள் திறமைக்கு பாராட்டுதல்களும், அதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபாரம் கருத்து வேறுபாடுகள் விலகி சிறப்படையும். ஆன்மிக, தெய்வீக காரியங்களுக்கு இவர்கள் உதவி செய்வதன் மூலம் நீண்ட நாளைய சோதனைகள் விலகும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். உடல் நிலை சிறப்பாகவே அமையும். நீண் காலம் பகையாய் இருந்த உறவினர்கள் பகையை மறந்து பழையபடி உறவாடுவார்கள்.

## சிம்மம்:

சஞ்சலமான வாரம். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்ப நிலை குழம்பிய நிலையில் இருக்கும். புத்திரர்களால் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களால் வீண் அலைச்சல்களும், செலவுகளும் அதிகமாகும். பெரிய முதலீடுகளில் சற்றுக் கவனமாகச் செயற்படுவது நன்று. தொழில் வியாபாரம் மந்த நிலையில் காணப்படும். உறவினர்கள், நண்பர்கள் வீண் தொல்லைகள் தருவார்கள். உத்தியோகத்தில் கடின உழைப்பு இருக்கும்.

## கன்னி:

சமபலன்கள் உள்ள வாரம். பணவரவு சுமாராக இருக்கும். தேவையில்லாத செலவுகள் ஏற்படும். தொழில் வியாபார நிலையில் சுமாரான அனுகூலத்தையே அடைய முடியும். உத்தியோகத்தர்களுக்கு தேவையற்ற இடமாற்றங்களால் வீண் அலைச்சல்கள் உண்டாகும். வங்கிகளின் உதவிகள் தாமதப்படும். நண்பர்களுடன் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டி வரும். எதிலும் நிதானமாகச் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை உண்டாகும்.

## துலாம்:

மேன்மையான வாரம். பொருளாதாரம் ஏற்றமடையும். உடல் நிலையில் சுறுசுறுப்பும், உற்சாகமும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்களால் மன நிறைவு உண்டாகும். உற்றார் உறவினர் ஆதரவும், நண்பர்களால் உதவியும் உண்டாகும். குடும்ப ஒற்றுமை சிறப்பாக அமையும். சகோதர உறவு பலப்படும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். உத்தியோகத்தில் தடைப்பட்ட பதவி உயர்வுகளும் ஊதிய உயர்வுகளும் கிடைத்து மனமகிழ்ச்சி கிடைக்கும்.

## விருச்சிகம்:

மகிழ்ச்சியான வாரம். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். தாய் வழியில் எதிர்பார்த்த உதவிகள் அமையும். ஆடை, ஆபரணங்கள் சேரும். பணிபுரியும் பெண்களுக்கு உயர் பதவிகள் கிடைக்கும். மேற்கல்விக்காக முயலும் மாணவர்களுக்கு எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். சகோதர உறவு பலப்படும். சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு சிறப்பாக அமையும். திருமணம் போன்ற சுபகாரிய முயற்சிகளில் இருந்த தடைகள் விலகும்.

## தனுசு:

துன்பமான வாரம். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். நெருங்கியவர்களே பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்துவார்கள். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும். மற்றவர்களுடன் பேசும் போது கவனமாய் இருப்பது உத்தமம். அசையாச் சொத்து வகையில் தேவையில்லாத செலவுகள் ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தொழிலில் கடுமையான உழைப்பும், அதிகாரிகளின் கெடுபிடிகளும் அதிகரிக்கும்.

## மகரம்:

விருத்தியான வாரம். பொருளாதாரம் மன நிறைவைத் தரும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். தொழில் வியாபார நிலையில் இருந்த போட்டி, பொறாமைகள் விலகி நல்ல முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெற்று மன மகிழ்ச்சி உண்டாகும். சகோதர உறவு வலுவடையும். இதுவரை பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் ஒன்றிணைவார்கள். புத்திரர்களால் அனுகூலம் உண்டாகும். வீடு, வாகன வசதிகள் பெருகும். பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும்.

## கும்பம்:

ஆக்கபூர்வமான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உடல் நலம் சிறப்பாகவே அமையும். வேலையாள்களின் ஒத்துழைப்பால் வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். வெளிவட்டாரப் பழக்கமும், நண்பர்களின் ஆதரவும் நன்றாக அமையும். வரவேண்டிய கடன் பணம் தடையின்றி வசூலாகும். பிரிந்த உறவுகள் ஒன்று கூடி மகிழ்வார்கள். உத்தியோகத்தில் திறமைகள் வெளிப்படும். பொன், பொருள் சேரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் உண்டாகும்.

## மீனம்:

அனுகூலமான வாரம். பொருள் வரவுகளில் அற்புதமான நிலை உண்டாகும். குடும்பத்தில் அந்நியோன்யம் உண்டாகும். நினைத்தவை நிறைவேறும். தொழில், வியாபார நிலையில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம் உண்டாகி, குடும்பத்தோடு சேர்ந்து மகிழ்வார்கள். கொடுக்கல் வாங்கலில் சரளமான நிலையும் பெரிய மனிதர்களின் ஆதரவும் உண்டாகும். சிலருக்கு திட்டமிட்ட வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

தண்ணீரில்லை; நிலைமையை சமாளிக்க

# அன்டார்டிக்காவில் இருந்து கேப்டவுனுக்கு பனிக்கட்டிகள்

-ஆர்.குமரேசன்




ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லாமல் போகும் உலகின் முதல் பெரு நகரம் என்ற அச்சத்தில் இருந்து மெல்ல மெல்ல மீண்டு வருகிறது கேப்டவுன். தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகர் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி ஒரு சொட்டு தண்ணீர்கூட இல்லாத பூஜ்ய நாளை எட்டும் என அறிவிப்பு வெளியானதும் உலக நாடுகள் எல்லாம் நடுங்கத் தொடங்கிவிட்டன.

இன்றைக்கு கேப்டவுன் நகருக்கான நிலை நாளைக்கு நமக்கும் வரலாம் என்பதால் பல நாடுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் வேகம் காட்டின. கேப்டவுன் மக்கள் கடும் பீதியில் ஆழ்ந்தனர்.

அங்கு நிலவிய கடுமையான வறட்சியைத் தேசிய பேரிடராக அறிவித்தது தென்னாபிரிக்க அரசு. தண்ணீர் சிக்கனத்துக்காகப் பல கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டன. கார் கழுவுவது, வீடுகளில் தோட்டங்களைப் பராமரிப்பது போன்ற பல செயல்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

குடும்ப அட்டைக்கு மண்ணெண்ணெய் அளிப்பது போல், நீர் விநியோக சாவடிகள் அமைத்து, தண்ணீரை அளந்து அளந்து கொடுத்தார்கள்.

ஒரு குடிமகனுக்கு ஒரு நாளைக்கான அனைத்து தேவைகளுக்கும் சேர்த்து 50 லீற்றர் தண்ணீர் மட்டுமே வழங்கப்பட்டது. உலகிலேயே தண்ணீருக்காக முதன்முதலாகக் காவலர்களை நியமித்தது கேப்டவுன் நிர்வாகம். இத்தனை சிக்கன நடவடிக்கை இருந்தாலும் பூஜ்ய நாளை எண்ணி பயந்துகொண்டே நாள்களைக் கடத்தி வந்தார்கள். இந்நிலையில், பூஜ்ய நாளை சில நாள்கள் தள்ளி வைக்க முன்வந்தது கிரபவ் நகர விவசாயிகள் அமைப்பு. அவர்கள் கேப்டவுன் நகருக்கு 10,000 மில்லியன் லீற்றர் தண்ணீரைக் கொடுத்தார்கள். இதனால் சில நாள்கள் தள்ளிப்போனது பூஜ்யநாள்.



### கேப்டவுன் தீர்வு


இந்நிலையில் சமீபத்தில் பெய்த மழையின் பெருங்கருணையால் இன்னும் பூஜ்ய நாள் இன்னும் சில நாள்கள் தள்ளிப்போயுள்ளது. இந்த நிலையில் கேப்டவுன் தண்ணீர்ப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பாக பல்வேறு திட்டங்கள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. 50

### உருக்கி வழங்கத் திட்டம்

லீற்றர் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்து சமூக வலைதளங்களில் ஆலோசனைகள் குவிந்து வருகின்றன. வரும் குளிர்காலத்தில் போதுமான மழை கிடைக்கும் என எதிர்பார்க்கிறார்கள். அது கிடைக்காத பட்சத்தில் சில மாற்று ஏற்பாடுகள் மூலமாகத் தண்ணீர்த் தேவையைச் சமாளிக்க திட்டமிட்டு வருகிறார்கள். இதுதொடர்பாக ஊடகங்களிடம் கருத்து தெரிவித்துள்ள தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நீர் மேலாண்மை நிபுணர் நிக் ஸ்லோனோ, "நகரில் தண்ணீர்க் கட்டுப்பாடு அமுலில் இருக்கிறது. தண்ணீரை மிகவும் சிக்கனமாக பயன்படுத்துமாறு தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது. மக்களும் அதற்கு ஏற்ப மாறிவருகிறார்கள். வரும் குளிர்கால மழையை நம்பியுள்ளோம். அதுவும் பொய்த்தால்,

அன்டார்டிகாவில் உள்ள பனிப் பாறைகளைக் கொண்டு வந்து உருக்கி தண்ணீர்த் தேவையைச் சமாளிக்கலாம் என்பது தொடர்பான ஒரு திட்டமும் ஆலோசனையில் உள்ளது. அன்டார்டிகாவில் உள்ள பனிப்பாறைகளைக் கொண்டு வந்து உருகச் செய்வதன் மூலமாகத் தண்ணீரை உற்பத்தி செய்ய முடியும். ஒரு பனிப்பாறையில் இருந்து தினமும் 15 கோடி லீற்றர் தண்ணீர் மூலம் ஓர் ஆண்டுக்கு உற்பத்தி செய்ய முடியும். இதன் மூலம் கேப்டவுன் நகரின் தண்ணீர்த் தேவையில் முப்பது சத விகிதத்தை பூர்த்தி செய்ய முடியும். இந்தத் திட்டத்துக்கு அரசு மற்றும் தனியார் நிதியுதவி தேவைப்படுகிறது" என்றார்.

மேற்படி நடவடிக்கையின் மூலமாக பூஜ்யநாள் என்ற கொடுமையில் இருந்து கேப்டவுன் தற்காலிகமாகத் தப்பித்துள்ளது. வான்மழையே வா...உன் பெருங்கருணையால் பூஜ்யநாள் என்பதே பூமியில் இல்லாது போகட்டும்...வா மழையே வா.




---

# இலட்சியத்தில் வென்று காட்டியவர் கார்ல் மார்க்ஸ்

நான் அவலட்சணமானவன். ஆனால், என்னால் பெண்களில் மிக அழகானவளை விலைக்கு வாங்கிக்கொள்ள முடியும். எனவே, நான் அவலட்சணமானவல்லன். ஏனெனில், அவலட்சணம் விளைவிக்கும் அருவருப்பைப் பணம் நீக்கிவிடுகிறது.

நான்... கால்கள் அற்றவன். ஆனால், பணம் எனக்கு 24 பாதங்களை வழங்குகிறது. எனவே, நான் பாதங்கள் அற்ற வனல்லன்; நான் மோசமானவன்; நேர்மையற்றவன்; பழிபாவங்களுக்கு அஞ்சாதவன்; மடையன். ஆனால், பணம் மரியாதைக்குரிய ஒன்று. எனவே, அதை உடையவனும் மரியாதைக்கு உரியவனாகிறான் என்றவர் கார்ல் மார்க்ஸ்.



கார்ல் மார்க்ஸின் தோற்றமே, அவரை உலகுக்கு அவலட்சணமாகக் காட்டியிருந்தாலும் உண்மையில், அவருடைய தோற்றம் அவலட்சணமானது அல்ல... அதனால்தான் அவர், ஜென்னி என்ற அழகு நங்கையின் இதயத்துக்குள் அமர்ந்தார்; ஜென்னியும் அவருடைய அன்புக்குள் புகுந்தார்; அவர்கள் இருவரும் ஆயுள்வரை அன்பு கலந்த வாழ்க்கையை வாழ்ந்தனர்.

### துணையாய் இருந்த ஜென்னி!

தோல்வியும், ஏளனமும், பஞ்சமும் கார்ல் மார்க்ஸை ஒவ்வொரு முறையும் துரத்திக்கொண்டிருந்தபோதும் அதில் துவண்டுவிடாமல் தன் லட்சியத்தில் ஜெயித்தவர்.

அதற்குத் துணை நின்றவர் ஜென்னி. கார்ல் மார்க்ஸுக்குப் பக்கபலமாய் இருந்த ஜென்னி ஒரு முறை, "அன்பே... உங்கள் பேனாவைக் காகிதத்தின் மீது மென்மையாக ஓடவிடுங்கள். சில சமயங்களில் உங்கள் பேனா, தடுக்கிவிழுந்துவிடுமானால், அதோடு சேர்ந்து உங்கள் வாக்கியம் மட்டுமன்றி நீங்களும் விழ நேரலாம். கவலை வேண்டாம். உங்கள் சிந்தனைகள் பழைய காலத்துப் படைவீரர்களைப்போல அதிகமான உறுதியுடனும் துணிவுடனும் விறைப்பாக நிற்கின்றன. அவர்களைப் போல அவை சாகும். ஆனால், சரணடைய மாட்டா (elle meurt, mais elle ne serende pas) என அவருடைய எதிர்கால சிந்தனை எப்போதும் தடைப்பட்டு விடாத அளவுக்கு மார்க்ஸுக்குத் துணையாக இருந்தார் ஜென்னி.

"கொஞ்சமாவது மூலதனத்தைச் சேர்த்தால் சிறப்பு என்று தன் தாயார் சொன்னபோதும்... கொஞ்சமும் மூலதனமே இல்லாமல் வாழ்ந்துகொண்டிருந்தார் மார்க்ஸ். ஆனாலும், அவ்வப்போது பணத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டிருந்தார் அவருடைய நண்பர் பிரடெரிக் ஏங்கெல்ஸ். பணமே அனைத்தும் தீர்மானிக்கக்கூடிய சக்தியாக விளங்குவதால் அந்தப் பணம் குறித்து, மார்க்ஸ் இப்படிக் குறிப்பிடுகிறார்.

பொருள்களைப் பெறுவதற்கான மானுட முறை, நான் எதைப் பெறுகிறேனோ, அதற்குப் பொருத்தமான பண்பு வகை முயற்சியைச் செய்வதாகும். உணவும் உடையும் பெறுவதற்கான அடிப்படை, நான் உயிருள்ளவனாக இருக்கிறேன் என்பதும், புத்தகங்களையும் ஓவியங்களையும் பெறுவதற்கான அடிப்படை, நான் அவற்றைப் புரிந்துகொள்கிறேன், அவற்றைப் பயன்படுத்தும் ஆற்றல் உள்ளவனாக இருக்கிறேன் என்பதுமாகும் என்கிறார்.

"ஏடறிந்த வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறே என்ற மார்க்ஸ், உலக மனிதகுலத்தின் வரலாற்றை விரிவாக ஆய்வு செய்தார். ஒவ்வொரு காலகட்டத்திலும் மனித இனம் எப்படியெல்லாம் மாறியிருக்கிறது, இந்த மாற்றங்களுக்கு எப்படி மனித உழைப்பு காரணமாக இருக்கிறது என்ற ஆழமான ஆய்வுகளை முன்வைத்தார். உலகமெங்கும் ஒடுக்கப்பட்ட, வறுமையில் உழன்ற தொழிலாளர் வர்க்கம் குறித்து அதிகம் சிந்தித்த கார்ல் மார்க்ஸ், "எல்லாத் தத்துவங்களும் உலகம் எப்படித் தோன்றுகின்றன, இயங்குகின்றன என்று சிந்திக்கின்றன. (14 ஆம் பக்கம் பார்க்க...)



காலைக்கதிர்



# இரண்டாம் தேசியத் தலைவர்; ஏன் இந்த அவசர அறிவிப்பு?

• ஏகலைவன்



போர் முடிந்து விட்டன என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் அழித்துவிட்டோம் என்றும் இலங்கை அரசாங்கம் அறிவித்து எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதியுடன் ஒன்பது வருடங்களாகின்றன. ஆனாலும் தமிழ் மக்களில் பெரும்பாலானோரின் அபிமானத்துக்குரிய தலைவராக இருந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் இறந்து விட்டார் என இலங்கை அரசாங்கம் வெளியிட்ட இந்த அறிவிப்பபை நம்புவதற்குத் தமிழ் மக்களில் பலர் தயாரில்லை.

இந்நிலையில் தமிழ்த் தேசியப் பேரவை மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய் பெயர்களால் தம்மை வெளிக்காட்டும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் மேதினக் கூட்டத்தில் அந்தக்கட்சியின் பிரமுகர்கள் இருவர் ஆற்றிய உரைகள் பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளன.

அந்த இருவரினதும் உரைகளில் எடுத்தாளப்பட்டுள்ள விடயம் அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறந்து விட்டார் என்ற அறிவிப்பானது அந்த அறிவிப்பு விடுக்கப்பட்டதற்காக சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளதா? அல்லது அந்த இடத்தை இனிமேல் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தான் நிரப்பப் போகிறார் என்பதாக குறிப்பிட்டதால் சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளதா? அல்லது அடுத்த தேசியத் தலைவர் யார் என்பதில் ஏற்பட்ட குழப்பநிலையால் சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளதா? ஆராய்ந்தால் இந்த அறிவிப்புக்குப் பின்னாலுள்ள சூட்சுமம் புரிந்து விடும்.

எது எப்படியிருந்த போதிலும் இது ஒரு தற்செயல் நிகழ்வு என்றோ அல்லது ஆர்வக் கோளாறினால் யாரோ ஆற்றிய உரை என்றோ நாம் கருதிவிட முடியாது. இதனை அறிவித்த கட்சியைப் பொறுத்தவரையில் வேலுப்பிள்ளை பிரபாகரன் தேசியத் தலைவரோ இல்லையோ அல்லது அவர் இறந்து விட்டாரோ இல்லையோ என்பதற்கும் அப்பால், தற்போது தமிழீழ விடுதலைப்புலிகள் அரங்கத்தில் இல்லாத நிலையில், அந்த இயக்கத்தின் தொடர்ச்சியாகவுள்ளது எந்தக் கட்சி என்ற வினா தொடுக்கப்பட்டால் அதற்குரிய பதில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்பதாக இருக்க வேண்டும் என்பதே போதைக்கு அவர்களுக்குள்ள குறைந்த பட்சமானதும் அதிகபட்சமானதுமான எதிர்பார்ப்பாகும்.

முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னரான ஈழத்தமிழர் போராட்ட அரங்கில் ஜனநாயகத் தேர்தல் முறை மூலமான பிரதிநிதித்துவம் என்பதைத் தவிர தமிழ் மக்களைத் தலைமைதாங்குவதற்கு வேறு தெரிவுகள் எதுவும் இருக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் முள்ளிவாய்க்காலுக்கு முன்னரான தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவம் என்ற எண்ணக்கரு முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது ஜனநாயக அரசியலில் கட்சிகளின் பல்லினத்தன்மை தவிர்க்கப்பட முடியாதது. ஆனால் இராணுவமயப்பட்ட போராட்டச் சூழலில் அது சாத்தியமாக இருந்தது அந்தவிதமாக ஒரே தலைமை ஒரே லட்சியம் என்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈழப் போராட்ட செல்நெறியை வகுக்கத்தலைப்பட்டனர்.

### திம்புப் பேச்சும் விடுதலைப் புலிகளும்

கடந்த கால வரலாற்றில் இடம்பெற்ற பல பேச்சுவார்த்தைகள் போரிடும் தரப்புகளோடு பேசுதல் மற்றும் அரசியல் கட்சிகளோடு பேசுதல் என்பதாக இருந்த நிலையில், குறிப்பாகத் திம்புப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் தமிழர் தரப்பு என்பது ஒரே இலட்சியத்தைக் கொண்ட தனியொரு தரப்பாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்திருந்தனர் என்பது வரலாற்றைத் திரும்பிப் பார்க்கின்ற எவருக்கும் இலகுவில் புரியக் கூடியதொன்றாகும்.

ஆயினும் இடையில் வந்த இந்திய - இலங்கை ஒப்பந்தமும் இந்திய அமைதிப் படையின் பிரசன்னத்தில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் என்பன தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித்தலைமை என்ற நிலைப்பாட்டை மலினப்படுத்துவதாக அமைந்தது.

ஆயின், அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகள்தான் தமிழர் தரப்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டியவர்கள் என்ற கருத்தை உருவாக்குவதற்குப் போதுமானதாகவிருந்தது. ஜனாதிபதி பிரேமதாசவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற அப்பேச்சுவார்த்தை இந்திய இராணுவத்திற்கு எதிராகப் போரிடுவதற்கு இலங்கை அரசாங்கம் ஆயுதம் வழங்குமளவுக்கும் இறுதியில் இந்திய அமைதிப்படை வெளியேற்றப்படுவதையும் சாத்தியமாக்கிய இராஜதந்திர வெற்றியாக அமைந்திருந்தது.

ஆயினும் பிரேமதாச அரசாங்கத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரராக இருந்த ரஞ்சன் விஜயரத்ன விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய தரப்புக்களோடும் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக அறிவித்தமை புலிகளுக்கு கடும் கோபத்தை உண்டுபண்ணியமையுடன் அதுவே பிந் நாளில் அப்பேசசுவார்த்தை முறிந்து போவதற்கான புலிகள் தரப்பு அதிருப்திக் காரணங்களில் ஒன்றாகவும் இருந்தது.

### தமிழரின் போராட்ட தலைமையாகப் புலிகள்

அதன்பின்னர் நடைபெற்றதெல்லாம் இராணுவரீதியான எழுச்சி மட்டுந்தான். குறிப்பிட்டுச் சொல்வதாக இருந்தால் 1990 ஆம் ஆண்டிலிருந்து அடுத்து வரும் நான்கு வருடங்களுக்கு 1994 ஆம் ஆண்டு வரை புலிகள் இயக்கம் தமிழர்களுடைய போராட்டத் தலைமையாகயாராலும் அசைக்க முடியாத அளவுக்கு ஏகபோகத்துடன் இருந்தது.


இந்தக் காலப் பகுதியில் தான் தமிழீழத் தேசியத் தலைவர் அறிமுகமாகிறார். அதாவது அது வரை காலமும் தம்பி என்றும் அண்ணை என்றும் தலைவர் என்றும் விளிக்கப்பட்டு வந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் 1992 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் மக்கள் முன்னிலையில் வைத்து முதன் முதலில் தமிழீழ தேசியத் தலைவர் என்ற விளிக்கப்படுகிறார்.

அதன் பின்னர் 1994ம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்களிலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமையும் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க காலத்தில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதும் அதனைப் புலிகள் ஒரு தலைப் பட்சமாக முறித்துக் கொண்டதும் புலிகளை ஓரங்கட்டி இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு மற்றும் தீர்வுத்திட்ட வரைபு என்பதாக விடயங்கள் நடைபெறுவதற்குக் காரணமாயிற்று.

தமிழீழ விடுதலைப்புலிகளை போரிடும் தரப்பு என்ற அளவுக்கு மாத்திரம் சுருக்கி வெளிக்காட்டி விட்டு இவ்வாறு விடயங்கள் முன்னெடுக்கப்பட்டமையால் புலிகளின் கோபம் அப்போதைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் தமிழ்க்கட்சிகள் மீதும் திரும்பியிருந்தது. அதன் பின்னர் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக அரசியல் அரங்கிலிருந்து வன்முறை சார்ந்த வழிமுறைகளால் அகற்றப்படலாயினர்.

இராணுவ ரீதியான ஏகத்தலைமை என்பதற்குப் புறம்பாக அரசியல் தளத்திலும் புலிகள் தாமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று நிலைநிறுத்த முற்பட்டமை இதன்மூலந்தான் என்பது அதற்குப் பின்னர் அரங்கேறிய நிகழ்வுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

போர் ஒன்று ஏற்பட்டதற்கான மூல காரணம் கண்டறியப்பட்டு அது தீர்க்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆனால் போரிடும் தரப்போடு பேசி போரை முதலில் நிறுத்தி அது மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதையே ஆரம்பத்தில் செய்திருக்க வேண்டும். இங்கு நடைபெற்றதோ போரிடும் தரப்பு ஒரு புறத்தில் போரைத் தொடர்ந்து கொண்டிருக்க மறுபுறத்தில் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டமையாகும். இது மாப்பிள்ளை இல்லாமல் கலியாணம் நடத்துவதற்கு ஒப்பானதாகவிருந்தது.



### வன்னியில் இருந்து கடும் எச்சரிக்கை

சந்திரிகா அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் நாடாளுமன்றில் முன்வைக்கப்படுவதற்கு முன்னதாக அவ்வரைவு முயற்சியில் முக்கிய பங்கு வகித்த நீலன் திருச் செல்வம் கொல்லப்பட்டார். இரா. சம்பந்தன் அவர்களும் கொலைப்பட்டியலில் இருக்கின்றார் எனச் சொல்லப்பட்டுக் கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. குறித்த தீர்வுத்திட்டம் சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபோது ஐக்கிய தேசியக் கட்சி அதனை எதிர்த்து சட்டமூல நகல்களையும் நாடாளுமன்றத்தில் வைத்து தீயிட்டெரித்தது. ஆனால் இங்கு முரணாக நடந்தேறிய விடயம் என்னவென்றால் மேற்படி தீர்வுத் திட்டத்தில் வடக்கு கிழக்கு இணைப்புடன் அது ஒரு தனிப்பிராந்தியமாக இருந்தமையுடன் காணி பொலிஸ் அதிகாரங்களும் இருந்தன என்ற போதிலும் அதனை ஆதரித்திருக்க வேண்டிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதனை ஆதரிக்கவில்லை. அதற்கு காரணமாக வன்னியிலிருந்து கடுமையான எச்சரிக்கை சென்றதாகக் கூறப்பட்டது.

அத்தோடு தமிழர் தரப்பு ஜனநாயக நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் அச்சுறுத்தலுக்கு உரியதொன்றாகி விட்டது. இதற்கு மாற்றாக தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற விடயம் வற்புறுத்தப்பட்டது.

ஆனாலும் பொதுவாக்கெடுப்பு ஒன்றில் மக்களின் அங்கீகாரம் இல்லாமல் ஏகப் பிரதிநிதிகள் என்ற அந்தஸ்தை வழங்குவதற்கு எந்தத்தரப்பு த்யாராக இல்லை. தமிழர் தரப்பிலும் மாற்றுக் கருத்துடையோர் பலர் புலிகளின் தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற சுய வடிவமைப்பைக் கடுமையாக விமர்சித்தனர். இந்த இடத்தில்தான் தமிழ் மக்கள் இராஜதந்திரமாகச் சிந்திக்க வேண்டியதொரு கட்டாயத்தில் இருந்தனர். உயிர் அச்சுறுத்தலுக்குப் பயந்து தமிழர் தரப்பு தேர்தலைப் புறக்கணித்தால் விரும்பத்தகாதவர்கள் பிரதிநிதிகளாக வரக்கூடிய அபாயம் ஒரு புறமாகவும் புலிகளுக்கு அவர்கள் எதிர்பார்ப்பதைப் போல ஏகப் பிரதிநிதிகள் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் மறுபுறமாகவும் ஒரு 'டீல்' தேவைப்பட்டது.

பூனைக்கு யார் மணி கட்டுவது? புலிகளின் தலைமைக்கு நெருக்கமான சில செயற்பாட்டாளர்கள் ஊடகவியலாளர்கள் எனச் சிலர் ஒன்று கூடிச்செயற்பட்டு அந்த 'டீலைச்' செய்து முடித்தனர். தமிழ்த் தேசிய ஜனநாயக அரசியல் தலைமை ஒன்றை உருவாக்குவதற்கான அந்த டீலில் புலிகளுக்கு அதனை ஏற்றுக்கொள்வதில் இரண்டும் கெட்டான் நிலையிருந்தது. புலிகளைப் பொறுத்தவரையில் அவர்களது செயற்பாட்டு முறைமைக்கு (Modus Operandi) சவாலானபல விடயங்கள் அந்த டீலில் இருந்தன.

புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் யாரையும் மன்னிப்பதில்லை. தங்களது பெயரை யாரும் பயன் படுத்த அவர்கள் அனுமதிப்பதில்லை. இலங்கைப் நாடாளுமன்ற அரசியலில் தமக்கு நம்பிக்கையிருப்பதாக அவர்கள் என்றுமே கூறியதில்லை. இப்படியாகப் பல விடயங்களைக் கூறலாம். ஏற்கனவே ஜனநாயக வழிக்குத் திரும்பியிருந்த சில முன்னாள் போராளி இயக்கங்களை புலிகள் தீண்டத்தகாதவர்களாகவே பார்த்தனர். சமூக விரோதிகள், தமிழினத்துரோகிகள் மாற்று இயக்கங்கள் போன்ற அடைமொழிகளோடுதான் அவர்கள் புலிகளால் குறிப்பிடப்பட்டனர். அத்தகையவர்களை தங்களது இயக்கத் தின் பகுதியாகவோ அல்லது தங்களது பெயரைப் பாவிக்க அனுமதிப்பதையோ புலிகள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். அதேவேளை அத்தகைய முன்னெடுப்பை அதாவது புலிகளின் பாதையில் சொல்வதென்றால் ஒரு தற்காலிக ஏற்பாட்டை அளவுக்கதிகமான சுதந்திரத்தைக் கொடுத்துச் செய்யவும் விரும்பமாட்டார்கள்.

புலிகளின் இலக்கு எப்போதும் தமிழீழத் தனி நாடாகவே இருந்தது. தனிநாட்டுக்கு குறைவான தீர்வு சம்பந்தமான பேச்சுக்களில் புலிகள் நேர்மையற்று இருந்ததற்குக் காரணம் அவர்கள் தாம் வரித்துக் கொண்ட இலட்சியத்தில் நேர்மையாக இருந்ததுதான். ஆக தமிழ் தேசியக் கூட்டமைப்பை எந்த அளவுக்கு புலிகளின் ஒரு முகவர் அமைப்பாக வெளிக்காட்டலாம் என்பதில் புலிகள் மிகக் கவனமாக இருந்தனர். தாங்களின் சொற்கேட்டு நடக்கின்ற அதேநேரம் தமது ஏகப்பிரதிநிதிகள் என்ற ஒருமைத் தன்மைக்குப் பங்கமில்லாமல் நடந்து கொள்கின்ற அமைப்பாகத் தமிழ் தேசியக் கூட்டடமைப்பு இருக்க வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

எந்தவொரு கட்டத்திலும் புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமது அரசியல் பிரிவைப் பிரதியீடு செய்கின்ற அமைப்பாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை என்பதோடு தமது அரசியல் கட்சியாகக் காட்டிக் கொள்ளவும் தயாராக இருக்கவுமில்லை.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# இரண்டாம் தேசியத் தலைவர்; ஏன் இந்த அவசர அறிவிப்பு?

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நான்கு பங்காளிக் கட்சிகளும் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியபோது விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி என்ற புலிகளால் உருவாக்கப்பட்ட கட்சி இன்னமும் தேர்தல் திணைக்களத்தில் உயிர்ப்புடன்தான் இருந்தது. ஆனால் அந்த நான்கு கட்சிகளும் கூட தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒரு பிரிவாக தங்களைக் கரைத்துக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

எனவே இரண்டு தரப்புக்களும் ஒன்றுக்கொன்று கிட்ட நெருங்கி வராதவையாக இருந்த நிலையில் தற்காலிக ஏற்பாடாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தங்களுக்கு கட்டுப்பட்டு இயங்க அனுமதிப்பதென்று புலிகளும் தங்களது அரசியல் செயற்பாடுகளுக்கு புலிகளின் அனுமதியைப் பெற்றுவிடுவது என்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அந்த டீலைச் செய்து முடித்தன.

இந்த டீல் நடைபெற்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே உருவாக்கம் பெற்றிருந்தது என்பதே யதார்த்தம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது இரண்டு படிமுறைகளினூடாகச் செய்து முடிக்கப்பட்டது. முதலாவது பங்காளிக் கட்சிகளை ஒன்றிணைத்தல் இரண்டாவது கூட்டமைப்பு செயற்படுவதற்கான புலிகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

**யார் புலிகளின் தொடர்ச்சி?**

இந்த ஒழுங்கில் ஆராய்ந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளின் தொடர்ச்சியா என்ற கேள்விக்கு விடை கிடைக்கும். அப்படியென்றால் யார் புலிகளின் தொடர்ச்சி? இது மிகவும் சிக்கலானதொரு கேள்வி என்பதுடன் அதன் பரிமாணமும் வேறு. ஏனெனில் புலிகளின் தொடர்ச்சி என்பது செயற்பாட்டுத் தொடர்ச்சி என்பதை விடவும் அதன் தலைமையின் தொடர்ச்சி என்பதாகத்தான் புரிந்து கொள்ளப்படுகிறது. ஆனால் தலைமையின் தொடர்ச்சி என்பது தலைமை வெற்றிடம் ஒன்று ஏற் பட்டுள்ளது என்பதை வெளிப்படை யாக ஏற்றுக் கொள்ளாமல் சாத்தியமற்றது.

ஆகவே வேலுப்பிள்ளை பிரபாகரன் இன்னமும் உயிருடன் இருக்கிறாரோ இல்லையோ புலிகளின் தொடர்ச்சியாக தன்னைக் காட்டிக்கொள்ள விரும்பும் எந்தக் கட்சிக்கும் அவர் இறந்து விட்டார் என்று அறிவிக்க வேண்டிய அவசியம் எழுவது இயல்பானதே.

2010ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் ஆசனப்பங்கீட்டின் போது ஏற்பட்ட பிணக்கையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி அதற்குக் காரணமாக புலிகளால் முன்னர் வேட்பாளர்களாக நியமனம் செய்யப்பட்ட பலருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்புமனுவில் இடம் கொடுக்கவில்லை என்று அறிவித்ததனூடாக தாமே புலிகளின் தொடர்ச்சி என்பதாகத் தன்னை வெளிக்காட்டிய அக்கட்சி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்று பெயரை மாற்றித் தம்மை அறிமுகம் செய்து கொண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டது. அப்போது அவர்களது பிரசார கோசம் SMS ஐ தோற்கடிப்போம் என்பதாக இருந்தது. இந்த மூன்று எழுத்துக்களும் முறையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன், மாவை சேனாதிராசா மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரைக் குறிப்பிடுவதாக இருந்தது. அதிலும் குறிப்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தானே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை தோற்கடிக்கப்போவதாகச் சபதம் எடுத்துக் கொண்டு திருகோணமலையில் போட்டியிட்டுப் படுதோல்வியடைந்தார்.

அவர் எதற்கு ஆசைப்படுகிறார் என்பதற்கு அவர் யாரை எதிர்த்துப் போட்டியிடத் துணிந்தார் என்ற வினாவுக்கு விடையளிக்க வேண்டும். 2010 நாடாளுமன்றதேர்தல் படுதோல்விக்குப் பின்னர் கஜேந்திரகுமாருக்கு இருந்த ஒரேயொரு தெரிவு மீண்டும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப் போடு இணைவதுதான்.

ஆனால் கஜேந்திரகுமாரைப் பொறுத்தவரையில் அதனைச் செய்ய முடியாதளவுக்கு புதிய தலையிடி ஒன்று காத்திருந்தது. ஆம், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அரசியல் மூப்பை குழப்புவதாக புதிய வருகை ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இடம்பெற்றிருந்தது. அது வேறுயாருமில்லை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அல்லும் பகலும் நித்திரையிலும் ஏன் கனவிலுங்கூட உச்சரிக்கும் பெயர் அவர்தான் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைப் பொறுத்த வரையில் நாடாளுமன்ற உறுப்பினராக அவரது மூப்பு சுமந்திரனை விட ஒரு முழுப்பதவிக்காலமும் அதற்கு முன் சில வருடங்களும் என்பதாக இருந்த போதிலும் இப்போது நிலைமை தலைகீழாக மாறியிருந்தது.

கட்சி விட்டோடியாக மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் வந்தாலும் இப்போது அவரது மூப்பை வலியுறுத்துவதென்பது அதனை அவர் முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டிய ஒன்றாகவிருக்கும். அதனை விட தனித்துச் செயற்பட்டு மாற்று அணியாகத் தோற்றம் பெறுவது என்பது பதவி அரசியலில் இருகோடுகள் கோட்பாட்டை ஒத்த ஒப்பீட்டளவில் சிறந்த தெரிவாகும். அதனையே அவர் செய்தார்.

**உச்சாடனத்தின் ரகசியம்**

இனித் தலைமைப் பதவியிலுள்ளவர்களையும் தலைமைப்பதவிக்கு வரக்கூடியவர்களையும் குறிவைத்துத்தாக்க வேண்டியதுதான். சம்பந்தன் சுமந்திரன், சம்பந்தன் சுமந்திரன் என்று எதற்கெடுத்தாலும் இந்த இரண்டு பெயர்களையும் மாறிமாறி கஜேந்திரகுமார் அவர்கள் உச்சாடனம் செய்வதன் இரகசியம் இதுதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனாலோ அல்லது அதன் பேச்சாளர் சுமந்திரனாலோ சாதிக்க முடியாத எதனையும் கஜேந்திரகுமார் சாதிக்கப்போவதில்லை ஆனாலும் கஜேந்திரகுமாரைப் பொறுத்தவரை தலைமையைக் கைப்பற்றுவதே இப்போதைக்குப் பெரிய சாதனையாகக் கருதுகிறார் போலும். தந்தைக்குப் புலிகள் இயக்கம் வழங்கிய மாமனிதர் என்ற கௌரவம் தனிப்பட்ட ரீதியில் புலிகளால் ஒப்படைக்கப்பட்ட சில பணிகள் என்று சில விடயங்கள் தன்னை தமிழ் அரசியல் அரங்கில் இரா. சம்பந்தனுக்குப் பின்னர் அரசியல் மூப்புக்கள் எல்லாவற்றையும் தாண்டி மற்றவர்களை முந்திச் செல்ல வைக்கும் என்றே காய்களை நகர்த்தினார். அந்தோ மீண்டும் பின்னடைவு!

நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் களமிறக்கப்படுகிறார். இப்படியாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமைக் கனவு மேலும் ஒரு தடவை பின் தள்ளப்பட்டது.

முதலமைச்சர் நீதியரசர் சீ.வி. விக்னேஸ்வரன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கட்சி விசுவாசத்திற்கு புறம்பாக செயற்படத் தலைப்பட்டபோது அந்த நிலைமையை சில தரப்புகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைமைக்கு எதிரானதொரு மாற்றுத் தலைமை உருவாக்கமாக மடைமாற்றம் செய்தபோது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாற்றுத் தலைமை வரிசையில் தான் இரண்டாவது இடத்திற்கு வருவதற்கென்று காய்களை நகர்த்தி இருந்தார். பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள், தமிழ் மக்கள் பேரவை உருவாக்கம், எழுகதமிழ் மற்றும் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிரான ஆர்ப்பாட்டம் என்று பல தளங்களில் அதனை அவர் செய்து முடித்திருந்தார்.

இப்படியாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கிட்டிய கடந்தகால அரசியல் நடவடிக்கைகள் யாவும் மாற்றுத் தலைமையை வலியுறுத்துவதாகவே இருந்தது. இரா. சம்பந்தனின் தலைமையைச் சமப்படுத்தக் கூடிய பல அடையாளங்கள் சீ.வி. விக்னேஸ்வரனிடம் இருப்பதாகக் கருதி அவரை இரா. சம்பந்தனுக்கு மாற்றாக முன்னிறுத்த முயன்றவர்களுக்கு கடந்த உள்ளூராட்சி சபைகள் தேர்தலின் போது சீ.வி. விக்னேஸ்வரன் அவர்கள் எடுத்த நிலைப்பாடு ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது.

**உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியின் பின்...**

உள்ளூராட்சி தேர்தலில் மாற்று அணியொன்றிற்கு சீ.வி. விக்னேஸ்வரன் தலைமை தாங்குவார் என்று பலரும் எதிர்பார்த்த போதிலும் அவரது செயற்பா டின் மையே பெரிதும் வெளிப்பட்டு நின்றது. ஆனாலும் உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு கணிசமான உறுப்பினர்கள் சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரு காலத்தில் தன்னையும் மற்றவர்களையும் தலைமை தாங்க வருமாறு சீ.வி. விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்ததை மறந்து புதிய தெம்புடன் சீ.வி. விக்னேஸ்வரனுடன் இணைவதற்கு நிபந்தனை விதிக்கும் அளவுக்குத் தேர்தல் வெற்றி அவரை மாற்றி இருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக மாற்று அணி ஒன்றை உருவாக்க நினைப்பவர்கள் தாம் தேசியத்தோடு நிற்கின்றோம் என்பதாகத் தம்பட்டம் அடிப்



பதுடன் தேசியம் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அதன் தலைமைக்குமான விசுவாசமாக வியாக்கியானம் செய்கின்றனர். அது மறைமுகமாக தங்களை தமிழீழப் போராளிகளாக வெளிப்படுத்தும் என்றும் நம்புகின்றனர்.

இந்த எண்ணக்கரு தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பதில் அல்லது வாக்குகளை சுவீகரிப்பதில் ஓர் கவர்ச்சிகரமான உபாயமாகும் என்பது சிலரது எண்ணம். இத்தகைய நிலைப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் சிலரிடம் இருக்கின்றது. இது இறுதி இலக்கை அடைவதற்கான வேலைத்திட்டமில்லாத வெற்று உபாயம் மட்டுமே. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான அணியாக இனிவரும் காலங்களில் தோற்றம் பெற நினைக்கும் எந்த அணியும் தம்மை புலிகளின் தொடர்ச்சியாகவே வெளிப்படுத்த வேண்டியிருக்கும். கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அந்த வரன்முறையை பற்றியே அரசியல் செய்து வருகின்றார். அப்படியென்றால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை இரண்டாம் தமிழீழத் தேசியத் தலைவராக அறிவிக்க வேண்டிய அவசரம் திடீரென்று ஏன் ஏற்பட்டது? இதற்கான காரணங்கள் நம்புவதற்கு கடினமாக இருந்தாலும் இனிமேல் நம்பித்தான் ஆக வேண்டும் என்ற அளவிற்கு சம்பவங்கள் நடந்தேறி விட்டன.

வேலுப்பிள்ளை பிரபாகரன் இறந்து விட்டார் என்றும் இனிமேல் கஜேந்திரகுமார் பொன்னம்பலமே இரண்டாவது தமிழீழத் தேசியத் தலைவர் என்றும் அறிவிக்க வேண்டிய நேரத்தை தீர்மானித்தது வடக்கு அரசியலில் ஆழ ஊடுருவியுள்ள ஓர் இரட்டை முகவர்தான் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

ஆம், வடக்கு மாகாண சபையில் பதவி வகிக்கும் அமைச்சர் ஒருவரின் உதவியாளராகத் தன்னைக் காட்டிக் கொண்டு தமிழ்த் தேசிய அரசியலை வேறு ஒரு தடத்திற்கு இழுத்துச் செல்லும் வேலைகளைத் திரைமறைவில் செய்து கொண்டிருக்கும் சகோதர இனத்தைச் சேர்ந்த அந்த மர்மநபர், குறித்த அமைச்சர் நீண்டகால நோக்கில்தான் ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக மத்தியில் வர விரும்புகின்றார் என்ற அவரது எதிர்பார்ப்பிற்கு வழி சமைத்துக் கொடுப்பதாக கூறிக்கொண்டு பல விடயங்களை செய்து முடித்துள்ளார். அமைச்சருடைய தேர்தல் உபாயமும் தன்னை புலிகளின் தொடர்ச்சியாகக் காட்டிக் கொள்வதுதான் அதற்குரிய பின் புலமும் அவருக்கு ஏற்கனவே உள்ளது என்றும் சொல்லலாம்.

**மீண்டும் புலிச் சின்னம்**

அதன்பொருட்டு அவர் எடுத்த முதலாவது படி தென்னிந்தியாவில் தன்னை புலிகளின் தொடர்ச்சியாகக் காட்டிக் கொள்ளும் சீமான் அவர்களுடைய அதே சாயலில் உள்ளது. அதாவது குறித்த அமைச்சர் அந்த இரட்டை முகவர் ஊடாக தனக்கென்று ஒரு தனியான அரசியல் கட்சியை உருவாக்கிக் கொள்ளவும் அக் கட்சியின் சின்னமாக புலிச்சின்னத்தை தெரிவு செய்யவும் முயன்று அதில் அரைகுறை வெற்றியும் கண்டுள்ளார்.

இப்போது சீ.வி. விக்னேஸ்வரன் போட்டியிடுவதற்குப் புலிச் சின்னம் தயார். அமைச்சரும் சீ.வி. விக்கினேஸ்வரனும் இன்னும் சிலரும் புலிகளின் தொடர்ச்சி என்று கூறி புதிய அணி ஒன்றை உருவாக்கப் போகிறார்கள். விரும்பினால் வந்து இணையலாம் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் அழைப்பு விடுக்கப்படும். இனிமேல் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தன்னை புலிகளின் தொடர்ச்சியாக காட்டுவதற்கு என்ன செய்வார்? பாவம்! தன்னை இரண்டாவது தமிழீழத் தேசியத் தலைவராக அறிவித்து விட வேண்டியது தான். இந்த அறிவிப்பு அவரை 23 ஆம் புலிகேசியின் நிலைக்கு தள்ளுமென்று அவர் கனவிலும் கூட நினைத்திருக்க மாட்டார். ★



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

தரம்-5 32

### பகுதி - I

36) நீரில் கரையும் பொருள்

1. தேங்காயெண்ணெய் 2. மெழுகு 3. உப்பு

37) முழு உருவத்தினதும் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு?

1. இரு மடங்காகும்
2. மூன்று மடங்காகும்
3. நான்கு மடங்காகும்.



38) பாடசாலைப் பிள்ளைகளின் சித்திர,கைப்பணிக் கண்காட்சி ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்தது. அது 8 நாள்களாக நடைபெற்ற தெனின் முடிவடைந்த நாள்?

1. சனிக்கிழமை 2. வெள்ளிக்கிழமை 3.வியாழக்கிழமை

39) மூன்று மனித்தியாலத்திற்கு ஒரு தடவை ஒலிக்கின்ற ஒரு கடிகாரம் உள்ளது. அது மு.ப 07.00 இற்குஒலித்தது. அது அடுத்தாக ஒலிக்கும் இரண்டு சந்தர்பங்களைத் தருக

1. மு.ப 10.00 உம் பி.ப 1.00
2. மு.ப 11.00 உம் பி.ப 1.00
3. மு.ப 10.00 உம் பி.ப 2.00

40) ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த சிறுவன் ஒருவன் 20 மீற்றர் கிழக்கு நோக்கியும் அவ்விடத்திலிருந்து 10 மீற்றர் கிழக்கு நோக்கியும் மீண்டும் 15 மீற்றர் வடக்கு நோக்கியும் சென்று பயணத்தை முடித்தான். அச்சிறுவன் இப்போது தொடக்க இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளான்?

1. 15 மீற்றர் 2. 10 மீற்றர் 3. 5 மீற்றர்

### பகுதி- II

1) பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்கவும்.

எத்தனை விதம் விதமான பழங்களை நீங்கள் எனக்குத் தந்திருக்கிறீர்கள். ஆனால் சுதந்திரமாகப் பறந்து திரிந்து மரங்களிலே பழுத்திருக்கும் கனிகளைக் கொத்தித் தின்பதிலுள்ள சுவை இதிலே கிடைத்திடுமா? முனபெல்லாம் சின்னஞ்சிறிய வயிற்றுக்கு உணவாகத் தானியங்களையும் தேடிச் செல்வேன். பரந்த வயல் வெளிகள் எமது நிறத்தைப் போலவே பசுமையாகக் காட்சியளிக்கும். கதிர் சுமந்த நெல்லினங்கள் எம்மைத் தலையசைத்து வரவேற்கும்.

i. எம்மைத் தலையசைத்து வரவேற்பன எவை என இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன?

..............................................................................

ii. விசிறியும் சுழியும் இடப்பட்டுள்ள ஒரு சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக

..............................................................................

iii. இப்பந்தியில் இடம்பெறும் ஒத்தகருத்துள்ள சொற்கள் இரண்டை எழுதுக

..............................................................................

iv. பின்பு என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக

..............................................................................

v. இப்பந்தியில் இடம்பெறும் முன்னிலைப் பன்மைச் சொல்லை எழுதுக

..............................................................................

vi. இப்பந்தியில் கையாளப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக

..............................................................................

2) அ. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக

i. ...................................... தொழிலுக்கு ஒப்பான தொழில் இவ்வுலகில் இல்லை.

(உளவுத்\உழவுத்)

ii. தொழிலாளி நெற்றி ...................................... (வியர்வை\வேர்வை ) நிலத்திலே சிந்தி உழைத்தான்.

iii. உணவு உண்பதற்கு முன் ...................................... (சவுக்காரம் \ சவர்க்காரம் ) இட்டுக் கைகளைக் கழுவ வேண்டும்.

ஆ. பின்வரும் கூற்று சரியெனின் சரி எனவும் பிழையெனின் பிழை எனவும் எழுதுக

i. 'சகோதரர்கள்' உயர்திணை ஒருமைப் பெயர்ச் சொல் (............)

ii. 'இருந்தனர்'என்பது இறந்தகாலப் பன்மைவினை முற்று (..............)

3) பின்வருவனவற்றிற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக

i. வேம்புக்கு கன்றுபோல் பனை ............................ (குட்டி,வடலி)

ii. மான் கூட்டம் போல் ஆடு ............................ ( மந்தை,கும்பல் )







நாம் இன்று இப்படி இருப்பதற்கு நாமே பொறுப்பு இனி எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ... அப்படி நம்மைச் செய்து கொள்வதற்கான ஆற்றலும் நம்மிடம் உள்ளது.

- விவேகானந்தர் -


## நிறம் தீட்டலாம் வாங்க



## வரைந்து பழகலாம்



## 06 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்





## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : காலைக்கதிர் சிறுவர் கஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

# இராம காவியத்தின் பாதுகையும் தற்காலத்தின் அவமானச் சின்னமும்!

லெ.முருகபூபதி ஆஸ்திரேலியா

பல வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் வெளியான சிரித்திரன் இதழில் ஒரு நகைச்சுவைத்துணுக்கு கேலிச் சித்திரத்துடன் வெளியாகியிருந்தது.

ஒரு இளம் யுவதியைப் பார்த்து ஓர் இளைஞன் 'டார்லிங் டாட்டா' என்று குறும்பு செய்வான். அதற்கு அவள், தனது காலைத்தூக்கி, காலிலிருக்கிறது பாட்டா என்று தனது செருப்பைக் காட்டுவாள்.

டாட்டாவுக்கு பதில் பாட்டா!!!!

செருப்புக்குத்தான் எத்தனை பெயர்கள்? செருப்பு, பாதுகை, பாதணி, சிலிப்பர், தொங்ஸ். இந்தப் பதிவுக்கு 2008 ஆம் ஆண்டு டிசெம்பரில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மீது ஈராக் பத்திரிகையாளர் மண்டேசர் அல் ஸைதி வீசிய பாதணியும் சென்னையில் 2015 ஆம் ஆண்டு முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் எம். கே. நாராயணன் மீது பிரபாகரன் என்ற ஈழ அகதி வீசிய பாதணியும்தான் அடிப்படையாக அமைந்தது.

இந்த முன்னாள்கள் மீதுதான் எவ்வளவு கோபம் இவர்களுக்கு. நெஞ்சில் கனன்றுகொண்டிருக்கும் நெருப்பு இவ்வாறுதான் பாதணியாக மாறி கொப்பளிக்குமோ?

சென்னையிலிருந்து வெளியாகும் 'த ஹிந்து,' நாளிதழ் குழுமத்தின் ஆய்வு அமைப்பான அரசியல் மற்றும் பொதுக் கொள்கைக்கான ஹிந்து மையம் என்ற இயக்கத்தினால் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளின் எதிர்காலம் குறித்து சென்னையில் மியுசிக் அக்காடெமியில் கருத்தரங்கு நடந்தது.

(இன்றும் பல்லாயிரம் இலங்கை அகதிகள் அங்கு எதிர்காலக்கனவுகளுடன் தவிக்கிறார்கள் என்பதும் சமகால அவலம்தான்)

அதில் கலந்துகொண்ட இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் எம். கே.நாராயணன் உரையாற்றிவிட்டு வெளியே வரும்பொழுது புதுக்கோட்டையைச் சேர்ந்த பிரபாகரன் என்பவர் தமது செருப்பினால் அவரை அடித்துள்ளார். இந்தப் பிரபாகரன் என்ற பெயர்தான் இன்றும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திக் கொண்டிருப்பதுடன் என்றும் வாழும் பெயராகவும் மாறிவிட்டுள்ளது.

யானை வாழ்ந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் பொன் என்பதுபோன்று பிரபாகரன் உயிரோடு இருந்தபொழுதும் பேசப்பட்டார் - இறந்த பின்னும் பேசப்படுகிறார்.

அவர் இறந்துவிட்டார் என்று பகிரங்கமாகப் பேசுவதும் பாவகரமான காரியம் என்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசிய முன்னணியின் மே தினக்



கூட்டத்தில் குழப்பமும் தோன்றியது!

விஜயகாந்தும் தமது ஒரு படத்துக்கு கப்டன் பிரபாகரன் என்று பெயர் வைத்ததுடன், தனது மகன் ஒருவருக்கும் அந்தப் பெயரைச் சூட்டினார். ஒரு காலத்தில் பிரபாகரன் என்ற பெயருள்ள தமிழ் இளைஞர்கள் கொழும்புவிமான நிலையத்தின் ஊடாக வெளிநாடு செல்வதற்கும் அஞ்சினார்கள்.

செருப்பு என அழைக்கப்படும் பாதுகைக்கு இராமாயண காவியத்திலிருந்தே பெரும் சிறப்புத் தொடருகிறது. பாதணி மக்களின் பாதுகாப்புக்குரியது. வருவாய்க்குரியது. எத்தனையே குடும்பங்களின் வாழ்வை வளம்படுத்தியிருக்கிறது.



ரஷ்யாவின் முன்னாள் அதிபர் ஜோசப் ஸ்டாலினின் தந்தையும் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளிதான்.

கற்காலத்திற்குப் பிற்பட்ட மனிதன் மிருகங்களை வேட்டையாடி தனது பசியைப் போக்கிக்கொண்டமையயுடன் மிருகங்களின் தோலில் செருப்பும் செய்து அணிந்து நாகரிக உலகுக்கு வழிகாட்டினான்.

இராமாயண பரதன் தனது அண்ணன் இராமனின் பாதுகையைப் பெற்றுச் சென்று அரியணையில் வைத்து அரசாண்டான்.

இந்தியாவில் ஆளுநராகவும் இருந்த மூதறிஞரும் சுதந்திரா கட்சியின் ஸ்தாபகருமான ராஜாஜியிடம் ஒரு பஞ்சாயத்து வழக்கு வந்தது. அவர் குற்றவாளியான ஒரு செருப்புத்தைக்கும் தொழிலாளியின் கையில் ஒரு செருப்பைக் கொடுத்து அதில் சத்தியம் செய்து தரும்படி சொன்னதும் அவன் தயங்கி குற்றத்தை ஒப்புக்கொண்டான். காரணம் அவனுக்கிருந்த தொழில் பக்தி.

இலங்கை இலக்கிய நண்பர் டொமினிக் ஜீவாவின் பாதுகை என்ற சிறுகதை அந்நாளில் இலக்கிய வட்டாரத்தில் அதிகம் பேசப்பட்டது.

ஜீவா, ராஜாஜி வாழ்வில் நடந்த அச் சம்பவத்தை தழுவித்தான் அக்கதையை எழுதிவிட்டதாக பலரும் அவரை விமர்சித்தார்கள். அவர் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந் தமையினால் அக்காலத்து தமிழரசுக் கட்சியினர் அவரைப் பாதுகை திருடியவர் என்றும் விமர்சித்தனர்.

சில இலக்கிய விமர்சகர்கள்; இலங்கையில் பாதுகை என்று சொல்லும் வழக்கம் இல்லை. யதார்த்த இலக்கியவாதி எப்படி அந்தச் சொல்லை பயன்படுத்தினார்...? என்றும் ஜீவா, சாலையின் திருப்பம் என்று மற்றும் ஒரு சிறுகதை எழுதியதும் இலங்கையில் வீதியையும் தெருவையும் சாலை என்று அழைப்பதில்லை என்றும் விமர் சித்தனர்.

ஆனால், ஜீவா அந்த விமர்சனங்கள் குறித்து அலட்டிக்கொள்ளாமல் தனது சிறுகதைத் தொகுதிகள் இரண்டுக்கும் பாதுகை, சாலையின் திருப்பம் என்றே பெயரிட்டார். இரண்டு நூல்களும் தமிழ் நாட்டில் வெளியானாலும் இலங்கையிலும் பரவலான வாசிப்புக்கு கிட்டியது. இரசிகமணி கனக. செந்திநாதன் எழுதிய ஈழத்து இலக்கிய வளர்ச்சி நூலிலும் பாதுகை சிறுகதை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜீவாவின் பாதுகை சிறுகதையின் நாயகன் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் செருப்புத்தைக்கும் முத்து முகம்மது என்ற தொழிலாளி. ஜீவா எனக்கு அவரை 1975 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியிருக்கின்றார். செருப்பு தைக்கும் தெருவோரக் கடையொன்றில் கண்டேன். அவர்தான் பாதுகை நூலுக்கும் முன்னுரை எழுதியவர்.

தொழிலாள விவசாயப் பாட்டாளி மக்களுக்காக அன்று எழுத்தை ஆயுதமாக்கிய ஜெயகாந்தன் முதல் இலங்கையில் பல முற்போக்காளர்களும் அவ்வாறு விளிம்பு நிலை மக்களையே தமது படைப்புகளில் நாயகர்களாக்கினர்.


ஜெயகாந்தனும் தமது பால்ய காலத்தில் ஒரு கடையில் செருப்புத்திருடி

**ஜோர்ஜ்புஷ் மீது சப்பாத்து வீசியவர் தேர்தலில் நிற்கிறார்!! பாதணி மகத்மியத்திற்குள் தான் எத்தனை கதைகள்!!!**

முழுநாள்பொழுதும் அது தேயத்தேய நடந்து திரிந்துவிட்டு, ஒரு பாலத்தின் அருகில் வந்ததும் எடுத்து நதியில் வீசி விட்டுச்சென்றேன் என தனது திரும்பிப்

**சொல்லத் தவறிய 11 கதைகள்**

பார்க்கின்றேன் தொடரில் எழுதியிருக்கிறார்.



எழுத்தாளனாகியதும் ஆனந்த விகடனில் புதுச்செருப்பு கடிக்கும் என்ற சிறுகதையும் எழுதினார். அதனைத் திரைப்படமாக்கிய அன்பழகன் தற்பொழுது சிங்கப்பூரில் வசிக்கிறார். ஆனால், படம் திரைக்கு வரவேயில்லை.

ஆஸ்திரேலியாவுக்கு 1987 ஆம் ஆண்டு புறப்படும் முன்னர் நண்பர் கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் யாழ்ப்பாணம் நல்லூரில் அவர் தங்கியிருந்த இல்லத்தில் எனக்கும் ஜீவாவுக்கும் கவிஞர் புதுவை ரத்தினதுரைக்கும் வழங்கிய இராப்போசன விருந்தின் பின்னர்; அவருடைய சுவாமி அறையையும் எனக்கு காண்பித்தார். அங்கு ஓர் அதிசயத்தை தரிசித்தேன்.

தன் வாழ்நாள் முழுவதும் கம்பன் புகழ் பாடிய தமிழ்நாடு கம்பனடிப்போடி சா. கணேசன் அவர்களின் பழைய தேய்ந்த ஒரு சோடி செருப்பை அங்கு



பீடத்தில் வைத்திருந்தார்.

தினமும் அதற்கும் பூசை பிரார்த்தனை செய்தவர் கம்பவாரிதி.

இராமனின் பாதுகை அயோத்தியின் அரண்மனை அரியணையில் அமர்ந்தது போன்று கம்பவாரிதியின் சுவாமி அறையில் கம்பனடிப்போடியின் செருப்புகள் கொலுவிருந்தன.

ஆனால், எமது சமூகத்தில் செருப்பு, சப்பாத்து, சிலிப்பர்களை வீட்டின் வெளியே வைப்பார்கள். குளியலறைக்கு தனியாக வேறு ஒரு சோடி வைத்திருப்பர். தொழிற்சாலைகளில் பணியாற்றுவோர் பாதுகாப்பு பாதணி (Safety Boots) அணியவேண்டும் என்பது சட்டம். சத்திர சிகிச்சை அறைகளில் பணியிலிருப்பவர்களுக்கென விசேடமான பாதணிகள் இருக்கின்றன.

இவ்வாறு இடத்துக்கு தக்கவாறு பாதணிகளின் வடிவமும் அவற்றின் பெயர்களும் மாறும். குதியுயர்ந்த பாதணி அணிந்த பெண்கள் விபத்துக்களுக்கும் இலக்காகியுள்ளனர். மரணங்களும் சம்பவித்துள்ளன.

பாதணிக்குரிய மரியாதையும் இடத்துக்கு இடம் மாறுகிறது. கோபம் உச்சத்தில் உயர்ந்தால் அதன் அர்த்தம் மாறி விடுகிறது.

செருப்பாலே அடிப்பேன்.... செருப்பு பிய்ஞ்சிடும்.... என்ற வார்த்தைப் பிரயோகங்கள் எமது சமூகத்தில்



மட்டுமல்ல பிற சமூகங்களிலும் இடம் பெறுகின்றன.

பல உலகத்தலைவர்கள் மீது வெறுப்புக்கொண்டவர்கள் செருப்பைத் தூக்கி எறிந்த சம்பவங்கள் நடந்துள்ளன. இது விடயத்தில் முன்னாள் அமெரிக்க அதிபர் புஷ்ஷும் தப்பிக்கவில்லை. இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் மீதும் மனிதனின் பாதங்களை பாதுகாக்கும் பாதணி பதம் பார்த்துள்ளது. அவரை தமது பாதணியால் அடித்த பிரபாகரனுக்கு இந்திய சட்டத்தில் என்ன தண்டனையோ தெரியவில்லை? ஆனால், அந்தப் பாதணி தொடர்ந்தும் அவரிடமிருந்தால் முன்னாள் இந்திய பாதுகாப்பு ஆலோசகரை பதம் பார்த்தது என்ற பெருமையுடன் அதே பிரபாகரனிடம் இருந்து அவரைப் பார்க்கவருபவர்களின் கண்காட்சிக்குப் பொருளாகலாம்!


(19 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியக் கிரிக்கெட் வீரர்களிடமும் மூட நம்பிக்கைகள்

மூட நம்பிக்கைகள் அதிகம் பின் பற்றப்படும் நாடு இந்தியா. வண்டிகளில் எலுமிச்சை கட்டி தொங்க விடுவதில் இருந்து. தெருக்களில் தேங் காய் உடைப்பது வரை நாம் எண்ணற்ற பழக்க, வழக்கங்களை ஏன்? எதற்காக? செய்கிறோம் என்ற புரிதலே இல்லாமல் செய்து வருகிறோம். சரி! இது நம் இரத் தத்தில் கலந்துவிட்ட ஒன்று.

இதை மாற்றுவது கடினம் என்று சாக்குப்போக்கு சொல்லி தட்டிக்கழித்து விடுவோம். நாம் மட்டும் தான் இப்படி யான மூட நம்பிக்கைகளை பின்பற்றுகி றோமா? பிரபலங்களாகவே இருந்தாலும் கூட அவர்களும் இந்தியாவில் பிறந்த வர்கள் தானே. இதோ! நமது இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் மற்றும் இந்நாள் வீரர்கள் மைதானத்தில் பின் பற்றி வந்த /பின்பற்றி வரும் சில பழக்க வழக்கங்கள். தாங்கள் பின்பற்றி வரும் இந்த பழக்க வழக்கங்கள் தங்களுக்கு அதிர்ஷ்டம் மற்றும் வெற்றியை தேடித் தருவதாக இவர்கள் கருதுகிறார்கள்.






டோனி

டோனி என்றால் ஹெலிகாப்டர் ஷொட், கப்டன் கூல் நினைவிற்கு வருவது போலவே, அவரது ஜெர்ஸி நம்பரான ஏழும் நினைவிற்கு வரும். அவர் பிறந் தது ஏழாவது மாதத்தின் ஏழாம் நாளில் என்பதால் ஏழை தனது லக்கி நம்பராக கருதுகிறார். இதனால் தான் டோனி தனது ஜெர்ஸி எண்ணை ஏழாக தேர்வு செய்திருக்கிறார். டோனியின் அதிர்ஷ்ட இலக்கம் ஏழு தான்.

**யுவராஜ் சிங்**

டோனியை போன்ற அதே அதிர்ஷ்டத் தைப் பின்பற்றுகிறார் யுவராஜ் சிங்கும். யுவராஜ் சிங் பிறந்தது ஆண்டின் 12 ஆவது மாதத்தின், 12 ஆவது நாளில். இதனால் யுவராஜ் 12 ஆம் எண்ணை தனது லக்கி நம்பராக கருதுகிறார். டோனி - யுவராஜ் ஒரு சிறந்த காம்போ. இவர்கள் இவர்களுக்குள் சண்டை இருந்ததாக கூறப்பட்டாலும். 2011 ஆம் ஆண்டு உலக கோப்பை இறுதிப் போட்டியில் கடைசி வரை கிரீஸில் நின்று இவர்கள் ஆடிய விளையாட்டை எந்நாளும் மறக்க முடியாது.



**அஸ்வின்**

நடப்பு ஐபிஎல் தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை சிறந்த முறையில் வழிநடத்தி வருகிறார் அஸ் வின் தன்னிடம் ஒரு பை வைத்தி ருக்கிறாராம். அது அவருக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த அணிக்கும் லக் என்று கருதுகிறார்கள். எப்போதெல்லாம் அஸ் வின் அந்தப் பையை எடுத்து வருகி றாரோ அப்போதெல்லாம் அணி வெற்றி பெறுகிறதாம்.



**கங்குலி**

பி.சி.சி.யில் முக்கிய பொறுப்பு வகிக் கும் கங்குலி இந்திய அணிக்காக விளையாடிக் கொண்டிருந்த போது, மைதானத்தில் களமிறங்கும் போது மறக்காமல் தனது பாக்கெட்டில் தனது குருவின் படத்தை வைத்துக் கொள்வா ராம். தனது குருவை கடவுளாக கருது கிறார். அவரது படத்தை உடன் வைத்தி ருப்பதால் வெற்றி வந்து சேரும். அவரது ஆசி எப்போதுமே தனக்கு கிடைக்கும் என்று கருதினார் கங்குலி.



**ஷஹீர் கான்**

இந்தியாவின் சிறந்த இடது கை பந்து வீச்சாளர். ஷஹீர் கான் போட்டி நாள் களில் தனது பாக்கெட்டில் மஞ்சள் நிற கைக்குட்டை ஒன்று வைத்துக் கொள்வார். ஒரு போட்டியும் தவறவிடாமல் இந்த பழக் கத்தை ஷகீர் பின்பற்றி வந்துள்ளார். மைதானத்தில் இந்த கைக்குட்டை வைத் துக் கொள்வது தனக்கு லக்காக அமை யும் என்று கூறியுள்ளார் ஷஹீர்.



**ராகுல் டிராவிட்**


சீனாவிற்கு ஒரு பெருஞ்சுவர் போல, இந்திய கிரிக்கெட் அணிக்கு ஒரு பெருஞ் சுவர் ராகுல். சச்சின் தனது இடது கால் காப்பு கட்டுவதை போல, ராகுல் டிராவிட் தனது வலது தொடை காப்பை கட்டுவதை பழக்கமாக வைத்திருந்தார்.


மேலும், போட்டியின் போது எப்போதும் புது பேட்டை பயன்படுத்தும் பழக்கம் இல்லை என்றும் கூறியுள்ளார்.

**அனில் கும்ப்ளே**

உலகின் சிறந்த சுழற்பந்து வீச்சாளர் களில் ஒருவர் அனில். இவர் ஒரே போட்டியில் பத்து விக்கெட்டுகள் எடுத்து சாதனை செய்தவர்.

அனில் கும்ப்ளேவின் லக் அவரிடம் இல்லை. ஆம்! அனில் கும்ப்ளே தான் பந்து வீச செல்லும் முன்னர் தனது தொப்பி மற்றும் ஸ்வெட் டவலை சச்சி னிடம் கொடுத்துவிட்டு சென்றால் விக் கெட் கிடைக்கும் என்று நம்பி வந்துள் ளார்.





விராட் கோஹ்லி

மைதானத்தில் ஆக்ரோஷத்தில் துள்ளிக் குதிக்கும் விராட் கோஹ்லி திறமையால் மட்டுமே இத்தனை உச் சத்தை எட்டிப் பிடித்துள்ளார் என்பது அனைவரும் கூறும் விஷயம். ஆனால், கோஹ்லியும் ஒரு மூட நம்பிக்கையை பின்பற்றி வருகிறார். மைதானத்தில் ஃபீல்டிங் செய்யும் போது ஒரு கருப்பு நிற பேண்டை அணிந்து கொள்வதை வழக்கமாக வைத்திருக்கிறார்.

ஆரம்பத்தில் தனது ராசியான க்ள வுஸ் ஒன்றை நீண்ட நாள் பயன்படுத்தி வந்துள்ளார். அதை அணிந்தால் தான் நிறைய ஸ்கோர் செய்வேன் என்ற நம் பிக்கையில் அதை பத்திரமாக வைத்தி ருந்துள்ளார் விராட் கோஹ்லி.



சச்சின்

கடவுளே மூட நம்பிக்கை கொண் டிருந்தார் என்பது சற்று அதிர்ச்சியை அளிக்கிறது. ஆம்! சச்சினிடமும் ஒரு மூட நம்பிக்கை இருந்துள்ளது. பேட் செய்ய மைதானத்திற்கு செல்லும் முன், முதலில் தனது இடது காலின் கால் காப்பினை கட்டுவதை வழக்கமாக வைத் திருந்தாராம் சச்சின். இதனால் தனக்கு வெற்றி வந்து சேரும் என்று கருதியுள் ளார். அதே போல, முக்கியமான ஆட்டங் களில் பயன்படுத்திய பேட்க்ளை பத்திரப் படுத்தி வைத்திருக்கிறார் சச்சின்.



விரேந்திர சேவாக்

உலகின் முன்னணி பந்து வீச்சாள ராக இருந்தாலுமே கூட, அவர் வீசும் முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டுவது சேவாக்கின் பழக்கம். இந்தியா கண்ட பெரும் அதிரடி வீரர் சேவாக். டெஸ்ட் போட்டிகளிலும் நூற்றுக்கும் மேலான ஸ்ட்ரைக் ரேட் கொண்டு, சதம், இரட்டை சதங்கள் அடித்தவர் சேவாக்.

சேவாக் ஆரம்பத்தில் 44 என்ற ஜெர்ஸி நம்பர் பயன்படுத்தி வந்தார். ஆனால், அது ராசியாக இல்லை என்று ஜோதிடர் கூறிய காரணத்தால் நம்பர் அற்ற ஜெர்ஸி பயன்படுத்த துவங்கினார் சேவாக்.

# இலட்சியத்தில் வென்று காட்டியவர்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நமது வேலை, உலகம் எப்ப டித் தோன்றியது என்று சிந்திப்பதில்லை. மாறாக, உலகத்தை மாற்றியமைப்பதே என்றார். அதற்கான களத்தை அமைத்ததோடு, உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்... நீங்கள் இழப்ப தற்கு எதுவும் இல்லை.

ஆனால், உங்களுக்காகப் பொன்னான ஓர் உல கம் காத்திருக்கிறது என்று குரல்கொடுத்தார். அந்த வாக் கியம் வரலாற்றில் பல திருப்பங்களுக்குக் காரணமா னது.

முதலாளியச் சமுதாயத்தில் நிகழும் உற்பத்தியை யும், நுகர்வையும் பற்றிச் சொல்லும் கார்ல் மார்க்ஸ், "மற்றவனின் கீழ்த்தரமான ஆசைகளைப் பூர்த்தி செய்யும் சேவை புரிகிறான். மற்றவனுக்கும் அவனது தேவைகளுக்கும் இடையே வேசித் தரகன்போல் நிற்கிறான். மற்றவனிடத்தில் உள்ள நசிவு இச்சை களைத் தூண்டிவிடுகிறான்.

மற்றவனது பலவீனங்கள் ஒவ்வொன்றுக்காக வும் காத்திருக்கிறான். ஒவ்வொரு (முதலாளிய) உற்பத் திப் பொருளும் மற்றவனது வாழ்க்கையையே தந்திர மாகக் கைப்பற்றி விடுவதற்கான தூண்டிலாகும். (மனிதர்களின்) உண்மையான, உள்ளுறைந்த தேவை ஒவ்வொன்றும் பூச்சியைக் கோந்துப் புட்டியில் சிக்க வைப்பது போன்ற பலவீனமாகிவிடுகிறது என்கி றார்.

இப்படித் தொடர்ந்து மாற்றத்துக்கான விதைகளை விதைத்த அவர், "மாறுதல்கள் நிச்சயம் தவிர்க்க முடியாதவை. மாற்றங்களை எதிர்கொள்ள மன உறுதி வேண்டும். மாற்றம் என்பதைத் தவிர, மாறாதது உலகில் இல்லை என்றார். இறுதியில், தன்னுடைய 'மூலதனம்' மூலம் உலக விடியலுக்கான மாற்றத்தையே படைத் தார்.

'மூலதன'த்தைப் படைத்த கார்ல் மார்க்ஸ், இப்போது நம்மிடம் இல்லை என்றாலும், அவர் படைத்த 'மூல தனம்' தான் நம் எல்லோருக்கும் 'மூலதன' மாக இருக் கிறது. ★



# புத்திசாலி பெண்களை திருமணம் செய்ய பின்னடிக்கும் ஆண்கள்

ஆண்கள் தங்களை விட புத்திசாலியாக இருக்கும் பெண்களைத் திருமணம் செய்து கொள்ள தயங்குவார்கள் என்று சில உளவியலாளர்கள் கூறுகின்றனர். ஆனால் அதற்கெல்லாம் குறிப்பாக எந்தவொரு ஆராய்ச்சி முடிவும் இல்லை என்பதே உண்மை.

பொதுவாக ஆண்களில் சிலர் தனது மனைவி தன்னை மீறி எதையும் செய்யக் கூடாது, தனக்கு அடுத்த படியில் தான் மனைவி என்பவள் இருக்க வேண்டும் என்று ஆணாதிக்கச் சிந்தனையில் இருப்பார்கள்.

அதனால் தன்னை விடப் புத்திசாலியாக இருக்கும் பெண்களைத் தனது வாழ்க்கை துணையாகத் தேர்வு செய்ய மறுத்து விடுவார்கள்.

அதிலும் சில ஆண்கள் புத்திசாலிப் பெண்ணாக இருந்தால், அவர்கள் சுயநலமாக இருப்பார்கள் என்றும் அவர்கள் தனியாக வாழ்வதற்கு தைரியம் அதிகமாக இருக்கும் என்றும் நினைப்பார்கள்.

அதனால் வாழ்க்கைத் துணை கூறுவதை சற்றும் கேட்காமல் அவர்களின் விருப்பப்படி வாழ்வார்கள் என்பதற்காகவும் ஆண்கள் அத்தகைய பெண்களைத் திருமணம் செய்து கொள்ள விரும்ப மாட்டார்கள்.

எனவே, தான் ஆண்களில் சிலர் தனது துணையைத் தேர்வு செய்யும் போது தன்னை விட குறைவாகப் படித்திருக்கும் பெண்ணை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைப்பார்கள்.

ஏனெனில் பெண்கள் ஆண்களை விட அதிகமாக படித்திருந்தால், அவர்களின் வாழ்க்கையில் சில சமயத்தில் தாழ்வு மனப்பான்மை பிரச்சினைகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

ஆனால் பல வெற்றிகரமான ஆண்களுக்குப் பின் அறிவார்ந்த புத்திசாலிப் பெண்கள் உண்டு என்பதும் உண்மை தான். அதனால் பல ஆண்கள் புத்திசாலிப் பெண்களை விரும்புவார்கள்.

ஏனெனில் பெண் புத்திசாலியாக இருப்பது குடும்பத்துக்கு மிகவும் நல்லது. ஆனால் அந்த பெண் எவ்வளவு புத்திசாலியாக இருந்தாலும் ஈகோ இல்லாமல் இருந்தால் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்பதற்காகப் பெரும்பாலான ஆண்கள் புத்திசாலியான பெண்களை விரும்புவதும் உண்டு.

# பொல்லாத வெயில்! சருமத்தைப் பாதுகாப்போம்!!

வெயில் காலத்தில் இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு உங்களது சருமத்தைப் பாதுகாக்கலாம்.

இயற்கையாகக் கிடைக்கும் கற்றாழையின் நடுவில் உள்ள ஜெல்களை எடுத்துக் கொள்ளவும். அதில், தக்காளி சாற்றையும் சிறிதளவு தயிரையும் சேர்த்து கலவையாக்கவும். பின்னர், அதை முகத்தில் பூசிக் கொள்வதால் பொலிவு ஏற்படும்.

தக்காளியை அரைத்து அதை ஐஸ் கியூப்பில் ஊற்றி, குளிர்சாதனப்பெட்டியில் வைத்துவிடவும். சிறிது நேரம் கழித்து, அந்தக் கட்டியை எடுத்து, முகத்தில் மசாஜ் செய்யவும். முகத்தில் உள்ள கரும்புள்ளி மறையும். தக்காளிச் சாறு இயற்கையாகவே கரும்புள்ளிகளை நீக்கும் குணம் கொண்டது.

பயித்தம் பருப்பைச் சிறிதளவு ஊறவைக்கவும். பின்னர், அதனுடன் வெட்டிவேர், கஸ்தூரி மஞ்சள், ரோஸ் வோட்டர்,



சிறிதளவு காய்ச்சாத பால் போன்றவற்றை சேர்த்துக் கொள்ளவும். இந்தக் கலவையைச் சோப்பாகப் பயன்படுத்தலாம். தொடர்ந்து இதைப் பயன்படுத்த சரும நோய்கள் நீங்கி, சருமம் புத்துணர்ச்சியாக இருக்கும்.

வெயிலில் போகும்போது ஐ ஷடோ போடுவதைக் குறைத்துக்கொள்ளவும். வியர்வையோடு சேரும்போது, அதன் ஈரப்பதம் கண்களைச் சுற்றிலும் பரவி, அழகைக் கெடுக்கும். சருமத்தையும் பாதிக்கும். கண்ணுக்கு மை மூலம் கண் இமைகளைத் திருத்தி, கண்களை அழகாகக் காட்டலாம்.

வெயில் காலத்தில் உதட்டுக்குச் சாயம் பூசக் கூடாது. ஏனெனில், இது உதடுகளை வறண்டுபோகச் செய்து, கருமை நிறத்துக்கு மாற்றிவிடும்.



# பெண்கள் கைக்கொள்ள வேண்டிய நல்ல பழக்கவழக்கங்கள்

திருமணம் முடிந்து ஒரு கும்பத்திற்கு தலைவி பொறுப்பை ஏற்கப் போகும் பெண்கள் அனைவரும் சில பழக்கங்களை சரியாக பின்பற்றி வந்தால் வாழ்க்கை சிறப்பாக அமைவதுடன், நிறைய அதிர்ஷ்டங்களையும் பெறலாம்.

பிரம்ம முகூர்த்த நேரமான அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்து, வீட்டுக் கதவைத் திறக்கும்போது, மகாலட்சுமியே வருக என்று மூன்று தடவை கூற வேண்டும்.

காலை 4-6 மணிக்குள் வீட்டு வாசலில் சாணம் தெளித்து அரிசி மாவினால் கோலம் போட வேண்டும். இதனால் மகாலட்சுமியின் அருள் கிடைக்கும்.

வீட்டில் காலை மற்றும் மாலையில் இருட்டுவதற்கு முன்பாக விளக்கேற்ற வேண்டும். ஆனால் மாலையில் விளக்கு ஏற்றிய உடன் வெளியே செல்லக் கூடாது.

வீட்டில் விளக்கு ஏற்றிய பின் தலை சீவுதல், பேன் பார்த்தல், முகம் கழுவுதல் போன்ற செயல் களைச் செய்யக் கூடாது.

விளக்கு வைத்த பின் வீட்டில் உள்ள குப்பைகளை வெளியே வீசக் கூடாது. பால், தயிர், பச்சைக் காய்கறிகள் ஆகியவற்றை இரவில் கடன் வாங்கவோ அல்லது கொடுக்கவோ கூடாது.

திருமணம் முடிந்த பெண்கள் தங்களின் நெற்றியில் எப்போதும் குங்குமம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

வீட்டுக்கு வரும் சுமங்கலிகளுக்கு குங்குமம் கொடுக்க முன் குடும்பத் தலைவி முதலில் தனது நெற்றியில் குங்குமம் இட்டு அதன் பின் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

பால் காய்ச்சினால் பொங்கி வழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வெள்ளிக்கிழமை அன்று வீட்டுக்கு உப்பு வாங்கலாம். அதனால் அதிர்ஷ்டம் கிடைக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் பணம் கடன் கொடுப்பது, அரிசி வறுப்பது, புடைப்பது ஆகியவை செய்யக் கூடாது. அது துரதிர்ஷ்டத்தை ஏற்படுத்தும்.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். ஆனால் பெண்கள் சனிக்கிழமை எண்ணெய் தேய்த்துக் குளிக்கக்கூடாது.

# பிரசவத்தின் பின் பருமனை குறைக்க...

பிரசவத்துக்குப் பிறகு பெரும்பாலான பெண்கள் உடல் பருமன் மற்றும் தொப்பை பிரச்சினைக்கு ஆளாகிறார்கள். அதிலும் சிசேரியன் செய்த பெண்கள் தொப்பை பாதிப்பால் அதிகம் அவதிப்படுகிறார்கள்.

சிசேரியன் செய்த பிறகு உடல் இயக்கமின்றி அதிக நேரம் படுக்கையில் இருப்பது தொப்பை உண்டாகக் காரணமாகிவிடுகிறது.

மேலும் வயிற்றில் இருந்த குழந்தையின் வெற்றிடத்தில் காற்று நிரம்புவதாலும், வயிற்றில் கொழுப்புச் சேருவதாலும் தொப்பை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. கர்ப்பிணியாக இருந்த நேரத்தில் தவிர்த்த உணவுகளை அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதும் தொப்பை, உடல் பருமன் பாதிப்புக்கு வழிவகுத்துவிடும்.

பிரசவத்துக்குப் பிறகு ஏற்பட்ட உடல் சோர்வும், அதனால் ஏற்படும் பசியும் உண்ணும் உணவின் அளவை அதிகப்படுத்தி விடும். தாய்ப்பால் கொடுப்பதற்காக சத்தான உணவுகளை தேடிப் பிடித்து சாப்பிட வேண்டியிருக்கும். அந்த உணவுகளாலும் உடல் எடை கூடும். குழந்தை பிறந்து ஒரு வருடம் கடந்த பிறகோ, தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்திய பிறகோ உடல் பருமனைக் குறைப்பதற்கான முயற்சியில் பெண்கள் ஈடுபடத் தொடங்கி விட வேண்டும்.

சரியான உணவுப்பழக்க வழக்கங்களையும், உடற்பயிற்சியையும் கடைப்பிடிக்க வேண்டும். பிரசவத்துக்குப் பிறகு செய்ய வேண்டிய உடற்பயிற்சிகளும், யோகாசனங்களும் ஏராளம் இருக்கின்றன. அவற்றுள் உடல் தகுதிக்கு ஏற்ற பயிற்சிகளை தேர்ந்தெடுத்து செய்துவர வேண்டும். அதில் அலட்சியம் காண்பிக்கக் கூடாது.

ஏனெனில் குழந்தை ஒரு வயதை தாண்டிய பின்னரும் எடை குறைப்பில் கவனம் செலுத்தாமல் இருந்தால் தோற்ற பொலிவில் மாறுதல் உண்டாகிவிடும். பின்னர் பழைய தோற்றத்துக்கு திரும்புவது கடினமான விடயமாகி விடும்.

## லண்டனில் இருந்து வாழ்த்து

"ஆயர் அவர்களே! 70 வயதை அடைவது மற்றவர்களுக்குப் பெரிதாக இருக்கலாம். ஆனால் தங்களுக்கு அது ஒரு சிறிய இலக்கம் மட்டுமே. ஓர் அபூர்வ மனிதராகத் தங்களை எமது வாழ்வில் சந்தித்தது ஓர் இறை ஆசீர்வாதமே. இந்த விசேட தினத்தில் தங்களை வாழ்த்துகிறோம்."

– புஷ்பம், – அருள் கொட்டேல் மரியா ஜயில் ஒவ்வைற் லண்டன்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா 18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## அமெரிக்காவில் இருந்து வாழ்த்து

பிறந்த தின வாழ்த்துக்கள். குருக்களின் பொருத்தமான இடமாற்றம் சிறப்பானது. நீதியை தேடும் தங்களின் நகர்வு தூரநோக்குடையது. நவீன தொழில்நுட்பம் நோக்கிய முயற்சிகள் பாராட்டப்படத் தக்கன. தமிழ் மக்களின் தூதுவராக தாங்கள் எழுப்பும் குரல் பாராட்டப்படத்தக்கது. சமயத்தலைவர் என்ற எல்லையைத் தாண்டி அனைவரையும் இணைக்க முயலும் தங்கள் முயற்சி பாராட்டுதற்குரியது. மாறி - லோகன் சவரிமுத்து. அமெரிக்கா

# 70 ஆவது அகவையில் யாழ் ஆயர் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்

யாழ்ப்பாணம்மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை 70 ஆவது அகவையில் கால் பதிக்கிறார். ஆயர் அவர்கள் தமது 70ஆவது வயதிலும் (1948 - 2018) குருத்துவ வாழ்வின் 44ஆவது ஆண்டிலும் (1974-2018) ஆயர் பணியின் மூன்றாவது ஆண்டிலும் (2015 - 2018) பயணிக்கிறார். மேதகு கலாநிதி யஸ்ரின்பேணாட்ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்தில் சுதேச ஆயர்கள் நியமனம் பெறத் தொடங்கிய பின்னர் யாழ். மறை மாவட்டத்திற்கென நேரடியாக நியமனம் பெறும் முதல் ஆயராவார்.



மேதகு ஜே.எமிலியானூஸ் பிள்ளை அ.ம.தி ஆண்டகை யாழ் மறைமாவட்டத்தின் வாரிசு ஆயர் உரிமையுடன்மேதகு ஜே.ஏ கியோமர் அ.ம.தி (1824 - 1950) ஆண்டகையின் துணை ஆயராக 1949ஆம் ஆண்டுநியமனம்பெற்றுயாழ்மறை மாவட்டத்தின் ஆயராக 1950ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். ஆயர் மேதகு பி.தியோகுப்பிள்ளை ஆண்டகை1967 ஆம்ஆண்டுதிருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமனம் பெற்று 1972இல் யாழ் மறைமாவட்டத்தின் ஆயராகப் பொறுப் பேற்றவர். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை 1981ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்றுப் பின்னர் 1992ஆம் ஆண்டு யாழ்.மறை மாவட்டத்தின் ஆயரானவர். இந்த வகையில் யாழ் மறை மாவட்டத்திற்கென சுதேச ஆயர்கள் நியமனம் பெறத் தொடங்கிய பின்னர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையே யாழ் மறை மாவட்டத்திற்கென நேரடியாக நியமனம் பெறும் முதல் ஆயராவார்.

## உண்மையின் எண்ணங்கள்

### 70ஆவது அகவையில் யாழ் ஆயர்

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் 70ஆவது அகவையில், காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ், அன்பு நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு ஆகிய நான்குதமிழ்மறைமாவட்டங்கள் இணைந்து இலங்கை நாட்டில் இன்னுமொரு கத்தோலிக்க ஆயர் பேரவை ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் காலத்தில் உருவாக வேண்டும் என வாழ்நாள் பேராசிரியர் முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை பின்னர் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஆகியோரால் முன்வைக்கப்பட்ட இவ்விடயம் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

# நான்கு தமிழ் மறை மாவட்டங்களை இணைந்த தனியான ஆயர் பேரவை

### பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கோரிக்கை

யாழ்ப்பாண உறோமன் கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் அகவை 70இல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகிறேன். ஆயர் அவர்கள் நீண்ட காலமாக அருட்பணி, கல்விப் பணிகளில் ஈடுபட்டமையுடன் மக்கள் மகிழ்ச்சியாகவும் சாந்தி சமாதானத்துடனும் தற்சார்பு பொருளாதாரம் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்தை முன்னெடுத்து, அதற்கு செயல் வடிவம் கொடுப்பவர். மேலும் துன்பப்பட்ட, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, புறந்தள்ளப்பட்ட மக்களுக்காகவும் குறிப்பாகப் பெண்கள் குழந்தைகள் வயோதிபர்களுக்காகவும் துணிந்து குரல் கொடுப்பவர். தமிழ் மக்கள் உரிமைக்காக தொடர்ந்து போராடி வருபவர்; புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுடன்



நெருங்கிய தொடர்பு கொண்டவராக அவர்களின் தயாகத்துடனான உறவுகளை வலுப்படுத்துபவர். இளைஞர்கள் கல்வியிலும் பல்துறை திறன் விருத்தியிலும் ஆ[illegible]மிகத்திலும் ஈடுபாடு கொள்ள வைப்பதில் கடினமாக உழைத்து வருபவர்.

யாழ்ப்பாணம்,திருகோணமலை,மன்னார்,மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறை மாவட்டங்கள் இணைந்து இலங்கை நாட்டில் இன்னும் ஒரு கத்தோலிக்க ஆயர் பேரவை ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் காலத்தில் உருவாக்க ஆவன செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கிறேன்.

-பேராசிரியர் **பொ.பாலசுந்தரம்பிள்ளை**
*(முன்னாள் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)*

# ஆயர் ஞானப்பிரகாசம் வழிகாட்டலில் மேன்மையுறும் யாழ் மறை மாவட்டம்

### மன்னார் ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ வாழ்த்து

யாழ் ஆயர் மேதகு கலாநிதியஸ்ரின்பேணாட்ஞானப்பிரகாசம் ஆண்டகையின் 70ஆவது பிறந்த தினத்தில் இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை எமது பெயராலும் மன்னார்மறைமாவட்ட குருக்கள், துறவிகள், இறைமக்கள் பெயராலும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். நாம் யாழ்ப்பாணம் மறை மாவட்டத்தைத் தாய் மறைமாவட்டமாக என்றும் அன்புடனும் நன்றியுடனும் நோக்குகின்றோம். அதன் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தூர நோக்குமிக்க பணிகளையும் மறைமாவட்டத்தை சிறப்பாக வழி நடத்தும் முறையையும் கண்டு மகிழ்ந்து பாராட்டுகிறோம்.



நீண்டகால பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணம் மறை மாவட்டம் அவரின் ஆளுமை மிக்க நெறிப்படுத்தலில் மிகச் சிறந்த தமிழ் மறை மாவட்டமாக தொடர்ந்து வளரும் என்பதில் எந்த ஐயமுமில்லை.


தமிழ் மக்களுக்காக அவர் எழுப்பும் குரல் என்றும் பாராட்டத்தக்கது. அப்பணியை தமிழ் மக்களுக்காகத் தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்று அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம். ஆயர் பணியில் மூன்று ஆண்டுகளை நிறைவு செய்யும் ஆயர் அவர்களை வளமுடன் நீடுழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

*மேதகு கலாநிதி இமானுவேல் பெர்னாண்டோ,*
*மன்னார் மறை மாவட்டம்.*

# நம் மண் மேன்மையடைவதற்கு ஆன்மீக ரீதியில் குரல் கொடுப்பவர்

### யாழ் ஆயருக்கு ஆறு திருமுருகன் பாராட்டு

யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் அகவை எழுபது நிறைவு குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். அறிவும் ஆற்றலும் அன்பும் நிறைந்த ஆன்மிகத் தலைவராக விளங்கும் ஆண்டகையை பல வருடங்களாக நான் அறிவேன். ஆசிரியராக, அதிபராக, ஆயராகத் தன் பணி தொடரும் சேவையாளர். நீண்ட காலம் நலத்துடன் தன்பணி தொடர



இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன். எம் மண்ணில் நல்ல சூழல் ஏற்படுவதற்கு ஆன்மிக ரீதியில் குரல் கொடுப்பவர்களில் ஒருவராக விளங்கும் பெரியாரின் தொண்டு பாராட்டத்தக்கது. நிதானமாக தன் கருத்துக்களை வெளியிடும் ஆயரின் பணி சிறக்க வாழ்த்தி அன்னாரின் ஆன்மிக வாழ்வு மேலும் சிறக்க இறையருள் வேண்டி எனது வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறேன்.

*-கலாநிதி ஆறு திருமுருகன்*

# புலம்பெயர் மக்களுக்கும் தொடர்ந்து யாழ் ஆயரின் சேவை கிட்ட வேண்டும்

### கனடாவிலிருந்து வாழ்த்துச் செய்தி

மேதகு கலாநதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை இயேசுவின் சீடனாக – கத்தோலிக்க ஆன்மிக நெறியுடன் பந்த பாசங்களிலிருந்து விடுபட்டு, பல்வேறு சிரமங்கள், சவால்கள் மத்தியில் உண்மைக்குச் சாட்சியாக நற்பணியாற்றுகின்றார். ஆயர் அவர்கள் தமது பணி வாழ்வில் யாழ் மறைமாவட்டத்திற்காக மட்டுமல்ல அனைத்துத் தமிழ் மக்களுக்காகவும் வேறுபாடின்றி கலங்கரை விளக்கமாக, வழிகாட்டும் மனிதநேயமுள்ள மனிதராக வாழ இறையருள் வேண்டுகின்றோம்.ஆயர்பெருந்தகையின் பணி புலம்பெயர்த் தமிழ் மக்களுக்கும் ஆன்மிக ரீதியிலும் மற்றும் பல வழிகளிலும் தொடர்ந்தும் கிடைத்திட எல்லாம் வல்ல இறையருள் வேண்டுவதோடு



நற்சுகத்தோடு இன்னும் பலவருட காலங்கள் ஆசீர்வதித்திட வாழ்த்தும் பலரோடு, பூவோடு சேர்ந்த நாராக – எனது குடும்பம் சார்பாகவும் இறைவனிடம் வேண்டுதல் செய்கின்றோம்.

–ஆசைமுத்து அல்பிரட் ஞானராஜா
கனடா, மொண்ட்ரியலிலிருந்து

# கரவெட்டி பிரதேச எல்லேயில் இமையாணன் மகளிர் வெற்றி

கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான எல்லேயில் பெண்கள் பிரிவில் இமையாணன் மகளிர் அணி கிண்ணம் வென்றது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது.

இதில் இமையாணன் மத்திய இளைஞர் கழக அணியும் உடுப்பிட்டி சிவகுமரன் இளைஞர் கழகமும் மோதின.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இமையாணன் மத்திய அணி 30 பந்துகளில் 7 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக லக்சனா, உதயரூபி மற்றும் கஜேந்தினி ஆகியோர் தலா 2 ஓட்டங்களையும் தர்சி ஓர் ஓட்டத்தையும் பெற்றனர்.

8 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய சிவகுமரன் அணி 3 ஓட்டங்களை மட்டும் பெற 4 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனாகியது இமையாணன் மத்திய இளைஞர் அணி. சொப்னா அதிகபட்சமாக இரண்டு ஓட்டங்களைப் பெற்றார்.



# நடால் அதிர்ச்சித் தோல்வி




அதிர்ச்சித் தோல்வியுடன் மட்ரிட் பகிரங்க ரென்னிஸ் தொடரிலிருந்து வெளியேறிய முதல் நிலை வீரரான ரபேல் நடால், வழமையான உணர்வுடன் காலிறுதி போட்டியில் விளையாடவில்லை எனக் கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற காலிறுதி போட்டியில், 7 ஆம் நிலையிலுள்ள ஒஸ்ரிய வீரர் டொமினிக் த்யீம்மை எதிர்கொண்ட நடால், 7-5, 6-3 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.


இந்தத் தொடரில் கிண்ணம் வெல்வார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நடால், தான் அடைந்த தோல்வி குறித்து கூறிய வார்த்தைகள் இவை,

"நான் உலகின் மிகச்சிறந்த ஒரு வீரருடன் விளையாடினேன். இந்த போட்டியில் அவர் மிகச்சிறப்பாக விளையாடினார். நாங்கள் வித்தியாசமான, விசேட நிலையில் விளையாடினோம். இங்கு பந்துகள் எகிறிப் பறந்து வந்தன. அதனைக் கையாள்வது கடினமாக இருந்தது. புள்ளிகள் பெறுவதைக் என்னால் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியவில்லை.

நான் வழமையான உணர்வுடன் இதில் விளையாடவில்லை. புள்ளிகள் கிடைக்காமையினால் உணர்ச்சிவசப் பட்ட வனாக இருந்தேன். எனது ஆட்டமுறைகள் தவறாக இருந்தது. இதனை நான் உணர்ந்தபோதும், அதிலிருந்து மீளமுடியாமல் உணர்ச்சிவசப்பட்டவனாகவே விளையாடினேன்" எனக் கூறினார்.

# ஒரே நேரத்தில் 15 பேருடன் செஸ் விளையாடி அசத்திய கார்ல்சென்

உலகின் முதல் நிலை செஸ் வீரரான நோர்வேயின் மக்னுஸ் கார்ல்சென், கடந்த வியாழக்கிழமை ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகத்தில் ஒரே நேரத்தில் 15 பேருடன் செஸ் விளையாடி அசத்தியுள்ளார்.




இந்தப் 15 பேரில் ஐ.நா.வுக்கான செக் குடியரசு பிரதித்தூதுவர் ஜிரி எலிஞ்ஞர், பக்ரைன் பிரதித் தூதுவர் ஹைபா மடார், ஒஸ்லோ மேயர் மரைன்னி போர்கென் மற்றும் ஒன்பது வயதான மாணவனும் உள்ளடங்குகின்றனர்.

செஸ் சம்பியன் கார்ல்சென், தன்னுடன் போட்டியிட்ட 15 பேரில் இறுதியில் தோற்கடித்தது அந்த 9 வயதுச் சிறுவனைத் தான் என்பது சிறப்பம்சமாகும்.

இந்த நிகழ்வை நோர்வே ஒழுங்கமைத்திருந்தது. கனடாவின் முதன்நிலை செஸ் வீரர் பஸ்கல், நிகழ்வை நெறிப்படுத்தியிருந்தார்.

# இலங்கை அணி அறிவிப்பு



மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான, இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தினேஷ் சந்திமால் தலைமையிலான இந்த அணியில், பந்து வீச்சாளர்களான கசுன் ராஜித, அசித்த பெனார்ன்டோ, ஜெப்ரி வெண்டர்சே, மஹேல உடவத்த ஆகிய வீரர்கள் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமாகின்றனர்


இலங்கை அணியின் தடுப்புச் சுவர் என வர்ணிக்கப்படும் திமுத் கருணாரத்ன உபாதைக்குள்ளாகியுள்ள நிலையில், 31வயதான மஹேல உடவத்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கவுள்ளார்.

இதேவேளை உபாதையால் பாதிக்கப்பட்டுள்ள அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் சுரங்க லக்மால் ஆகியோர் இத்தொடரில் விளையாடுவதற்கு பெயரிடப்பட்டுள்ளனர். எனினும் அவர்கள் அப்போதுள்ள உடற்தகுதினியக் கருத்திற் கொண்டே தொடரில் விளையாடுவார்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இத்தொடரின் பார்படோஸ் மைதானத்தில் நடைபெறும் மூன்றாவது டெஸ்ட் போட்டி, பகல்-இரவு டெஸ்ட் போட்டியாக நடைபெறவுள்ளது. இதுவரை மேற்கிந்திய தீவுகள் மண்ணில், இலங்கை அணி டெஸ்ட் தொடரை வென்றதில்லை.

இலங்கை அணி விவரம்: தினேஷ் சந்திமால் (அணித்தலைவர்), மஹேல உடவத்த, குசல் மெண்டிஸ், குசல் பெரேரா, தனஞ்சய டி சில்வா, ரோசேன் சில்வா, அஞ்சலோ மெத்தியூஸ், நிரோஷன் டிக்வெல்ல, ரங்கன ஹேரத், தில்ருவான் பெரேரா, அகில தனஞ்சய, ஜெப்ரி வெண்டர்சே, லஹிரு கமகே, கசுன் ராஜித, சுரங்க லக்மால், லஹிரு கமகே, அசித்த பெனார்ன்டோ.

# இரட்டைச் சாதனை படைத்தார் ரெய்னா



சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர் சுரேஷ் ரெய்னா, நேற்றுமுன்தினம் போட்டியில் இரண்டு புதிய சாதனைகளைப் படைத்தார்.

ஜெய்ப்பூரில் நேற்று முன் தினம் போட்டியில், ராஜஸ்தான் மற்றும் சென்னை அணிகள் மோதின. இந்தப் போட்டியில், சுரேஷ் ரெய்னா 35 பந்துகளில் 6 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் 52 ஓட்டங்கள் குவித்தார்.

இதன் மூலம், சென்னை அணிக்காக 4,000 ஓட்டங்கள் குவித்த முதல் வீரர் என்ற பெருமையை பெற்றார். சென்னை அணியில் 142 ஆட்டங்களில் விளையாடியுள்ள ரெய்னா 4,012 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

மேலும், ஐ.பி.எல்லின் ஒவ்வொரு சீசனிலும் 300 ஓட்டங்களுக்குமேல் குவித்த ஒரே வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார்.

ஒவ்வொரு சீசனிலும் ரெய்னா குவித்த ஓட்டங்கள்:

2008ஆம் ஆண்டு - 421 ஓட்டங்கள்
2009ஆம் ஆண்டு - 434 ஓட்டங்கள்
2010ஆம் ஆண்டு - 520 ஓட்டங்கள்
2011ஆம் ஆண்டு - 438 ஓட்டங்கள்
2012ஆம் ஆண்டு - 441 ஓட்டங்கள்
2013ஆம் ஆண்டு - 548 ஓட்டங்கள்
2014ஆம் ஆண்டு - 523 ஓட்டங்கள்
2015ஆம் ஆண்டு - 374 ஓட்டங்கள்
2016ஆம் ஆண்டு - 399 ஓட்டங்கள்
2017ஆம் ஆண்டு - 442 ஓட்டங்கள்
2018ஆம் ஆண்டு - 313 ஓட்டங்கள் (இதுவரை)

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டுகிறது.

இதற்கமைய தமிழினப் படுகொலை வாரத்தின் முதலாவது நாளான நேற்றுக் காலை செம்மணியில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அஞ்சலிசெலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நினைவேந்தலில் வடக்கு அமைச்சர் அனந்தி சசிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் குகதாஸ், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட படுகொலை வார நிகழ்வுகள் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் பல இடங்களிலும் இடம்பெற்று இறுதி நாளான மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் முடிவடையும். (ஐ-7)

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கப்படும் எனவும் அந்தத் தகவல் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு சிங்கள ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்துவதற்கான தயார்ப்படுத்தல்களை முன்னெடுக்குமாறு அனைத்துக்கட்சிகளிடமும் தேர்தல்கள் ஆணையாளர் கேட்டிருந்தார்.

அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துமாறு பெரும்பான்மையான கட்சிகள் கேட்டிருந்தன. எனினும் அரசு அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தது.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் ஆட்சிக் காலம் ஏற்கனவே நிறைவடைந்துள்ளது.

வடக்கு, வயம்ப மற்றும் மத்திய மாகாண சபைகளின் ஆட்சிக் காலம் எதிர்வரும் செப்ரம்பரில் நிறைவடைகிறது.

இந்த நிலையில் இந்த 6 மாகாண சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு செப்ரெம்பரில் விடுக்கப்பட்டு நவம்பரில் தேர்தல் நடத்துவது என அரசு திட்டமிட்டுள்ளது.

6 மாகாண சபைகளுக்கும் நவம்பரில் தேர்தலை நடத்த அனைத்துக்கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன – என்றுள்ளது. (ஐ)

## பொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிகரித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பண்டாரகம விகாரையொன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆட்சியில் இருக்கும் அரசு பொருட்களின் விலைகளைத் தொடர்ந்தும் அதிகரித்து, மக்களின் வாழ்க்கைச் செலவை மேலும் கடினமாக்கியுள்ளது.

மக்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்லமுடியாமல் அவதிப்படுகின்றனர். இதற்கு இந்த அரசு எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை.

இந்த ஆட்சியிலேதான் மக்கள் தொடர்ந்தும் விலையேற்றங்களால் பாதிக்கப்படுகின்றார்கள். அன்றாடம் தமது வேலைகளில் ஈடுபடுபவர்கள் தமக்கு உரிய கூலியைப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. – என்றார். (ஐ)

## உறவுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இரக்கமான அனுபவமாக அமைந்தது என்று காணாமற்போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களைக் காணாமற்போனோரின் அலுவலகத்தின் தலைவர் தலைமையிலான குழுவினர் நேற்று நேரில் சந்தித்தனர்.

காணாமற்போனோர் அலுவலகத்தின் முதலாவது களப்பணியாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

காணாமற்போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தலைமையில் 6 உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இதன்போது உறவுகள் சார்பில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

"பிள்ளைகள், கணவன், மனைவி, சகோதரன் மற்றும் சகோதரிகளை என அன்புக்குரியவர்களை இழந்த 250 பேருக்கும் மேற்பட்டோர் பங்கேற்று தமது துயரங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

அவர்கள் தங்களுடைய பரிந்துரைகள், அனுபவங்கள், துயரங்கள், சந்தேகங்கள் – அச்சங்களை ஆணையாளர்களுடன் பகிர்ந்துகொண்டனர்.

அவை எமக்கு இரக்கமான அனுபவத்தைத் தந்தது" என்று காணாமற்போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தனது கீச்சகத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

## ராணுவத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ளுக்கும் செய்யும் துரோகமாகவே அமையும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு இளைஞர், யுவதிகள் இராணுவத்தில் இணையவேண்டும் என யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி அழைப்பு விடுத்துள்ள நிலையிலேயே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இராணுவம் இலங்கைப் படைகள் என்று நடக்காது தற்போது வரை சிங்களப் படைகளாகவே நடக்கின்றது. அந்த வகையில் நாட்டிலுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு விகிதாசார அடிப்படையில் இராணுவத்தில் இணைத்துக் கொள்வது என்ற நிலை ஏற்படும் வரை தமிழ் இளைஞர், யுவதிகள் அதில் இணையக்கூடாது. இப்போது இராணுவத்தில் அது தமிழின விடுதலைக்காக உயிரிழந்தவர்களுக்குச் செய்யும் துரோகமாகவே அமையும்.

தற்போது கிளிநொச்சியில் வறுமையின் காரணமாகப் பல பெண்கள் துணைப் படைகளாக இணைந்துள்ள நிலையில் அவர்களை முன்பள்ளி ஆசிரியர்களாகவும், பண்ணைப் பணியாளர்களாகவும் வைத்திருந்து துஸ்பிரயோகப்படுத்தி – அவமானப்படுத்தி வருகின்றார்கள்.

எமது இனத்தின் கௌரவமும், சுய கௌரவமும் பாதுகாக்கப்பட்டு எங்கள் மண்ணில் எங்களை நாங்களே ஆழக்கூடிய நிலை உருவாகிய பின்னரே இராணுவத்தில் தமிழ் இளைஞர், யுவதிகள் இணைவது பற்றி சிந்திக்க முடியும். அதுவரை எவரது ஆசை வார்த்தைகளையும் நம்பி நாம் ஏமாந்து போகக்கூடாது. – என்றார். (ஐ-7)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மன்னாருக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட காணாமற்போனோர் அலுவலகத்தின் உறுப்பினர்கள் முன்பாக ஒரே குரலில் கண்ணீர் மல்கக் கருத்து வெளியிட்டனர் மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்.

காணாமற்போனோருக்கான அலுவலகம் அதன் பிராந்திய மட்ட நடவடிக்கைகளை நேற்று முதற் கட்டமாக மன்னாரில் ஆரம்பித்தது.

காணாமற்போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தலைமையிலான 7 உறுப்பினர்களும் நேற்று இந்தப் பிராந்திய மட்டக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்போதே காணாமற்போனோரின் உறவினர்கள் மேற்கண்ட கருத்தை அழுத்தம் திருத்தமாக அங்கு எடுத்துரைத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் கடத்தப்பட்டவர்களின் உறவினர்களிடம் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் பெறும் நடவடிக்கை நேற்றுக் காலை ஆரம்பமானது. அதன் பின்னர் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களைச் சந்திப்பது என்றும், இறுதியில் ஊடக சந்திப்பை நடத்துவது எனவும் கூறப்பட்டது.

ஆயினும் தம்மிடம் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் போது மண்டபத்தில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரும் அனுமதிக்கப்படவேண்டும். அவ்வாறு அனுமதி வழங்கும் பட்சத்திலேயே கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்க முடியும் எனக் காணாமற்போனோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக மண்டபத்தினுள் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது காணாமற்போனோர் அலுவலக உறுப்பினர்கள் முன்பாகக் கருத்துக்களை வெளியிட்ட காணாமற்போனோரின் உறவினர்கள் –

"எமது உறவுகள் தொடர்பாக நாங்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தோம். அவர்களைக் கண்டறிய அரசுக்கு நாம் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுத்து வந்தோம். ஆனால் எந்த அழுத்தமும் பயனளிக்கவில்லை.

எமது உறவுகளைத் தேடி தினம் தினம் அலைந்து திரிகின்றோம். பல்வேறு முகாம்களுக்கும் சென்று தேடினோம். எமது வீடுகளுக்குத் தொடர்ச்சியாகப் புலனாய்வுத் துறையினர் வந்து விசாரிக்கின்றனர். எங்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்ளுகின்றனர். எத்தனையோ ஆணைக்குழுக்களிடம் நாங்கள் முறைப்பாடுகளைச் செய்துவிட்டோம்.

இதுவரை எமக்கு எவ்வித முடிவுகளும் இல்லை. எமது உறவுகள் காணாமற்போனவர்கள் இல்லை. பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை வீடுகளில் வைத்தும், வீதிகளில் வைத்தும் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்தும் கடத்தியுள்ளனர். இன்று நல்லாட்சி ஏற்பட்டும் எமது உறவுகளுக்கு எந்த முடிவும் கிடைக்கவில்லை.

இலங்கையில் காணாமல் போனவர்கள் என்று யாரும் இல்லை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அப்படியானால் எமது பிள்ளைகளையும், உறவுகளையும் வெளிநாட்டில் இருந்து வந்தவர்களா கடத்திச் சென்றுள்ளனர்? – என்று கூறினர்.

இதன்போது பதில் வழங்கிய காணாமற்போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் –

புலனாய்வாளர்கள் உங்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டால் அது குறித்து எமக்கு முறையிடும் பட்சத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க முடியும் எனவும், அதற்கான அதிகாரம் தமக்கு உள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் காணாமற்போனோருக்கான அலுவலகம் தொடர்பில் தமக்கு நம்பிக்கை இல்லை என அங்கு வந்திருந்த உறவுகள் அனைவரும் பகிரங்கமாக ஒரே குரலில் கருத்து வெளியிட்டனர்.

அத்துடன் காணாமற்போனோருக்கான அலுவலகத்தின் பிராந்திய மட்ட ஆலோசனை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் மாவட்டக் காணாமற்போனோரின் உறவினர்கள் மாவட்டச் செயலகத்துக்கு முன்பதாதைகளை ஏந்தி எதிர்ப்பையும் வெளியிட்டனர். (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ளுக்கு கருத்து எதனையும் வழங்கவில்லை.

ஆயினும் வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டிலேயே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும் என்றும், பல்கலைக்கழக மாணவர்கள் இதில் இணைந்து கொள்ள முடியும் எனவும் மாகாண சபைவட்டாரங்கள் தெரிவித்தன.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் –

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இணைந்து முன்னெடுப்பது தொடர்பாக உரையாடப்பட்டு எந்தவித ஆட்சேபனையும் இன்றி ஒரே நிகழ்வாக அதனை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து அதனைக் கூட்டாக உணர்வுபூர்வமாக நடத்தவும், பொதுச்சுடரை முதலமைச்சர் கையளிக்க பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் ஏற்றுவார் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் பிரகடனத்தை முதலமைச்சரே ஆற்ற வேண்டுமென மாணவப் பிரதிநிதிகள் கோரிக்கையை முன்வைத்திருந்த நிலையில் அவரும் ஏற்றுக்கொண்டார். – என்றனர்.

வடமாகாண சபை ஏற்கனவே முன்னேற்பாடுகள் தொடர்பில் பல்வேறு அமைப்புக்களுக்கு வேலைகளை ஒதுக்கியிருப்பதால் அவற்றை மீளாய்வு செய்து மாணவர் பிரதிநிதிகளையும் பொது அமைப்புக்களையும் இணைத்துக் கொள்வது தொடர்பான கூட்டம் நாளை (இன்று) முள்ளிவாய்க்காலில் நடைபெறவுள்ளது. இதில் மாணவப் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்பினரைப் பங்கெடுக்க அழைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள் முள்ளிவாய்க்கால் மக்கள் அமைப்புக்களுடன் இணைந்து முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர் எனக் கூறப்பட்டது. (ஐ-7)

## ஒஸ்மானியாக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பணி இடம்பெற்று வந்த நிலையில் முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் சிலர் முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கையால் அதனை இடைநிறுத்துமாறு யாழ்ப்பாண மாநகர சபை பணித்துள்ளது.

தமிழர் ஒருவரால் அந்த இடத்தில் ஹோட்டல் கட்டப்படுவதாகத் தெரிவித்தே முஸ்லிம் அரசியல்வாதிகளும் அப்பகுதியைச் சேர்ந்த மக்களும் நேற்றுச் சனிக்கிழமை காலை வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் ஹலிமா வீதியைச் சேர்ந்த மக்கள் எனக் குறிப்பிடப்பட்ட மனு ஒன்றும் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்ப்பாணம் ஹலிமா வீதியில் அமைக்கப்படும் ஹோட்டலால் நெருக்கமாக வாழும் மக்கள் குடியிருப்புகளுக்குப் பாதிப்பு ஏற்படும்.

பிற்காலத்தில் அநாச்சாரமான பழக்கவழக்கங்கள், மதுபோதைப் பாவனைகள் என்பன ஏற்பட்டு எமது சிறார்கள், இளைஞர்கள் வழிதவறிச் செல்ல வாய்ப்புக்கள் உண்டு.

அடிக்கடி நடைபெறும் களியாட்டங்களால் எழுப்பப்படும் ஒலிபெருக்கிச் சத்தத்தால், மாணவர்களின் கல்வி, குறிப்பாகப் பரீட்சைக்குத் தயாராகுவோர், சிறார்கள், குழந்தைகள், முதியோர், நோயாளர்களுக்கு இடைஞ்சல் ஏற்படும்.

பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் (பள்ளிவாசல்) மிக அருகாமையில் இருப்பதால் நற்கருமங்களுக்கு இடைஞ்சல் ஏற்பட்டுப் பிரச்சினைகள் உருவாகுவதற்கும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன.

அந்தப் பகுதி வீதி சிறு வீதியாக இருப்பதனால் வாகன நெரிசல் ஏற்பட்டுப் போக்குவரத்துத் தடை ஏற்பட்டு அதனால் பிரச்சினைகள் ஏற்படலாம்.

எனவே பிள்ளைகளையும் விபரீதங்களையும் கருத்திற்கொண்டு, மேற்படி ஹோட்டல் அமைப்பதை நிறுத்தி உதவுமாறு கோருகின்றோம் – என்றுள்ளது.

இந்தப் போராட்டத்தில் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கட்சியைச் சேர்ந்த யாழ்.மாநகர சபை உறுப்பினர் கே.எம். நியாஸ் நிலாம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மின் உட்பட மக்கள் சிலர் பங்கேற்றனர்.

இதனையடுத்துச் சம்பவ இடத்துக்கு வந்த யாழ்ப்பாண மாநகரப் பொறியலாளர், போராட்டத்தில் ஈடுபட்டோருடன் கலந்துரையாடி, ஹோட்டல் அமைக்கும் பணியை இடை நிறுத்தப் பணித்தார். (ஐ-7)

## நீர்வேலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வரே நேற்றுச் சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட மூவர் எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்வேலி செம்பாட்டுப் பிள்ளையார் கோவிலில் கடந்த 7ஆம் திகதி திங்கட்கிழமை இளைஞர்கள் இருவர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அப்புத்துரை கிரிசன் (வயது -23) என்ற இளைஞன் கழுத்தில் வெட்டுப்பட்டும் கிரிகேசன் (வயது - 23) காலிலும் படுகாயமடைந்தனர். (ஐ-7)

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஜோர்ஜ் புஷ் மீது பாதணி எறிந்த பத்திரிகையாளர் மண்டேசர் அல்ஸைதி சிறைவைக்கப்பட்டு, நன்னடத்தை காரணமாக விடுதலையாகி பெரிய ரசிகர் கூட்டத்தைச்சம்பாதித்து, இடதுசாரிக்கட்சியுடன் இணைந்து இம்மாதம் ஈராக் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

முன்னர் இலங்கைக்கு வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை துவக்குச் சோங்கினால் தாக்கிய கடற்படை ஊழியர் ஊடகங்களால் பிரபலமாகி, தேர்தலில் நிற்கும் அளவுக்கு அந்நபரை முக்கியத்துவம் பெறச்செய்தமைபோன்று இந்தப் பாதணி பிரபாகரனும் – நாராயணனை பிடிக்காத இயக்கங்களினால் முக்கியத்துவம் பெறலாம். நாராயணனை பாதணியால் தாக்கியதில் என்ன தவறு...? என்று கேட்கும் அளவுக்கு செய்திகள் இணையங்களில் வெளிவரத்தொடங்கின.

இனிமேல் விவகாரத்துக்குரியவர்களை செருப்படிகளிலிருந்து பாதுகாக்க வேண்டுமானால் அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளுக்கு வருபவர்கள் அனைவரும் தமது பாதணிகளை வெளியே வைத்துவிட்டுத்தான் வர நேரிடும்! பாதுகாப்பு ஊழியர்களினால் வாயிலில் வைத்தே செருப்புகளை பொறுப்பெற்று டோக்கன் கொடுக்க வேண்டிய சூழ்நிலை தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பலவருடங்களுக்குமுன்னர்கொழும்பு மத்திய மகாவித்தியாலய வீதியில் முன்னாள் பாபர் வீதி அமைந்திருந்த சத்திய சாயிபாபா இல்லத்தில் பிரார்த்தனைக்கு வரும் சாயிபக்தர்களின் பாதணிகளைக் கைகளில் வாங்கி, வாயிலிலிருந்த ராக்கையில் அடுக்கிக் கொண்டிருந்த எனது இனிய இலக்கிய நண்பர் ஒரு கூடைக் கொழுந்து புகழ் என். எஸ்.எம். ராமையாவைக் கண்டு திகைத்துவிட்ட தகவலை அவர் பற்றி முன்னர் எழுதியிருந்த ஒரு கட்டுரையிலும் குறிப்பிட்டிருக்கின்றேன்.

எனக்கு இந்தப்பாதணிகள் மீதுதான் எப்பொழுதும் ஆழ்ந்த அனுதாபம். மக்களின் பாதுகாப்புக்கும் சுகாதாரத்திற்கும் பயன்பட்டுவரும் பாதணிகளை நம்பி வாழும் குடும்பங்களும் இருக்கின்றன.

இந்தியாவிலும் இலங்கையிலும் கோயில்கள், புனிதஸ்தலங்களின் வெளிமுற்றங்களில் ஏழை முதியவர்கள், அங்கு வரும் பக்தர்களின் பாதணிகளை பத்திரப்படுத்திக் கொடுத்து சில்லறை பெற்று வயிற்றைக் கழுவுகிறார்கள். செருப்புத் திருடர்களுக்கும் பாதணிகளினால் நன்மையுண்டு. அத்தகைய பாதணிகளை மனிதர்களைத் தாக்குவதற்கு அவமானப்படுத்தும் ஆயுதமாக்குவதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

பாதணியால் அடிவாங்கினால், அந்த அவமானம் அடி வாங்கியவர் வாழ்க்கை முழுவதும் தொடரும். கையால் காலால் தடிகளினால் ஒருவர் அடிவாங்கினால் கிடைக்கப்பெறும் செய்திக்கும் செருப்பால் அடிவாங்கியவர் பெற்றுக்கொள்ளும் வசைமொழிக்கும் பெரிய வேறுபாடு இருக்கின்றது.

பாதணி என்றவுடன் 1984 இல் எனது குடும்பத்தில் நடந்த சம்பவம் நினைவுக்கு வருகின்றது.

அப்பொழுது எனது மூத்தமகள் பாரதிக்கு நான்கு வயது. வெளியே செல்லும் பொழுதெல்லாம் அவள் என்னுடன் தொற்றிக்கொள்வாள். உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச்செல்லும் பொழுது வாசலில் நான் எனது பாதணிகளைக் கழற்றி விடுவதைப் பார்த்து, அவளும் குனிந்து தனது பாதணிகளைக் கழற்றி வைத்துவிட்டுத்தான் உள்ளே வருவாள். அவளுடைய இந்தச் செயலைக் கண்டுவிட்டு அவளை உச்சிமுகர்ந்து பாராட்டினார்கள்.

அதனால் அந்தப் பழக்கம் மிகவும் நல்லதுபோலும் என்று பச்சிளம் குழந்தையின் மனதில் பதிந்து விட்டது. பிறிதொரு நாள் அவளை எங்கள் ஊர் தியேட்டர் ஒன்றுக்குப் படம் பார்க்க அழைத்துச் சென்றேன்.

டிக்கட் பெற்றுக்கொண்டு திரையரங்கு வாசலில் டிக்கட் கிழிப்பவரிடம் கொடுத்த சமயத்தில் எனது குழந்தை தனது பாதணியை வாசலில் கழற்றிவிட்டு உள்ளே வந்திருக்கிறாள். நான் அதனைக் கவனிக்கவில்லை. உடனே வாசலில் நின்ற அந்நபர் "பபா உங்கள் செருப்பு" என்று சிரித்தவாறு குரல் எழுப்பினார். பின்னால் நின்றவர்களுக்கும் எனக்கும் வந்த சிரிப்பை அடக்க முடியவில்லை.

# இராம காவியத்தின் பாதுகையும் தற்காலத்தின் அவமானச் சின்னமும்!



பின்னர் அவளுக்கு செருப்பை எங்கே – எப்பொழுது –எந்தவேளையில் கழற்றவேண்டும் என்று பாடம் நடத்தினேன். இன்று அவள் தனது குழந்தைகளுக்கு (எனது பேரக் குழந்தைகளுக்கு அந்தப் பாடத்தை நடத்தி விட்டாள்.)

நவநாகரிக வனிதையர் வெளியே செல்லும்பொழுது தாம் அணியும் ஆடைகளின் நிறத்துக்கு ஏற்ற பாதணிகளை அணிவதை வழக்கமாகக் கொண்டவர்கள். அத்துடன் புதிய புதிய மோஸ்தரில் ஆடைகளை அணியும் பொழுதும் அதற்குப் பொருத்தமான பாதணிகளையும் தேடித் தேடி வாங்கிவிடுவார்கள். இந்தப் பழக்கம் வழக்கமாகிவிட்டால் காலப்போக்கில் அவர்களின் வீடுகளில் பாதணிகளின் எண்ணிக்கை பெருகிவிடும். அவ்வாறு தனது பாதணிகளின் எண்ணிக்கையை முன்பு பெருக்கியவர்தான் பிலிப்பைன்ஸின் அதிபராக இருந்த அக்கியூனோ என்ற அம்மணி.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் அவர்களிடம் சொத்துக்குவிந்தமை போன்று அவருடைய பாதணிகளும் குவிந்திருந்தன என்று செய்திகள் கசிந்தன.

புகலிடத்தில் வீடுகள் மாறும்பொழுது வீடுகளிலிருக்கும் முதியவர்கள் வேடிக்கையாகச் சொல்லும் ஒரு விடயமும் இருக்கிறது.



வீட்டுச்சாமான்களை ஏற்றுவதற்கு ஒரு ட்ரக் போதும். ஆனால் தங்கள் புத்திரிகளின் விதம் விதமான பாதணிகளை ஏற்றுவதற்கு இரண்டு ட்ரக் வேண்டும். இந்தச் சங்கடத்திற்காகவே பல புத்திரிகள் தமது பழைய பாதணிகளை சல்வேசன் ஆர்மி முதலான தொண்டு நிறுவனங்களுக்குக் கொடுத்து விடுவார்கள். அவற்றில் சில சோடிகள் ஒரு நிகழ்ச்சிக்கு மாத்திரம் பாவிக்கப்பட்டதாகவும் இருக்கும்!

இலங்கையில் சுனாமி கடற்கோள் அனர்த்தம் வந்தவேளையில் நிவாரணப் பொருள்கள் சேகரித்தபொழுது, பாவித்த உடைகளுடன் பெண்கள் அணியும் ஏராளமான பாதணிகளும் வந்து குவிந்தன.

எனது பாட்டி சொல்லித் தந்த ஒரு உருவகக் கதையில் வரும் ஒரு வீட்டில் வளரும் பசுவுக்கும் நாய்க்கும் இடையே வாக்குவாதம் வரும். இறுதியில் அங்கும் பாதணி வந்துவிடும்.

அந்தச் சின்ன வயதில், பசுவும் நாயும் பேசிக்கொள்ளுமா...? என்று நான் கேட்கவில்லை. பாட்டியிடம் கதை கேட்கும் ஆவல்தான் இருந்தது. பசு வீட்டில் கிடைக்கும் வைக்கோல், புல், புண்ணாக்கு உண்டு பாலைத் தருகிறது. நாயோ வீட்டு எஜமான் தரும் உணவை உண்டு வீட்டைக்காக்கிறது.

வீட்டுக்கு இவ்வாறு உதவும் இரண்டு மிருகங்களுக்கும் இடையே யார் உயர்ந்தவர்...? என்ற போட்டி வாதமாக உச்சம் பெறுகிறது. தான் கோயில்களில் சிலையாக வணங்கப்படுவதாகவும் கோமாதா பூசை தனக்கு நடப்பதாகவும் தான் தரும் பால் அபிசேகத்திற்கும் பயன்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் தயிர், மோர், வெண்ணெய், நெய் பற்றியெல்லாம் பெருமையடித்துக் கொள்கிறது பசு.

என்னதான் இருந்தாலும், நீ இறந்துவிட்டால் உனது தோலில்தானே செருப்புத் தைத்து பாதணி அணிகிறார்கள். ஆனால் அந்தப் பாதணியுடன் கோயிலுக்குள் செல்ல முடியாதுதானே...? என்று நாய் பசுவை ஏளனம் செய்கிறது.

உடனே பசு, தான் வாழ்ந்தாலும் மக்களுக்கு நன்மை. இறந்தாலும் நன்மை எனச்சொல்லி ஏய்... நாயே... நீ செத்தால் யாருக்கும் எந்தப்பயனும் இல்லை. இந்த மக்கள் நன்றி மறப்பவர்களையும் நன்றி கெட்ட நாயே என்றுதான் அழைக்கிறார்கள். எனது தோலில் செருப்பாவது கிடைக்கும். உனது தோல் எதற்குமே உதவாது எனச் சொல்லும்.

இவ்வாறு பசுவின் நாயின் வாதங்கள் தொடரும்.

நன்றியுள்ள நாயையும் சில சந்தர்ப்பங்களில் மனிதர்களை திட்டுவதற்கும் பயன்படுத்துவது போன்று மக்களுக்கு பல வழிகளிலும் உதவி வரும் பாதணிகளையும் தமக்குப் பிடிக்காதவர்களை தாக்குவதற்கும் பாவிக்கும் மனிதர்கள் இந்த உலகில் வாழ்கிறார்கள்.

இனிச் சொல்லுங்கள்..., பாதணிகள் ஆழ்ந்த அனுதாபத்துக்குரியவைதானே. இந்தப் பாதணி மகத்மியம் இன்னும் முடியவில்லை. மேலும் இருக்கின்றது. சொல்கிறேன்.

பல வருடங்களுக்கு முன்னர் சென்னையில் திராவிடக்கழக பகுத்தறிவாளர்கள் – விநாயகர் சிலைக்கும் செருப்பு மாலை அணிவித்து ஊர்வலம் சென்று கைதாகினார்கள். விநாயகர் என்னதான் செய்வார்....? வழக்கம்போல் எல்லாத் திருக்கூத்துக்களையும் அவர் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார்.

இக்காலத்தில் தொழிற்சாலைகளில் பாதணி இன்றி பணியாற்றமுடியாது. பாதணியில்லாமல் இன்றும் பல பின்தங்கிய கிராமங்களில் ஏழை மாணவக் குழந்தைகள் பாடசாலைக்குச் செல்கின்றன. பாதணி குறித்து சில நெஞ்சை உருக்கும் குறும் படங்களும் வெளியாகி விருதுகளும் பரிசுகளும் பெற்றுள்ளன.

இலங்கையில் வடபகுதியில் போர்க்காலத்தில் வெளியான ஒரு குறும் படத்தில் நீண்ட நாளாக பாதணிக்கு ஆசைப்பட்ட ஒரு குழந்தைக்கு தந்தை பாதணி வாங்கி வரும்பொழுது, அந்தக் குழந்தை அடங்காத ஆவலில் ஓடிவரும்பொழுது நிலக்கண்ணிவெடியில் சிக்கி தனது ஒரு காலை இழக்கிறாள்.

தமிழக குறும்படம் ஒன்று, வசனமே இல்லாமல் பாத்திரங்களையும் காண்பிக்காமல், இரண்டு சோடி பாதணிகளை மாத்திரம் காட்சிப்படுத்தி, மறக்கவே முடியாத செய்தியை வழங்கியிருந்தது.

கதை இதுதான்.

ஒரு தனியார் கல்வி நிலையம்.

வெளிவாசலில் பல பாதணிகள். அதில் ஓர் இளம் மாணவியினதும் ஓர் இளம் மாணவனதும் பாதணிகள் தனித்தனியாக இருக்கும். சில நாள்களில் அந்த இரண்டு சோடி பாதணிகளும் அருகருகே கிடைக்கும். மற்றும் ஒரு நாள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக நெருங்கிக் கிடக்கும்.

பிறிதொரு நாள் ஆணின் பாதணி மாத்திரம் கிடக்கும். காட்சிக்கோணம் மாறும். ஓரிடத்தில் மாணவனின் சைக்கிள் வீதியோரத்தில் கிடக்கும். அருகே ஒரு குண்டாந் தடியும் இரத்தக் கறைகளும் காணப்படும். மறுநாள் அந்த கல்வி நிலைய வாசலில் ஆணின் பாதணிகளும் பெண்ணின் பாதணிகளும் இல்லை. வசனமே இல்லாமல் ஆழ்ந்த செய்தியுடன் குறும்படம் முடியும்.

எனவே பாதணிகள் காவிய நயம் மிக்கவை. அதனையும் தமக்குப் பிடிக்காதவர்களை தாக்குவதற்குப் பயன்படுத்துபவர்கள் வாழ்க்கையில் சாதிப்பது என்ன...?

மாற்றுக்கருத்துக்கு எதிர்வினையாற்றுவதுதான் ஜனநாயக மரபு. அந்த ஜனநாயகம் மீறப்படும்பொழுது அராஜகம் தான் தலைதூக்கும். இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகரைத் தனது பாதணியால் தாக்கிய அந்த பிரபாகரன், இலங்கையிலிருந்து சென்றவர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அகதிகள் தொடர்பான கருத்தரங்கில் அவர் முன்யோசனையுடன், பெயர் பதிவு செய்துகொண்டுதான் அந்த மண்டபத்தில் பிரவேசித்துள்ளார்.


அதிதீவிரவாதம் அடக்குமுறைக்குத்தான் வழிகோலும் என்றார் மேதை லெனின். இனி சென்னையில் தஞ்சமடைந்திருக்கும் இலங்கை அகதிகள் மீது பாதுகாப்புத்துறையும் புலனாய்வுத் துறையும் தனது கழுகுப்பார்வையை தான் தொடரும் என்பது எதிர்பார்க்கப்படுவதுதான். ஏற்கனவே, இலங்கையர்களினால் தமிழ்நாட்டில் படுகொலைகள் உட்பட வேண்டத்தகாத சம்பவங்கள் நடந்து விட்டன.

பாண்டிபஜாரிலிருந்து, ஆளைமேடு தொடங்கி, கோடம்பாக்கம், ஸ்ரீபெரும்புதூர் என்று பல வன்முறைகள் இலங்கையர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர இலங்கையிலிருந்து சென்ற யாத்திரிகர்கள் மீதும் வன்முறைகள் தொடர்ந்தன.

ஏற்கனவே இந்திய – இலங்கை மீனவர்களுக்கிடையே ஆரோக்கியமான உறவு இல்லை. சிறைப்பிடிப்பும் – விடுவிப்பும் என்று மீனவர் வாழ்வு கண்ணீரில் கரைகிறது. கடலை நம்பி பிறந்த அவர்களைக் கண்ணீரில் மிதக்க வைத்துக்கொண்டிருக்கின்றன இரண்டு தேசங்களும்.

இந்தப் பின்னணியில் செருப்பினால் செய்தி சொல்ல முனையும் தீவிரவாத கொழுந்துகளை உசுப்பேத்தாமல் நிதானமாக இயங்கத் தூண்டுவது காலத்தின் தேவை. இந்த 21ஆம் நூற்றாண்டில் உலகெங்கும் பரவியிருக்கும் கொடிய நோய்தான் நினைவுமறதி. இந்த நோய்க்கு அமெரிக்க முன்னாள் அதிபர் றேகன் முதல் நோபல் விருது பெற்ற கப்ரியேல் கார்ஸியா மாக்வெஸ் உட்பட புகழ் பெற்ற பலரும் சாதாரண ஏழை மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். நோய்கள் ஏழை பணக்காரன், படித்தவன் – பாமரன் என்று பாகுபடுத்தி வருவதில்லை.

இந்த நினைவுமறதி நோயினால் பாதிக்கப்பட்டவர்களை வெளியே தனித்து அனுப்புவதற்கும் உறவினர்கள் விரும்புவதில்லை. அப்படி இருந்தும் அத்தகைய நோயாளிகள் தமது பழைய நினைவுகளில் மூழ்கி வெளியே புறப்பட்டுச் சென்று திரும்பிவருவதற்கும் வழிதெரியாமல் அலைந்த செய்திகளையும் அறிவோம்.



இந்த நவீன உலகில் அதற்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்படும் அதே வேளையில், அத்தகைய நோயாளர்களை இலகுவாக தேடிக்கண்டுபிடிக்கவும் அதற்கென விசேடமாக தயாரிக்கப்பட்ட பாதணிதான் சமகாலத்தில் உதவும் என்றும் மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

நினைவுமறதி நோயால் பாதிக்கப்பட்டவருக்கு குறிப்பிட்ட பாதணியான சப்பாத்தை அணிவித்துவிட்டால், உறவினர்கள் கவலையின்றி இருக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. அந்தப்பாதணியை அணிந்திருப்பவர் எங்கே இருக்கின்றார் என்பதை செய்மதி ஊடாக உறவினர்கள் தமது கணினியிலும் கைத்தொலைபேசியிலும் அறிந்து கொள்ள முடியுமாம்.

பாருங்கள்... இன்றைய நவீன உலகில் விஞ்ஞானிகள் மக்களின் நலன் கருதி என்னவெல்லாம் கண்டுபிடிக்கிறார்கள். இந்தத் தகவலை புகலிடத்தில் பிறந்த ஓர் ஆரம்பப் பாடசாலைக்குச் செல்லும் ஒரு தமிழ்க் குழந்தையிடம் சொன்னபோது, உங்களைப்போன்ற தமிழ் மக்கள் அவ்வாறு ஏதும் புதிதாக கண்டுபிடித்துள்ளனரா...? எனக் கேட்டது.

ஆமாம்.... கண்டுபிடித்துள்ளார்கள். அதன் பெயர் சாதி என்றேன்.

அது எதற்கு உதவும்...? என்ற கேள்வியை அந்தக் குழந்தைக் கேட்ட பொழுது என்னிடம் பதில் இல்லை! ★

# சட்டத்தை மீறினாரா மங்கள?



மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையை நிதி அமைச்சர் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தினார் எனக் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

நிதி அமைச்சரின் இந்தச் செயற்பாடு மோசமான முன்னுதாரணம் எனக்கூறிய அவர், நிதிச் சட்டத்தின்படி, மத்திய வங்கியின் அறிக்கையானது எந்தவொரு நிறுவனத்திற்கும் வெளியிடப்படுவதற்கு முன்பு, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதே எனச் சுட்டிக்காட்டினார்.

ஆனால், நிதி அமைச்சர் இதனை மீறி ஒரு வாரத்தின் பின்னரே நாடாளுமன்றத்தில் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். இந்த விடயமானது நிதிச் சட்டத்திற்கு முரணானது எனவும் பந்துல குணவர்தன குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், இந்தச் சம்பவம் குறித்து உரிய முறையில் ஆய்வு செய்து அந்த அறிக்கையின் பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குமாறு சபாநாயகர் கரு ஜயசூரிய நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சு.க. மத்திய குழு 17 இல் கூடுகிறது

கொழும்பு, மே 13

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அரசில் தொடர்ந்தும் இணைந்து செயற்படுவது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்துப் பதவிகளிலும் மறுசீரமைப்புடன், கட்சியின் கட்டமைப்பு முழுமையாக மாற்றியமைக்கப்படும் எனவும் சந்திம வீரக்கொடி குறிப்பிட்டார்.

17ஆம் திகதியின் பின் கட்சியுடன் கலந்துரையாடல்களை நடத்தி ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான முனைப்புகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# ஜனாதிபதி ஈரான் பயணம்

கொழும்பு, மே 13

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ விஜயத்தினை மேற்கொண்டு நேற்றுச் சனிக்கிழமை ஈரான் பயணமானார்.

ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானியின் விசேட அழைப்பையேற்று ஈரான் செல்லும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கைக்கும் ஈரானுக்குமிடையிலான பொருளாதார, வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் இலங்கையில் ஈரானின் முதலீடுகளைப் பலப்படுத்துவது தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தவுள்ளார்.

மேற்காசிய நாடான ஈரான் பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயுத் துறையில் உலகப் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. மேலும், இலங்கையின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஈரான் பங்களிப்பு வழங்குவதோடு, இலங்கையின் எண்ணெய் சுத்திகரிப்பு துறையிலும் ஈரான் முதலீடுகளைச் செய்துள்ளது.

இதன் மூலம் இலங்கையில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமிய மின்சக்தித் தேவையை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் ஒன்றாகவும் ஈரானும் உள்ளது.

அத்தோடு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரூஹானிக்குமிடையிலான உத்தியோகபூர்வச் சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது. (ஐ)

# கண்டி வன்முறை குறித்து ஜனாதிபதிக்கு அறிக்கை

## மனித உரிமை ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மே 13

கண்டி திகன பகுதியில் முஸ்லிம்கள் மீது முன்னெடுக்கப்பட்ட வன்முறைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி இறுதியில் பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் தீபிக உடகம தெரிவித்தார்.

இந்த வன்முறைகள் ஏன் இடம்பெற்றன?, யார் இதனைத் தூண்டினார்கள்?, அரச அதிகாரிகளும் இதில் ஈடுபட்டனரா? என்ற கோணங்களில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கண்டியில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் இதுவரை சுமார் 100 பேர் தங்கள் வாக்குமூலங்களை மனித உரிமை ஆணைக்குழு முன்னிலையில் நேரடியாகப் பதிவு செய்துள்ளனர்.

கண்டி வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக சி.சி.ரி.வி. பதிவுகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கோரியுள்ளது.

எங்களுக்கு 151 பேர் எழுத்து மூலம் முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ளனர். அவர்களில் 100 பேரிடம் நேரில் பார்த்த சம்பவங்கள் தொடர்பான வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளோம்.

கண்டி வன்முறைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டவர்களும் ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகியுள்ளனர்.

அனைத்துத் தகவல்களையும், தரவுகளையும் ஆராய்ந்த பின்னர் நாங்கள் அறிக்கையொன்றைத் தயாரிப்போம். எங்கள் அறிக்கையில் பரிந்துரைகளும் காணப்படும். இதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிப்போம் - என்றார். (ஐ)

# எரிபொருள் விலையுயர்வால் மாட்டு வண்டியில் பயணம்



கொழும்பு, மே 13

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், தெற்கு மாகாண சபை உறுப்பினர் சாம்பு ஆரியவன்ச மாட்டு வண்டியில் ஹிக்கடுவ பிரதேச செயலாளர் அலுவலகம் வரை சென்றார்.

எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் இந்தப் போராட்டம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை ரத்கம சந்தியிலிருந்து ஹிக்கடுவ பிரதேச செயலாளர் அலுவலகம் வரை இடம்பெற்றிருந்தது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில், ஹிக்கடுவ நகர சபை உறுப்பினர்கள் மற்றும் ரத்கம பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

'இதுவா நல்லாட்சி', 'கழுத்தை நெரிக்கும் ஆட்சி' போன்ற வாசகங்களை மாட்டு வண்டியிலும், சைக்கிள்களிலும் பொருத்தி வித்தியாசமான முறையில் எதிர்ப்பு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்திய ராணுவத் தளபதி இன்று இலங்கை வருகை



கொழும்பு, மே 13

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் 7 நாட்கள் உத்தியோபூர்வச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இன்று இலங்கை வருகிறார்.

இலங்கைக்கு வரும் இந்திய இராணுவத் தளபதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முப்படைகளின் தளபதிகளைச் சந்திக்க உள்ளார்.

மேலும் திருகோணமலை மற்றும் தியத்தலாவை பாதுகாப்புத் தளங்களுக்கும் அவர் விஜயம் செய்ய உள்ளார்.

இந்திய இராணுவத் தளபதியின் இலங்கை விஜயமானது தெற்காசிய வலயத்தின் பாதுகாப்புத் துறைசார் இராஜதந்திரத்தின் முக்கிய விடயமாகவே கருதப்படுகின்றது.

பட்டுப்பாதைத் திட்டத்தின் ஊடாகத் தெற்காசிய நாடுகளில் தனது பொருளாதார ஆதிக்கத்தை வலுப்படுத்தி வரும் சீனா, இலங்கையின் தெற்குக் கடல் பரப்பின் ஊடாகத் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தி வருகின்றது.

பூகோளப் பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கான வாய்ப்பாகவும் பட்டுப்பாதைத் திட்டம் காணப்படுவதாகவும் தெற்காசியாவில் இலங்கை இந்தத் திட்டத்தின் ஊடாகச் சிறந்த பலன்களை அடையும் எனவும் சீனா கூறியுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத்தின் இலங்கை விஜயம் முக்கியமானதாக அவதானத்தில் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழ்ப் பொலிஸார் ஒருவர் உடனடியாக இடமாற்றம்

## வாள்வெட்டுக் குழுவுடன் தொடர்பா?

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வாள்வெட்டுக் கும்பல்களுடன் தொடர்புகளைப் பேணி, பொலிஸாரின் விசாரணை நகர்வுகள் தொடர்பான தகவல்களை அவற்றுக்கு வழங்கினார் என்ற குற்றச்சாட்டையடுத்தே இந்த இடமாற்றத்துக்கு உத்தரவிட்டார் வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் வாள்வெட்டு வன்முறைகளை கட்டுப்படுத்த கடந்த மாத இறுதியில் பொலிஸாரின் விடுப்புகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன. அத்துடன் வாள்வெட்டு கும்பல்களை இலக்கு வைத்துப் பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டனர்.

எனினும் பொலிஸார் வருவதை முன் கூட்டியே அறிந்து கொள்ளும் சந்தேகநபர்கள், இடமாறிவிடுவார்கள். அவர்களுக்கு பொலிஸிலிருந்தே தகவல் வழங்கப்படுவதாகச் சந்தேகம் கொண்ட பொலிஸார், அது தொடர்பில் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்தனர்.

அது தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் குழு விசாரணை நடத்தியது. வாள்வெட்டுக் கும்பல்களுக்குப் பொலிஸ் இரகசியத் தகவல்களைத் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தொலைபேசி ஊடாக வழங்கி வந்தமை விசாரணையில் அறியவந்தது.

அதனையடுத்து கடந்த 9ஆம் திகதி புதன்கிழமை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் அவர் மன்னாருக்கு இடமாற்றம் செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பொலிஸ் உத்தியோகத்தரான அப்பு என்பவர் தம்மை திருட்டுக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ளுமாறு பயமுறுத்துகிறார் எனச் சந்தேகநபர்கள் இருவர் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றின் அண்மையில் தெரிவித்திருந்தனர்.

பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிரான குற்றச்சாட்டுத் தொடர்பில் சந்தேகநபர்களுடைய வாக்குமூலத்தைப் பெற்று மேல் நடவடிக்கைக்காக மூத்த பொலிஸ் அத்தியட்சருக்கு அனுப்பி வைக்குமாறு மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

# சர்வதேச நாடாளுமன்ற சங்கத்திடம் சம்பந்தனுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, மே 13

எதிர்க்கட்சித் தலைவர் குறித்து சர்வதேச நாடாளுமன்றச் சங்கத்திடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜெயக்கொடி தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த 93 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 70 பேர் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். எனினும், 16 பேர் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளமை பிரச்சினைக்குரிய விடயம் எனக் கூட்டு எதிரணியினர் தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பில் சர்வதேச நாடாளுமன்றச் சங்கத்துக்கு உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்யவுள்ளதாகக் கூட்டு எதிரணி கூறியுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.